பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspap

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 28 வெள்ளிக்கிழமை (10.04.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:135

# முல்லை. பாதுகாப்பு வலயத்தை முற்றுகையிட்டனர் படையினர்!

## நான்கு முனைகளிலும் முன்நகரும் முயற்சி ஆரம்பம்

கொழும்பு, ஏப்ரல் 10

புதுக்குடியிருப்புப் பகுதியில் அரசாங்கத்தினால் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்ட பிரதேசத்தை இராணுவத்தினர் நேற்று முற்றுகையிட்டனர்!

மக்கள் பாதுகாப்பு வலயத்தில் நான்கு முனைகளையும் சுற்றிவளைத்துள்ள நிலையில் இராணுவத்தினர் அப்பகுதியை நோக்கி முன்நகர்வு முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாகத் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் நேற்று மாலை அறிவித்தது. (16 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஏப்.10

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறும் என்று யாழ். (16 ஆம் பக்கம் பார்க்க)

## திங்கள், செவ்வாயில் ஊரடங்கைத் தளர்த்த இந்துக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.10

தமிழ் -சிங்கள புதுவருடப் பிறப்பு நாளை முன்னி... ...ிர்வரும் 13 ஆம், 14 ஆம் திகதிகள... ...ரடங்கைத் தளர்த்தி உதவுமாறு பலாலி படைகளின் தளபதியி (16 ஆம் பக்கம் பார்க்க)

## இணைத்தலைமை நாடுகளை அவசரமாகக் கூட்டி போர் நிறுத்தத்திற்கு உடன் நடவடிக்கை எடுங்கள்

### நோர்வேயிடம் தமிழ் மக்கள் கோரிக்கை

கொழும்பு, ஏப். 10

இணைத்தலைமை நாடுகளை அவசரமாகக் கூட்டி இலங்கை விடயத்தில் நடவடிக்கை எடுக்குமாறு நோர்வே அரசிடம் அங்கு வாழும் தமிழ் மக்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து இணையத்தளம் வெளியிட்டுள்ள தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

நோர்வே பிரதமரின் அலுவலக வளாகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை காலையில் இருந்து புதன்கிழமை பிற்பகல் 4 மணி வரையான 30 மணித்தியாலங்கள் நடைபெற்ற மக்கள் போராட்டத்தின் போதே நோர்வே அரசிடம் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்களின் (16 ஆம் பக்கம் பார்க்க)

## லண்டனில் இரு தமிழர்கள் சாகும்வரை உண்ணாவிரதம்

லண்டன், ஏப்.10

பிரிட்டனில் தமிழர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களை நடத்திவரும் வெஸ்ட்மினிஸ்டர் பாலம் அமைந்துள்ள பகுதியில்இரு தமிழ் இளைஞர்கள் ஐந்து அம்சக் (16 ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத்தமிழர் குறித்த கொள்கையை இந்தியா மீளாய்வு செய்யக் கோருகின்றனர் புலிகள்

## புதிய அரசிடம் எதிர்பார்ப்பது அதனையே என்கிறார் நடேசன்

கொழும்பு, ஏப்ரல் 10

இந்தியாவில் ஆட்சியமைக்கப்போகும் புதிய ஆட்சியாளர்கள், ஈழத் தமிழர் விவகாரம் தொடர்பான தமது கொள்கையை மீளாய்வு செய்யவேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் எதிர்பார்ப்பு வெளியிட்டிருக்கின்றார்.

ஈழத் தமிழ் உறவுகளுக்காக தமிழகத்தில் ஏற்பட்டிருக்கும் பேரெழுச்சிக்கு தற்போது அ.தி.மு.க. கூட்டணியில் உள்ள தலைவர்களே முக்கிய பங்காற்றியுள்ளனர் என்றும் நடேசன் வரவேற்புத் தெரிவித்திருக்கின்றார்.

இந்தியாவின் 'ஹெட்லைன்ஸ் டுடே' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தி.மு.கவினால் ஈழத் தமிழர்களுக்கு உரிய நிவாரணத்தைப் பெற்றுக்கொடுக்க முடியவில்லையெனக் குற்றம் சாட்டியுள்ள அவர், இது குறித்து மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

தமிழ்நாட்டில் ஈழத் தமிழர் நிலை தொடர்பாக சமீபத்தில் ஏற்பட்டுள்ள எழுச்சிக்கு அ.தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள தலைவர்கள் பங்களிப்புச் செய்துள்ளனர்.

அ.தி.மு.கவின் ஸ்தாபகரான முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். ஈழத் தமிழர் (16 ஆம் பக்கம் பார்க்க)

## இருநூறுக்கும் அதிகமானோர் நேற்று காயமடைந்து வைத்தியசாலையில்

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்

கொழும்பு, ஏப்.10

மோதல்கள் நடக்கும் முல்லைத்தீவுப் பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற மோதல்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை நூறுக்கும் அதிகமாக இருக்கும் என்று தாம் நம்புகிறார் என்று முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார (16 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தையில் 14 தமிழர் கைது

கொழும்பு, ஏப்.10

கொழும்பு, வெள்ளவத்தையில் நேற்றுக் காலை பொலிஸார் நடத்திய தேடுதலில் 14 தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று வியாழக்கிழமை காலை பொலிஸாரின் தேடுதலிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வீதியால் சென்றவர்கள், பலரும் வழிமறிக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இந்த விசாரணையின் போதே 12 தமிழ் இளைஞர்களும் கைதானார்கள் என உறவினர்கள் கூறுகின்றனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்களே கைதானார்கள் எனவும் கூறப்படுகிறது. (அ-சி)

SALE SALE SALE SALE SALE SALE SALE

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு சகல புடைவைகளும் விசேட விலைக்கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.

விற்றுத் தீர்த்தல்

மகா நதி புடைவையகம்

இல. 4, நவீன சந்தை, சாவகச்சேரி.

SALE SALE SALE SALE SALE SALE SALE

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி கனகரத்தினம் வள்ளிப்பிள்ளை



எமது சக ஆசிரியை சுபந்தினி விஜயகுமாரன் அவர்களின் அன்புத் தாயாரும் ஆசிரியர் விஜயகுமாரனின் மாமியாருமாகிய

திருமதி
கனகரத்தினம் வள்ளிப்பிள்ளை

அவர்கள் நேற்று (09.04.2009) வியாழக்கிழமை காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் குழாம்
யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்.

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
சின்னத்தம்பி செல்லையா

தோற்றம் 17*07*1930

மறைவு 19*02*2009

கடந்த 19.02.2009 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு எமக்குப் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்கள், அனுதாபம் தெரிவித்தவர்கள், துண்டுப்பிரசுரம் வெளியிட்டோருக்கும், வெளிநாடு, உள்நாடுகளில் இருந்து தொலைபேசி, தந்தி மற்றும் கடித மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவிப்பதோடு, இன்று (10.04.2009) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி. (84324) குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## சிதம்பரப்பிள்ளை இளையதம்பி (சின்னண்ணை)

மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், சுழிபுரத்தை வசிப்பிடாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை இளையதம்பி (சின்னண்ணை) நேற்று (09.04.2009) வியாழ்க்கிழமை காலமானார்.

அன்னார் தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும் சந்தானபவனின் (E.S.பவன், ஆசிரியர், வட்டு. மத்திய கல்லூரி), பாசமிகு தந்தையாரும், இரட்ணராஜினியின் அன்பு மாமனாரும், பவதாரணியின் (யாழ்ப்பாணக் கல்லூரி) பாசமிகு பேரனும், செல்லையா, கணபதிப்பிள்ளை, நடராசா, வள்ளிப்பிள்ளை, அன்னப்பிள்ளை, சின்னத்தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2009) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது திருப்பரங்குன்றம் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மூளாய் பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய் தெற்கு,
சுழிபுரம்.
தகவல்:
E.S.பவன் (மகன்)

## திரு வேலுப்பிள்ளை நவரட்ணராஜா

(ஓய்வுபெற்ற மின்சாரசபை பொறியியலாளர், யாழ். மாநகர சபை)

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட வே.நவரட்ணராஜா 03.04. 20009 அன்று காலமானார்.

இவர் சபாமணியின் கணவரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் செல்லம்மா ஆகியோரின் மகனும் காலஞ்சென்ற சபாரட்ணம் (பெரிய சபா-புங்குடுதீவு-3) மற்றும் பொன்னம் மாவின் மருமக னும், பரராஜசிங்கம், ராஜசேகரம், வசந்தமலர் ஆகியோரின் சகோதரரும், சிறிகாந்தா, புஸ்பமலர், யோகேஸ்வரன், சர்வானந்தன், மங்கையச்செல்வி (செல்வி), காலஞ்சென்ற சபாராணி மற்றும் காந்திசொரூபன் ஆகியோரின் மைத்துனரும், ராஜ்குமார் (UK), Dr. இந்திரநாத் (NHSL) ஆகியோரின் தந்தையாரும், தேவா (UK), G.கவிதா (மகரம்)ஆகியோரின் மாமனாரும் தயாளி, சச்சின் ஆகியோரின் பேரனு மாவார்.

அன்னாரின் ஈமைக்கிரிகைகள் பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
N.இந்திரநாத்
40-2/4, Rudra mw. Colombo-06

## சனிக்கிழமையிலும் வங்கிச் சேவை

யாழ்ப்பாணம், ஏப்.10

இலங்கை வங்கி நெல்லியடிக் கிளையின் வங்கிச் சேவைகள் சனிக்கிழமைகளிலும் இடம்பெற உள்ளதாக வங்கியின் முகாமையாளர் அறிவித்துள்ளார்.

பொதுமக்களின் நன்மை கருதி பிரதி சனிக்கிழமைகளில் காலை 8.30 மணி முதல் நண்பகல் ஒரு மணிவரை வங்கி திறந்திருக்கும் என்று அவர் அறிவித்தார்.

## விபத்துக்களில் இருவர் காயம்!

வேகமாகச் சென்ற உழவு இயந்திரத்தின் பெட்டியில் அமர்ந்திருந்தவர் தவறி வீழ்ந்ததில் கை முறிந்தது.

இச் சம்பவம் அண்மையில் மறவன் புலோவில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த கே.அருணாசலம் (வயது 57) என்பவர் கை முறிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

மரத்திலிருந்த குரங்கு வீதியில் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது பாய்ந்ததில் நிலை குலைந்து கீழே வீழ்ந்த மோட்டார் சைக்கிளோட்டி காயமடைந்தார்.

இச் சம்பவம் கடந்த வாரம் சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு அருகில் இடம்பெற்றது.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த மயில்வாகனம் விக்னேஸ்வரன் (வயது - 50) என் பவர் உராய்வுக் காயங்களுக்கு இலக்காகி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## வாழ்க்கைப்படி வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப்.10

தென்மராட்சி கிழக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு நேற்று மாத வாழ்க்கைச் செலவுப் படியான 7 ஆயிரத்து 125 ரூபாவினை ஏப்ரல் மாத வேதனத்துடன் வழங்கியதாக சங்கப் பொது முகாமையாளர் சி.தேவகுமார் தெரிவித்தார். (02)

## மரவேலைப் பயிற்சி

இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையினர் சாவகச்சேரியில் மரவேலைப் பயிற்சி நெறியை ஆரம்பிக்கவுள்ளனர்.

பயிற்சிக் காலத்தில் ஊக்கிவிப்புத் தொகை வழங்கப்படுவதுடன் பயிற்சி முடிவில் சான்றிதழும் வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்பும் இரு பாலாரும் தமது சுய விபரம் அடங்கிய விண்ணப்பத்தை கிராமிய தொழிற்பயிற்சி நிலையம், இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, கச்சாய் வீதி, சாவகச்சேரி என்னும் முகவரியில் ஒப்படைக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (59)

## அனுமதி இன்றி மணல் ஏற்றியோருக்கு அபராதம்

யாழ்ப்பாணம் ஏப்.10

அனுமதிப் பத்திரம் இன்றி வாகனத்தில் மணல் ஏற்றி வந்த இரண்டு உழவு இயந்திரசாரதிகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பாலாவி வடக்கு, கெற்பேலி ஆகிய இடங்களைச் சேர்ந்த இருவருக்கு எதிராக கொடிகாமம் பொலீஸார் சாவகச்சேரி நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்த போது இருவரையும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இவ் வழக்குகள் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து இருவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டதுடன் மணலையும் பறிமுதல் செய்யுமாறு உத்தரவிடப்பட்டது. (02)

அறிவகம்
அச்சுவேலி
A/L 2011
கலைப்பிரிவு
ஆரம்பம்
11.04.2009
சனி - 7 மணி

மீண்டும்
பொருளியல்
S.வரதராஜன்
பொருளியற் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

கார் விற்பனைக்கு
வெளிநாடு செல்கின்ற உத்தியோகத்தர் ஒருவரின் பாவனையில் உள்ள 17- தொடரிலக்கமுடைய மிற்சுபிசி கார் உடன்விற்பனைக்குண்டு.
தொடர்பு : எஸ்.இராமலிங்கம்
6 வரை மட்டும் இதுவே இறுதித்தினமாகும்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கனகரத்தினம் வள்ளிப்பிள்ளை



விடத்தற்பளையைப் பிறப்பிடமாகவும் கண்டிவீதி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வள்ளிப்பிள்ளை கனகரத்தினம் நேற்று (09.04.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் அன்பு மனைவியும் சுபாஸ் சந்திரபோஸ் (கிராம உத்தியோகத்தர், ஜே/327, கொடிகாமம் மத்தி), சுபாஸ்கரன் (ஆசிரியர், யாழ். மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்), சுபந்தினி (ஆசிரியை, யாழ்.கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வேணுகா (ஆசிரியை, யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி), குணவதி (ஆசிரியை, யாழ். மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்), விஜயகுமாரன்(ஆசிரியர், கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும், முத்துப்பிள்ளை காலஞ்சென்ற தெய்வானைப் பிள்ளை மற்றும்நாகலிங்கம், குட்டித்தம்பி, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கீர்த்தன், திவானன், கஜானன், லதுஷன், துவாரகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2009) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி, கண்டி வீதி,
கொடிகாமம். (84320)
தகவல்:
சுபாஸ்சந்திரபோஸ் (மகன்).

## முருகையா செல்லம்மா [வல்லை வீதி, சங்கானை]

அச்சவேலி, தம்பாலையைப் பிறப்பிடமாகவும் மடத்[illegible], மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் தற்போது வல்லை வீதி, சங்கானையில் வசித்து வந்தவருமாகிய முருகையா செல்லம்மா (07.04.2009) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் முருகையாவின் அன்பு மனைவியும் நகேஸ்வரி, தேவேஸ்வரி, தனேஸ்வரி (ஆசிரியை, அளவெட்டி றோ.க.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயும், அமரர் செல்லத்துரை மற்றும் தில்லைநாராயணன், புவனேந்திரன் (சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்) ஆகியோரின் அன்பு மாமியும் முகுந்தன் (லண்டன்), நவநீதன் (இத்தாலி), மகிந்தன் (இத்தாலி), காங்கேயவாணி(கொழும்பு), சஜீவன் (சுவிஸ்); தனுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சுலக்ஷ்மன், அபிஷனன் (லண்டன்), பிரணவன்(கொழும்பு) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(10.04.2009)வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வல்லை வீதி,
சங்கானை.
தகவல்:
பிள்ளைகள், மருமக்[illegible]

## கந்தையா பொன்னம்பலம்



காரைநகர், தங்கோடை வாரிவளவை பிறப்பிடமாகக் கொண்டவரும் கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட நாத்தாண்டியா வர்த்தகரான நமசிவாயம் என அழைக்கப்படும் கந்தையா பொன்னம்பலம் 08.04. 2009 புதன்கிழமை கனடாவில் இறைவனடி எய்தினார்.

இவர் கந்தையா கணவதிஅம்மாவின் இளைய புதல்வனும் மனோன்மணியின் அருமைக் கணவரும், ராதாகிருஸ்ணன் (ராதா), நடனசபேசன் (றூபன்), விஜயலலிதா (விஜயா), ஜெயலலிதா (ஜெயா), கேமசபேசன் (கேமா), சிவலலிதா ஆகியோரின் அருமைத் தந்தையும் மஞ்சுளா, சண்முகலிங்கம், விக்னராசா, யாழினி, வரதராசா, ஆகியோரின் மாமனாரும், சதாசிவம், தெய்வானைப்பிள்ளை, காலஞ்சென்றவரான வைத்திலிங்கம் மற்றும் சோமசுந்தரம், காலஞ்சென்ற பாக்கியம் ஆகியோரின் அருமைச் சகோதரனும், பிரவீனா, மயூரன், சங்கவி, மதூசன், பவித்திரா, ராகவி, கிருயாணி, யதூசன், பிரணவன், லக்சிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
0014164006705
தகவல்:
மனைவி, பிள்ளைகள் (கனடா)

## தம்பையா செல்வராசா

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா செல்வராசா நேற்று( 09.04. 2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மங்களேஸ்வரியின் (ராணி) அன்புக் கணவரும், செல்வறூபி (ஜேர்மனி), செல்வறெயினா (லண்டன்), செல்வரூபன் (கனடா), செல்வசசீபன் (திருகோணமலை), செல்வமதீபன் (குவைத்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ஜெயக்குமார் (ஜேர்மனி), நகுலேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (10.04.2009) வெள்ளிக்கிழமை நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 4 மணியளவில் மல்லாகம் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மல்லாகம்
தகவல்:
செல்வசசீபன் (கோபி, மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## புலம்பெயர் ஈழத் தமிழரின் போராட்டங்கள்

இலங்கையில் நடைபெறும் போரை நிறுத்தி வன்னியில் உள்ள இரண்டு லட்சத்துக்கும் அதிகமான தமிழ்ப் பொது மக்களைச் சாவிலிருந்து - இன அழிவிலிருந்து- காப்பாற்றவேண்டும். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை - உந்துதலை - சர்வதேசம் உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்று கோரி உலக நாடுகள் பலவற்றிலும் ஆர்ப்பாட்டங்களும் வழி மறிப்புப் போராட்டங்களும் கடந்த நான்கு நாள்களுக்கும் கூடுதலாக நடைபெற்று வருகின்றன.

மேற்குலக நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழ் உறவுகள், ஆயிரம் ஆயிரமாகத் திரண்டு இந்தப் போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். வன்னியில் வாழும் தமது உறவுகளின் உயிர்களைக் காப்பாற்றவேண்டும் என்ற பாச உணர்வோடு, சர்வதேசத்தின் கண்களைத் திறக்கச் செய்யும் பொருட்டு பல இடர்கள், இடுக்கண்கள் மத்தியிலும் சாத்வீக வழிப் போராட்டங்கள் தொடர்கின்றன.

மேற்குலக நாடுகள் ஜனநாயகத்தை மதிப்பவை. மற்றவர்களின் உரிமைகளைப் பேணுவதில் அதீத அக்கறையும் கரிசனையும் காட்டுபவர்கள் அந்த நாடுகளில் வாழும் மக்கள். அந்தந்த நாடுகளின் அரசு கள் மனம் கொண்டால், வன்னியில் ஈழத் தமிழர்கள் அழிந்து போவதைத் தடுக்க அழுத்தம் கொடுத்து உதவக்கூடியன. அதற்கான அரசியல் பலம் அந்த நாடுகளிடம் உள்ளுறைந்து உள்ளது.

ஒரு நாடு என்று இல்லாமல் பல நாடுகள் சேர்ந்து தமிழர் படுகொலையை நிறுத்த அழுத்தம் கொடுத்தால் அசையா முகியாக விளங்கும் இலங்கை அரசு தனது நிலைப்பாட்டை தளர்த்த வழிபிறக்கும் என்ற நம்பிக்கையோடு, புலம்பெயர் ஈழத் தமிழ் உறவுகள் தமக்குப் புகலிடம் கொடுத்து ஆதரித்த நாடுகளின் அரசுகளிடம் தமது வேண்டுதல்களை ஒப்புவித்து வருகிறார்கள். இந்த வகையில் பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, கனடா, நெதர்லாந்து, நோர்வே, சுவிற்சர்லாந்து என்று பல நாடுகளுக்கும் புலம்பெயர் தமிழர்களின் போராட்டங்கள் பரந்து படர்ந்து செல்கின்றன.

புலம்பெயர் தமிழர்கள் தத்தமது நாடுகளில் ஒன்றித்து அணிதிரண்டு, மனம் ஒன்றி நடத்தும் சாத்வீகப் போராட்டங்களுக்கு ஆங்காங்கே சட்டம் ஒழுங்கைப் பேணும் அதிகாரிகள் சிறு சிறு இடைஞ்சல்களை, இடுக்கண்களை ஏற்படுத்தி வருகிறார்கள் என்பது மறுபக்கம்.

ஆனால், ஒரு நாள், இரண்டு நாள் என்றில்லாமல் தாம் நடத்தும் தொடர் போராட்டம் அந்தந்த நாட்டு அரசுகளின் - ஆட்சியாளர் மற்றும் எதிர்த்தரப்பினரின்- மனங்களை இலங்கையில் போர்நிறுத்தம் செய்ய வேண்டும் என்று சிந்திக்கத் தூண்டும், செயற்பட வைக்கும் என்ற நம்பிக்கையுடனேயே பல இடுக்கண்கள் மத்தியிலும் தொடர்ந்து போராட்டங்களை நடத்திவருகிறார்கள் புலம்பெயர் மக்கள் என்பது ஊகிக்கப் படக் கூடியதே.

சிறு துளி பெரு வெள்ளம். அந்தந்த நாடுகளின் மக்கள் பிரதிநிதிகள் சபை முன்றல்கள், சக்தியுள்ள, செல்வாக்கு நிறைந்த அமைச்சர்களின் அலுவலகங்களின் முன்றல்கள், பொதுச் சபைகளின் மண்டபங்களின் முன்றல்கள் என்று கவனத்தை ஈர்க்ககூடிய இடங்களில் நடத்தப்படும் சாத்வீகப் போராட்டங்கள் ஏதோ ஒரு வகையில் தமது தமிழ் இன அழிவை தடுப்பதற்குத் தூண்டுதல் அளிக்கும் என்ற நோக்கத்தை அடைய உதவும், என்ற நம்பிக்கையுடனேயே புலம்பெயர் தமிழர்களின் போராட்டங்கள் பெரிய அளவில் நடைபெறுகின்றன. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும். மகஜர்கள், மனுக்கள் கொடுப்பதால் ஏற்படக்கூடிய விளைவுகளை விடவும், மக்கள் தங்களைத் தாங்களே வருத்தம் போராட்டங்கள் மற்றும் சாத்வீக வழிப் போராட்டங்கள் ஊடாக மனம் நெகிழ்ந்து விடுக்கும் கோரிக்கைகள் சாத்தியமான விளைவுகளைத் தரும்; வீண் போவது குறைவு.

அவற்றின் பெறுபேறுகள், பலாபலன்கள் பயன்தர மாட்டா என்று இத்தருணத்தில் எண்ணுவதோ, மனம் தளர்வதோ ஆகாது. அந்தந்த நாட்டுச் சட்டங்களை மீறாது, அவற்றையும் பேணி, தமது நியாயமான கோரிக்கைகளை வெளிப்படுத்துவதால் நட்டம் எதுவும் உண்டாகப்போவதில்லை. உணர்வு ரீதியாக, உரிய வழிசென்று நியாயம் கேட்பது பயன்தரும் என்ற நம்பிக்கையுடன், வன்னியில் தமது உறவுகள் செத்து மடிவதை நிறுத்துமாறு கோரி நடத்தப்படும் சாத்வீகப் போராட்டங்கள் தொடர்ந்தால் அவை பயனற்றதாகிவிடா.

வன்னியில் செத்து மடியும் தமிழர்களுக்கு அனுதாபம் தெரிவித்து ஆலயங்கள், தேவாலயங்களில் இங்கு பெரிய அளவில் விசேட பிரார்த்தனைகளை நடத்துவதே கடினமான காரியமாக இருக்கும்போது -

புலம்பெயர் தமிழர்கள் பல இடுக்கண்கள் மத்தியிலும் நடத்தும் தொடர் சாத்வீகப் போராட்டம், சிறுதுளி பெரு வெள்ளமாக, ஏதோ ஒரு வகையில் வெளி நாட்டவர்களின் நாடி ந்ரம்புகளை சிறு துடிப் படையவேனும் வைக்க உ தவும் என நம்பலாம்.

# இரசாயன ஆயுதத் தாக்குதல்களா? அடியோடு மறுக்கிறது இராணுவம்!

கொழும்பு, ஏப்.10

வன்னியில் விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் இராணுவத்தினர் ஒரு போதும் இரசாயன ஆயுதங்களைப் பாவிக்கவில்லை என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இராணுவத்தினர் சமீபத்தில் இரசாயன ஆயுதங்களை பர்வித்தனர் என வெளியான செய்திகளை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர்உதய நாணயக்கார அடியோடு நிராகரித்தார். அத்துடன் பாதுகாப்பு வலயம் மீது படையினர் ஷெல் தாக்குதல் நடத்த வில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு வலயம் மீது படையினர் புதன்கிழமை மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் 129 பொது மக்கள் கொல்லப்பட்டனர் என இணையத்தளங்களில் வெளியாகியுள்ள செய்தியை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார நிராகரித்தார்.

புதன்கிழமை நடந்த தாக்குதலில் குழந்தைகள் பராமரிப்பு நிலையத்தின் மீது ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததால் பெருமளவு குழந்தைகள் கொல்லப் பட்டதாக இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இதேவேளைபுதுக்குடியிருப்பில்இரசாயன ஆயுதங்களை படையினர் பயன்படுத்தினர் என வெளியாகியுள்ள தகவல்களை இராணுவம் உறுதியாகவும் கடுமையாகவும் நிராகரித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிக் கட்டத்தில் பாதுகாப்பு வலயத்திற்கு அருகில் இருக்கும் போது இவ்வாறான இரசாயன ஆயுதங்களை பயன்படுத்த வேண்டிய அவசியமில்லையென்றும் மேலும் இவ்வாறான ஆயுதம் பயன்படுத்தப்பட்டிருந்தால் பொது மக்களுக்கும் இராணுவத்திற்கும் சேதமேற்பட்டிருக்கும் எனவும் இராணுவம் சுட்டிக்காட்டியுள்ளது.

## ஜே.வி.பி. உறுப்பினரின் கொலை; பியசிறி எம்.பியிடம் வாக்குமூலம்

கொழும்பு, ஏப். 10

இம்மாதம் ஆறாம் திகதி சுட்டுக் கொல்லப்பட்ட ஜே.வி.பி. உறுப்பினரின் கொலை தொடர்பாக தேசிய சுதந்திர முன்னணியின் எம்.பியான பியசிறி விஜயநாயக்கவிடம் வாக்குமூலம் ஒன்றைப் பொலிஸார் பெறவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கொலையை விமல் வீரவன்ஸவின் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியே செய்தது என்று ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியுள்ளது.

தேசிய சுதந்திர முன்னணி எம்பி பியசிறி விஜயநாயக்கவின் கப் வாகனமே இக்கொலைக்குப் பயன்படுத்தப்பட்டது என்றும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இக்குற்றச்சாட்டு தொடர்பாகவே பியசிறி விஜயநாயக்கவிடமிருந்து வாக்குமூலத்தைப் பெறவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# போக்குவரத்துச் சபை ஊழியர்கள் நாடு முழுவதும் வேலை நிறுத்தம்

கொழும்பு, ஏப். 10

கடந்த மூன்று நாள்களாக இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்கள் ஆரம்பித்துள்ள வேலைநிறுத்தப் போராட்டம் இப்போது நாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தென்பகுதிகளிலும் அம்பாறை, திருகோணமலை உள்ளிட்ட பல பகுதிகளிலும் உள்ள 49 பஸ் டிப்போக்களில் இந்த வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாகப் புதுவருடத்திற்காகத் தத்தமது ஊர்களுக்குச் செல்லும் மக்கள் கடும் சிரமத்தை எதிர் நோக்கியுள்ளனர்.

கொழும்பு புறக்கோட்டை பிரதான பஸ் நிலையத்தில் நேற்று வெளியூர்ப் பயணிகள் பஸ்களுக்காக நீண்ட வரிசையில் காத்து நின்றமையை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

இருப்பினும், புதுவருடத்தையொட்டி விசேட பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று இலங்கை போக்குவரத்துச் சபையும், அதேபோல் விசேட ரயில் சேவைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன என்று ரயில்வே திணைக்களமும் தெரிவித்தன.

சம்பள நிலுவை உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்தே இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்கள் இந்த வேலைநிறுத்தத்தை மேற்கொண்டு வருகின்றனர். தமது கோரிக்கை [illegible]றும்வரை வேலை நிறுத்தம் தொட[illegible]ம் என்று அவர்கள் தெரிவித்தனர். (அ-சி)

# ஈழத்தமிழினம் அழிந்தால் தமிழகம் கொந்தளிக்கும் என்று எச்சரிக்கிறார் வைகோ

சென்னை, ஏப். 10

இலங்கையில் தமிழர்களும், விடுதலைப் புலிகளும் முற்றிலும் அழிக்கப் படும் நிலை ஏற்பட்டால் தமிழகம் கொந்தளிக்கும் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து, இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் சென்னையில் கடந்த புதன்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதன் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் தலைமை வகித்தார்.

அதில் பங்கேற்று உரைநிகழ்த்திய போதே வைகோ இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இலங்கைத் தமிழர்களைக் கூண்டோடு ஒழிக்க திட்டமிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பகிறது. விஷக் குண்டுகளை வீசி தமிழ் மக்களைப் படுகொலை செய்யும் ஆபத்து அங்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் போரை நிறுத்துவது குறித்து கடந்த 6 மாதங்களாக ஒரு வார்த்தை கூடப் பேசாத காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, இப்போது முதல்வர் கருணாநிதிக்கு கடிதம் எழுதியுள்ளார். போரை நிறுத்த ராஜபக்ஷவுக்கு கடிதம் எழுதாமல் கருணாநிதிக்கு எழுதுவது ஏன் எனத் தெரியவில்லை. அக்கடிதம் கூட கருணாநிதியின் வேண்டுகோள்படிதான் எழுதப்பட்டிருக்க முடியும்.

இலங்கையில் தமிழ் மக்களும், விடுதலைப் புலிகளும் முற்றாக அழிக்கப் படும் சூழல் ஏற்பட்டால் தமிழகம் கொந்தளிக்கும். இந்தியாவின் இறையாண்மை பாதிக்கப்படும். தமிழக இளைஞர்களைக் கட்டுப்படுத்த இயலாத நிலைமை ஏற்படும் - என்றார்.

# அமெரிக்க தமிழ் அமைப்புகளுடன் உதவி அமைச்சர் ரிச்சர்ட் பௌச்சர் சந்திப்பு

## வன்னி மக்கள் குறித்து கவலை தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.10

அமெரிக்காவில் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் தென்னாசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் பௌச்சர் பேச்சு நடத்தியுள்ளார்.

இதன்போது, வன்னியில் பாதுகாப்பு வலயத்திற்குள் சிக்கிக்கொண்டிருக்கும் பொதுமக்களின் நிலை குறித்து ரிச்சர்ட் பௌச்சர் கவலை தெரிவித்தார் என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

அமெரிக்காவின் மத்திய தென்னாசியாவிற்கான உதவி வெளிவிவகார அமைச்சர் ரிச்சர்ட் பௌச்சரும், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ரொபேட் ஓ பிளேக்கும் இலங்கையின் மனிதாபிமான நிலை குறித்து ஆராய்வதற்காக அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட பல புலம்பெயர் அமைப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களை சந்தித்தனர்.

அமெரிக்க தமிழ் புலம்பெயர் சமூகத்தின் கவலையையும் கருத்துகளையும் பகிர்ந்துகொள்ளவும், இலங்கை விவகாரத்தில் வாஷிங்ரன் எடுத்துள்ள நடவடிக்கைகளைத் தெளிவுபடுத்தவும் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை இருவரும் வரவேற்றனர்.

விடுதலைப் புலிகள் பொதுமக்களை விடுவிக்க வேண்டும் என அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

இலங்கையின் வட பகுதியில் பாதுகாப்பு வலயத்திற்குள் சிக்கியுள்ள மக்களின் நிலை குறித்த அமெரிக்காவின் கவலையை ரிச்சர்ட் பௌச்சர் வலியுறுத்தினார்.

இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் பாதுகாப்பு வலயத்தின் மீதோ, அதற்குள்ளிருந்தோ தாக்குதலை மேற்கொள்ளக் கூடாது என மீண்டும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு இலங்கை அரசு புலம்பெயர்ந்த தமிழர்கள் உட்பட தமிழ் சமூகத்துடன் பேச்சுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை இருவரும் வலியுறுத்தினர்.(சி)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 29 | 11.04.2009 |
| | சனிக்கிழமை |
| திதி: | துதியை |
| | மு.இ. 09.05வரை |
| நட்சத்திரம்: | சுவாதி |
| | மாலை 05.29வரை |
| நல்லநேரம்: | 03.06 - 04.36 |
| ராகுகாலம்: | 09.06 - 10.36 |

# செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தலைவர் இலங்கைக்கு விஜயம்

கொழும்பு, ஏப்.10

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தலைவர் ஜகொப் கெளன்பேக்கர் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகமவின் விசேட அழைப்பை ஏற்று இலங்கை வந்துள்ள இவருடன் சங்கத்தின் தெற்காசிய நடவடிக்கைகளுக்கான பிரதம அதிகாரி ஜக்குவாஸ் டிமையோவும் வந்துள்ளார்.

இதேவேளை வெளிவிவகார அமைச்சருக்கும் இலங்கை வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினருக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இலங்கையின் தற்போதைய நிலைவரம் மற்றும் செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற்பாடு என்பன தொடர்பில் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் வடக்கில் போர் இடம் பெற்று வரும் சூழலில் மனிதாபிமான நடவடிக்கைகள் தொடர்பாக இக் குழு வழங்கிவரும் ஒத்துழைப்புக்கு அமைச்சர் ரோஹித பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில் சுகாதார அமைச்சு, சமூக சேவைகள் அமைச்சு,மீள் குடியேற்ற அமைச்சு ஆகியவற்றின் செயலாளர்களும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரும் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்திய அரசு உடன் நீக்க வேண்டும்



## ம.தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில் வைகோ கோரிக்கை

புதுடில்லி, ஏப்.10

இலங்கையில் அப்பாவித் தமிழர் படுகொலை செய்யப்படுவது நிறுத்தப்படவேண்டும். அங்கு யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். ஈழத்தமிழர் விடிவிற்காகப் போராடிவரும் விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்திய அரசு நீக்கவேண்டும்.

- இவ்வாறு ம.தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தின்போது அக்கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார்.

வைகோ தலைமையில் ம.தி.மு.க. பொதுக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

அ.தி.மு.க. கூட்டணியில் ம.தி.மு.க.வுக்கு 4 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது. விருதுநகர், ஈரோடு, தஞ்சை, நீலகிரி ஆகிய தொகுதிகளில் அக்கட்சி போட்டியிடுகிறது.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கூட்டத்துக்கு தலைமை தாங்கினார். பொருளாளர் மாசிலாமணி, துணைப் பொதுச்செயலாளர்கள் நாசரேத்துரை, மல்லை சத்யா, துரை பாலகிருஷ்ணன், மாவட்ட செயலாளர்கள் ஜீவன், மணி மாறன், தாமரைக்கண்ணன் மற்றும் ஆட்சிமன்ற உறுப்பினர்கள், உயர் மட்டக்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர்.

நேற்று நடைபெற்ற பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

தற்போது, மூன்றரை லட்சம் தமிழர்கள் முல்லைத்தீவில், மரண பயங்கரத்தில் சிக்கி உள்ளனர். நினைத்தாலே நெஞ்சம் நடுங்கும் பேரழிவு, ஈழத்தமிழ் மக்களை முற்றுகை இட்டு உள்ளது. உடனடியாக இலங்கை அரசு தமிழர்கள் மீதான இராணுவத் தாக்குதலை நிறுத்தி, போர் நிறுத்தம் அறிவிக்க வேண்டும் என்று, இந்திய அரசு முழுமையான அரசியல் அழுத்தத்தைத் தந்து வற்புறுத்த வேண்டும் என்று இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்கு, சுதந்திர இறையாண்மையுள்ள தனித்தமிழ் ஈழ தேசம் மலர்வது ஒன்றுதான் நிரந்தரத் தீர்வு ஆகும் என்று, 1995ஆம் ஆண்டு, ஜூலை 1ஆம் தேதி, திருச்சியில் நடைபெற்ற மறுமலர்ச்சி தி.மு.கழகத்தின் மாநில மாநாட்டில் தீர்மானம் நிறைவேறியது. அந்தத் தீர்மானத்தையே இப்பொதுக் குழு மீண்டும் வலியுறுத்துவதோடு, தனித்தமிழ் ஈழம் மலர, தொடர்ந்து குரல் கொடுப்போம்.

இலங்கைத் தீவில், ஈழத்தமிழ் மக்களின் உரிமை வாழ்வுக்காக, மகத்தான தியாகங்களைச் செய்து யுத்த களத்தில் போராடி வருவதோடு, ஈழத்தமிழ் மக்களின் ஒட்டுமொத்த ஆதரவைப் பெற்று இருக்கின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை, இந்திய அரசு நீக்க வேண்டும்.

அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத் தலைமையிலான கூட்டணியை, நாற்பது தொகுதிகளிலும் வெற்றி பெறச்செய்வதற்கு அரும்பணி ஆற்றுவது.

ம.தி.மு.க. கொள்கை விளக்க அணிச்செயலாளர் நாஞ்சில் சம்பத்தை தேசப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்து சிறையில் அடைத்த கொடுமைக்கும், இதே அடக்குமுறைச் சட்டத்திற்கு ஆளாகி இருக்கின்ற பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திரைப்பட இயக்குநர் சீமான் ஆகியோரின் கைதுக்கும் பலத்த கண்டனத்தை இப்பொதுக் குழு தெரிவிக்கிறது. இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

# சோனியா நினைத்தால் இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்படக்கூடிய வாய்ப்பு

## தொல். திருமாவளவன் கூறுகிறார்



சென்னை, ஏப். 10

சோனியா காந்தி நினைத்தால் இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான போரை நிறுத்தலாம் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் புதன் கிழமை நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கட்சியின் வேட்பாளர் பட்டியல் மற்றும் தேர்தல் அறிக்கையை வெளியிட்டு வைத்து கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் கூறினார்.அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி நினைத்தால் 24 மணி நேரத்தில் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை டில்லிக்கு வரவழைத்து போரை நிறுத்துமாறு வலியுறுத்த முடியும்.

நச்சுப் புகைக் குண்டுகளை வீசி தமிழர்களை கொல்லும் நடவடிக்கையில் இந்தியப் படையினரின் பங்களிப்பு உள்ளது என தகவல்கள் வந்துள்ளன. இது வேதனையைத் தருகிறது.

இரண்டொரு தினங்களில் போரை நிறுத்த சோனியா காந்தி தாயுள்ளத்தோடு நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்தான் தமிழர்களின் கடைசி நம்பிக்கை. அத்துடன் போரை நிறுத்த முதல்வர் கருணாநிதியும் தீவிரமாக முயற்சி எடுக்க வேண்டும்.

இதேவேளை காங்கிரஸ் தலைவர்களை விமர்சனம் செய்ததற்காக நான் தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலுவிடம் மன்னிப்பு எதுவும் கேட்கவில்லை. நான் எந்தத் தவறும் செய்யவில்லை. அதனால் மன்னிப்பு கேட்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை.

ஈழத் தமிழர்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் எதிரான கட்சி அ.தி.மு.க. எனவே அ.தி.மு.க.வை ஆதரிப்பது என்பதை எங்களால் ஏற்க முடியாது. காங்கிரஸ் கட்சியாவது போரை நிறுத்துமாறு குரல் கொடுத்தது. தி.மு.கவோடு இணைந்து போரை நிறுத்துமாறு போராடியது. ஆனால் காங்கிரஸ் உடன் கூட்டணி அமையாது என்றவுடன் ஜெயலலிதா உண்ணாவிரதம் என்ற நாடகத்தை அரங்கேற்றினார். எனவே அ.தி.மு.க.வை ஆதரிக்க முடியாது- என்றார் திருமாவளவன்.

# இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் ஈரோட்டில் ஆர்ப்பாட்டம்


ஈரோடு, ஏப்.9-

ஈரோடு தலைமை தபால் நிலையம் முன்பு இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் கி.வடிவேல் தலைமை தாங்கிர். இந்திய கம்னிஸ்ட் கட்சி, பா.ம.க., ம.தி.மு.க, பெரியார் திராவிட கழகம் ஆகிய கட்சிகளை சேர்ந்தவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்திய கம்னிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் வி.பி.குணசேகரன், பாட்டாளி மக்கள் கட்சியின் மாவட்ட செயலாளர் பொ.வை. ஆறுமுகம், ம.தி.மு.க மாவட்ட அவைத் தலைவர் மதார்சா, பெரியார் திராவிட கழக மாவட்ட செயலாளர் இளங்கோ ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னாள் எம்.எல்.ஏ. நா.பெரியசாமி, பெரிய சேமூர் நகராட்சி தலைவர் பிரபாகரன், பா.ம.க முன்னாள் ஒழுங்கு நடவடிக்கை குழு உறுப்பினர் வெங்கடாசலம், மாநில துணை தலைவர் பரமசிவம் உள்பட பலர் பேசினார்கள். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பலர் கறுப்பு சட்டை அணிந்தும், கைகளில் கறுப்பு கொடிகளை வைத்துக்கொண்டும் கோஷம் எழுப்பினார்கள்.

இலங்கை தமிழர்கள் மீதான தாக்குதலை தடுத்து நிறுத்த வேண்டும். இலங்கை அரசுக்கு இந்திய அரசு துணை போகக்கூடாது உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய அட்டைகளையும் கைகளில் ஏந்தியபடி கோஷமிட்டனர். ஆர்ப்பாட்டத்தில் கம்யூனிஸ்டு, பா.ம.க., ம.தி.மு.க. பெரியார் திராவிடகழகத்தினர் உள்பட ஏராளமானவர்கள் கலந்துகொண்டனர்.



வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேகம் நேற்று முன்தினம் கோலாகலமாக நடந்தது. வடக்கு கோபுர வாசலிலுள்ள கலசங்களில் சிவாச்சாரியர்கள் புனித நீரூற்றுகின்றார்கள்.

லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு அம்மன் அருள் பெறுவதைப் படங்களில் காணலாம்.

# சோனியா குடும்பத்துக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

## புலிகளின் அச்சுறுத்தல் காரணமாம்

விடுதலைப்புலிகளால் அச்சுறுத்தல் இருப்பதால், சோனியாவுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் பலத்த பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று அனைத்து மாநில பொலிஸ் டி.ஜி.பி.களுக்கும் மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, நாடாளுமன்ற தேர்தல் பிரசாரம் செய்யும் போது, அவர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என்று உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. அவருக்கு மட்டுமின்றி, அவரது மகனும், காங்கிரஸ் பொதுச்செயலாளருமான ராகுல் காந்தி, மகள் பிரியங்கா ஆகியோருக்கும் விடுதலைப்புலிகளால் ஆபத்து இருக்கின்றது. உளவுத்துறை கூறியுள்ளது.

இதையடுத்து, அனைத்து மாநில அரசுகளையும் மத்திய உள்துறை அமைச்சும் உஷார் படுத்தி உள்ளது. சோனி யாகாந்தி, ராகுல் காந்தி, பிரியங்கா ஆகியோர் தேர்தல் பிரசாரத்துக்காக வரும்போது, அவர்களுக்கு பலத்த பாது காப்பு அளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு அனைத்து மாநில பொலிஸ் டி.ஜி.பி.களுக்கும் மத்திய உள்துறை அமைச்சு கடிதம்எழுதி உள்ளது.

குறிப்பாக, தென் மாநிலங்களில் அவர்கள் பிரசாரத்துக்கு வரும்போது, நிலைமையை உன்னிப்பாக கண்காணித்து, அதிகபட்ச பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்று உள்துறை அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

# கருணாநிதியைக் கை கழுவுவதற்கு தமிழக மக்கள் தயாராகிவிட்டனர்

## அ.தி.மு.க. செயலர் கூறுகிறார்

இலங்கை அரசால் அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு வலையப் பகுதிகளுக்குள் லட்சக் கணக்கான தமிழர்கள் அடைக்கலம் புகுந்துள்ளனர் அப்பகுதியில் தற்போது நச்சுக் குண்டுகள் வீசப்படுவதால் அவர்களின் உயிருக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது எனவும் தகவல்கள் வந்த வண்ணம் உள்ளன. எனவே தமிழர் களை பாதுகாக்க அங்கு உடனடி போர் நிறுத்தம் வேண்டும்- இவ்வாறு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்காக உலகத்தில் ஈழத் தமிழர்களின் குரல்கள் எல்லாம் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கையில், அங்கு எதுவுமே நடக்காதது போன்று, முதல்வர் கருணாநிதி மௌனம் சாதிப்பது கடும் கண்டனத்திற்குரியது. தற்போது இலங்கைத் தமிழர்களை காக்க உள்ள ஒரே வழி உடனடி போர் நிறுத்தம் தான். அதைத் தவிர வேறு வழியில்லை. தமிழர்கள் மீது கருணாநிதிக்கு உண்மையிலேயே அக்கறை இருக்குமானால், மத்திய அரசை நிர்பந்தப்படுத்தி அங்கு உடனடியாக போர் நிறுத்தம் ஏற்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கைத் தமிழர்களை அழிக்க எந்த 'கை' உறுதுணையாக இருந்ததோ அந்த கையை விடமாட்டேன் என்று கருணாநிதி உறுதியுடன் கூறியிருக்கிறார்.

ஆனால், தமிழக மக்கள் கருணாநிதியையும், கருணாநிதியோடு உள்ள 'கை'யையும் கைகழுவ தயாராகிவிட்டனர் - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள
# இந்து சிவாச்சாரியர்களை விடுவிக்க கத்தோலிக்க ஆணைக்குழு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.10

இந்து சிவாச்சாரியார்கள் 10 பேரும் அவர்களின் குடும்பங்களும் இடம்பெயர்ந்தோருக்கான நலன்புரி முகாம்களில் தொடர்ந்து வைத்திருக்கப்படுவதாக அறிந்து கவலையடைகின்றோம்.

இவ்வாறு ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் யாழ்.மாவட்டக் கத்தோலிக்க நீதி சமாதான ஆணைக்குழு கூறியுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இவர்கள் தமது சமயச் சடங்குகளைத் தினமும் பலவேளைகளில் நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கின்றனர். இவர்கள் தமது சமயச் சடங்குகளை நிறைவேற்றுவதற்காகத் தமது சமய ஆசாரங்களுக்கமைவாக தம்மைத் தாமே புனிதப்படுத்திக் கொள்வதற்கான கடமைகளையும் கடைப்பிடிக்கவேண்டிய நிலையில் உள்ளனர். இவர்கள் இந்து சமயத்தவர்களால் மிக உயர்வாக மதிக்கப்படுபவர்களாக இருப்பதுடன் இவர்கள் சமயத் தலைவர்களாகவும் சமூகப் பெரியார்களாகவும் கணிக்கப்படுபவர்கள்.

அவர்களின் மதிப்புக்கும் தகுதிக்கும் ஏற்றமுறையில்,தடுத்துவைக்கப்படவில்லையென்று நம்பகமாக அறிகின்றோம்.

இவர்கள் நடத்தப்படும் முறைமை குறித்து இந்துமக்கள் பெரிதும் கவலையடைந்திருக்கிறார்கள்.

எனவே இவர்களை விரைவாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (ப)

# நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றாத பட்டதாரிகளின் கவனத்துக்கு

அச்சுவேலி,ஏப்.10

தேசியப் பாடசாலைகளுக்குப் பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிக்கும் திட்டத்தின்கீழ் வெளியாகிய மூன்றாவது பட்டியலில் இடம்பெற்றவர்களில் யாழ்ப்பாணத்தில் கடந்த 8ஆம் திகதி நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்காதவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்பு கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளது.

தவிர்க்கமுடியாத காரணங்களினால் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்கமுடியாத நிலையில் யாழ்.மாவட்டத்துக்கு வெளியே தங்கியிருப்பவர்களின் நன்மையைக் கருத்திற்கொண்டு கொழும்பில் நேர்முகப் பரீட்சை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவிரும்பும் பரீட்சார்த்திகள் 20ஆம் திகதி திங்கட்கிழமை இசுறுபாய கல்வி அமைச்சின் ஆசிரியர் ஸ்தாபனக் கிளையில் உரிய ஆவணங்களுடன் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார். (50-11)

# பல்கலைக்கழக பரமேஸ்வரன் ஆலயத்தால் நல்லை ஆதீன மேம்பாட்டுக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம்,ஏப்.10

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயப் பரிபாலன சபையின் இராமநாதன் நம்பிக்கை நிதியத்திலிருந்து நல்லை ஆதீன மேம்பாட்டுக்கென மாதாந்தம் 10ஆயிரம் ரூபா நிதி வழங்கப்படவுள்ளதாகப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தெரிவித்தார்.

விடுவிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து வந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு உதவி வழங்குவது குறித்து யாழ்.மாவட்டத்தில் உள்ள இந்து ஆலயங்களின் பரிபாலகர்களுடனான சந்திப்பொன்று கடந்த 5ஆம் திகதி நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போது நல்லை ஆதீன சுவாமியிடம் அதீன மேம்பாட்டுக்கென 10ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டு இந்தத் திட்டம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்கள், வசதி படைத்தவர்கள் நல்லை ஆதீன மேம்பாட்டுக்காகத் தம்மால் இயன்ற நிதி உதவிகளை வழங்க முன்வரவேண்டுமெனவும் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (50-9)



யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணியாளர் ஒருவர் இயற்கை மரணம் எய்தியதையடுத்து அவரது குடும்பத்துக்கு இழப்பீட்டு நிதி வழங்கும் நிகழ்வு அண்மையில் சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மரணமான பணியாளரான அமரர் என்.சிறிதரனின் குழந்தைக்கான 2லட்சத்து 52ஆயிரம் ரூபா வைப்புச் சான்றிதழையும் 20ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும் சங்கத் தலைவர் ப.கிரிதரன் அமரரின் பாரியாரிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம். சங்கத்தின் பொதுமுகாமையாளர் ரீ.மனோகரனும் படத்தில் காணப்படுகிறார். (படம்: குமார்)

# புத்தாண்டுக் கைவிசேஷம்

யாழ்ப்பாணம்,ஏப்.10

புத்தாண்டை முன்னிட்டு யாழ்.செயலக ஊழியர் நலன்புரிக் கழகத்தின் ஏற்பாட்டில் செயலக ஊழியர்களுக்கு கைவிஷேசம் வழங்கும் நிகழ்வு புத்தாண்டு தினத்தன்று காலை 9 மணிமுதல் 10 மணிவரையான சுபவேளையில் மேற்கொள்ள அரச அதிபர் ஏற்பாடு செய்துள்ளார்.

செயலக ஊழியர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு ஊழியர் நலன்புரிக் கழகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (4-45)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# வாராந்த ஆன்மீக நிகழ்வு

வடமராட்சி,ஏப்.10

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த ஆன்மீக நிகழ்வு வரிசையில், இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வும் இடம்பெறும். (204-236)

# வேலணையில் புகையிலை அமோக விளைச்சல்

வேலணை,ஏப்.10

வேலணை, சரவணைப் பகுதிகளில் புகையிலைச் செய்கை இந்த வருடம் அமோக விளைச்சலைத் தந்துள்ளது. புகையிலைக் கன்றுகள் பதனிடப்படாமலே கன்று ஒன்று 70 ரூபா முதல் 90 ரூபா வரை விற்பனையாவதாகக் கூறப்படுகின்றது.

வியாபாரிகள் அறுவடை செய்யாமல் தோட்டத்துடன் புகையிலைக் கன்றுகளைத் தீர்த்து வாங்குவதைக் காணமுடிகிறது. (4-167)

## சமய சந்நிதிகளில்

ஆனைக்கோட்டை,ஏப்.10

ஆனைக்கோட்டை புனித அடைக்கல நாயகி ஆலயப் புனித வாரத் திருப்பலிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. பெரிய வெள்ளியாகிய இன்று காலை 6 மணிக்கு பெரிய சிலுவைப் பாதையும், பிற்பகல் 4.30 மணிக்குத் திருப்பலியும் நடைபெறும்.

பெரிய சனிக்கிழமை இரவு 10.30 மணிக்குப் பாஸ்காத் திருப்பலி இடம்பெறுவதோடு உயிர்த்த ஞாயிற்றுத் திருப்பலி காலை 7 மணிக்கு இடம்பெறுமென புனித அடைக்கலநாயகி ஆலய பங்குத்தந்தை அறிவித்துள்ளார். (50-20)

★ ★ ★

யாழ்ப்பாணம், நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத் தேர்த் திருவிழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கும் மறுநாள் புதன்கிழமை காலை 9 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

# பருத்தித்துறை பிரதேச செயலக கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

கரவெட்டி,ஏப்.10

தேசிய கலை இலக்கியப் பெருவிழாவையொட்டி, பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தினரால் கலை, இலக்கியப் போட்டிகள் நடத்தப்பட்டன. அவற்றின் முடிவுகள் வருமாறு:

**கட்டுரை - கனிஷ்ட பிரிவு**

முதலாம் இடம் - சி.தர்மிகா (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம் - ஸ்ரீ.கேதிகா (தும்பளை சிவப்பிரகாசம் ம.வித்தியாலயம்), மூன்றாம் இடம் - க.செந்துஜா(வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி).

**கட்டுரை - சிரேஷ்ட பிரிவு**

முதலாம் இடம்- சி.கவிதா (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம்- இ.சர்மிலா (வ்டமராட்சி இந்து மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம்- ந.ராஜ்குமார் (ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை),

**கட்டுரை (ஆங்கிலம்)-கனிஷ்ட பிரிவு**

முதலாம் இடம்- ச.திவாகர் (ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை), இரண்டாம் இடம் - கா.கிரிதரன் (ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை), மூன்றாம் இடம்- ஜெ.ஜெசிந்தன் (ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை).

**கட்டுரை (ஆங்கிலம்)- சிரேஷ்ட பிரிவு**

முதலாம் இடம் - பா.கபிலன் (ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை), இரண்டாம் இடம் - ஸ்ரீ.சரத்பவன் (ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை), க.செந்தாளன் (ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை).

**கவிதை - கனிஷ்ட பிரிவு**

முதலாம் இடம் - ஸ்ரீ.கஜுவா (வடமராட்சி இ.மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம் - ம.கீர்த்தனா (வடமராட்சி இ.மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம் - இ.நிகானா (வடமராட்சி இ.மகளிர் கல்லூரி).

**கவிதை - சிரேஷ்ட பிரிவு**

முதலாம் இடம் - ஆ.சுமன் (சிதம்ப ராக் கல்லூரி), இரண்டாம் இடம் - பொ. விஜிதா (மெதடிஸ்த பெ.உ. பாடசாலை), மூன்றாம் இடம் - சி.யசோ (மெதடிஸ்த பெ. உ.பாடசாலை).

**கவிதை - திறந்த பிரிவு**

முதலாம் இடம் - பா.வேதநாயகம் (தும்பளை தெற்கு, பருத்தித்துறை), இரண்டாம் இடம் - இ.திருத்துவராஜா (அல்வாய் வடமேற்கு), மூன்றாம் இடம் - க.சின்னராஜா (அல்வாய் வடக்கு).

**சிறுகதை - சிரேஷ்ட பிரிவு**

முதலாம் இடம் - இ.காயத்திரி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, ஆ.சுமன் (சிதம்பராக் கல்லூரி).

**பாடலாக்கம் - திறந்த பிரிவு**

முதலாம் இடம் - பா.வேதநாயகம் (தும்பளை தெற்கு, பருத்தித்துறை), க.சின்னராசா (சித்திராலயம், அல்வாய் வடக்கு), மூன்றாம் இடம் - சி.மார்க்கண்டு (தும்பளை, பருத்தித்துறை).

**சிறுகதை - திறந்த பிரிவு**

முதலாம் இடம் - பொ.மகாதேவா (உடையார் லேன், தும்பளை, பருத்தித்துறை), இரண்டாம் இடம் - இ.சச்சிதானந்தம் (மகாத்மா வீதி, அல்வாய் வடக்கு), மூன்றாம் இடம் - கோ.கோகிலரதன் (தும்பளை தெற்கு, பருத்தித்துறை). (4-70)

# ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை; மேலும் சில பாடசாலைகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.10

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப் பரீட்சை முடிவுகளை மேலும் சில பாடசாலை அதிபர்கள் 'உதயனுக்கு' அனுப்பிவைத்துள்ளனர். அந்த முடிவுகள் வருமாறு:

**கொக்குவில் இந்துக் கல்லூரி**

கோவிந்தராஜா அனுதிரன் - 7ஏபிசி, வினுஜா தர்மகுலேந்திரன் - 7ஏபிசி, றஞ்சித்குமார் நிர்மலன் - 7ஏபிஎஸ், ஸ்ரீகரன் மயூரன் - 7ஏபிஎஸ், ஸ்ரீகணேசன் சஞ்சீவன் - 6ஏ3பி, அபிராமி பரமேஸ்வரன் - 6ஏ3பி; பவித்திரா தவராஜா - 6ஏ3பி, பிரனவீனா பிறேமகுமார் - 6ஏ2பிசி, சுமங்கலி செல்வநாயகம் - 6ஏ2பிஎஸ், துளசிகா செல்வகுமார் - 6ஏபிசிஎஸ், அனித்திரா சிவலிங்கம் - 6ஏபி2சி, ஆரணி விக்னேஸ்வரன் - 6ஏ2சிஎஸ்,

செல்வராஜா ஆதவன் - 6ஏபிசி, நித்தியானந்தம் பகீரன் - 5ஏ3பிஎஸ், சுந்தரேஸ்வர சர்மா ஞானானந்தசர்மா - 5ஏ3பிஎஸ், ஆனந்தராசா ராஜாராம் - 5ஏ3பிஎஸ், விபுலானந்தம் சசிகரன் - 5ஏ2பிசிஎஸ், மகேந்திரன் தஜீவன் - 5ஏ2பி2சி, விஜியகுமார் சதுர்சன் - 5ஏபி2சிஎஸ், மகாதேவன் தர்மிகன் - 5ஏ4சி, அபிலசாசினி நடராஜா - 5ஏபி2சிஎஸ், சஜானுதா சண்முகராஜா - 5ஏபி2சிஎஸ், அமிர்தா உதயகுமாரன் - 5ஏபி2சிஎஸ், கம்சிகா விஜயசிறி - 5ஏ3பி, சிறிராஜா சரவணன் - 5ஏபிசிஎஸ், சரண்யா கனகலிங்கன் - 5ஏ3பி,

சற்குணராசா மதிலக்ஷன் - 4ஏ3பிசிஎஸ், தியாகலிங்கம் தனுசுஜன் - 4ஏ4பிசி, விஜயரத்தினம் கார்த்திகன் - 4ஏபி3சிஎஸ், தர்மராசா கீர்த்திகன் - 4ஏ2பி3சி, இராஜரத்தினம் கனாதரன் - 4ஏ2பி2சிஎஸ், சீவரத்தினம் கோகுலன் - 4ஏ3பி2சி, பாலசுப்பிரமணியம் சசிவர்ணன் - 4ஏபி3சி, சோமஸ்கந்தக் குருக்கள் சக்திதரன் - 4ஏ4சி, இராஜசூரியா தர்ஷன் - 4ஏ2பி2சி, பிருந்தா யோஜீஸ்வரன் - 4ஏ2பி2சிஎஸ், காயத்திரி கிருஷ்ணமூர்த்தி - 4ஏ4பிசி, தர்மிகா செல்வரத்தினம் - 4ஏ3பிசிஎஸ், லோகீதா வீரசிங்கம் - 4ஏபி2சி2எஸ், தர்சிகா குணராசா - 4ஏ4பிசி, திபாலினி புவனேஸ்வரன் - 4ஏ2சி2எஸ், ரஞ்சன் டிலக்ஷன் - 3ஏ3பிசி2எஸ், தங்கவேல் கீர்த்திகன் - 3ஏ2பி3சிஎஸ், ரவிசுந்தரம் சஜந்தன் - 3ஏ3பி3சி, விஜயபாலசிங்கம் ஜனகசங்கர் - 3ஏபி3சி2எஸ், ஜெயசீலன் நிலவன் - 3ஏ2பி3சிஎஸ், நித்தியானந்தன் ஆதித்தன் - 3ஏ4பிஎஸ், சிவராசா டிலக்ஷன் - 3ஏ4பிசி, மயில்வாகனம் கிரிதரன் - 3ஏ3பிசி2எஸ், ஞானசேகரன் சஞ்சீவன் - 3ஏ2பி4சி,

நவரத்தினராசா துஷ்யந்தன் - 3ஏ3பிசிஎஸ், சரவணபவன் சாம்பவன் - 3ஏ4பிசிஎஸ், ஜெயஈஸ்வரன் வியூகன் - 3ஏ5பி, ஞானசம்பந்தன் சஞ்சீவன் - 3ஏ3பி2சி, ஜனனி சிறிஸ்கந்தராஜ் - 3ஏ3சி3எஸ், சுவர்ணா பாலஸ்ரீலிங்கம் - 3ஏ4பிசி, கஜேந்தினி நாகரத்தினம் - 3ஏ2பி2சிஎஸ், மஞ்சுரி சத்தியோதசர்மா - 3ஏ3பி2சிஎஸ், மதுரா சத்தியோதசர்மா - 3ஏ2பி3சிஎஸ், பிரணவி திருநாவுக்கரசு - 3ஏ2பி3சிஎஸ், சரண்யா தேவி பாஸ்கரசர்மா - 3ஏபி5சி, தர்சினி பஸ்பராஜா - 3ஏபி4சிஎஸ், செலோஜினி அந்தோனிதாஸ் - 3ஏ3பி3சி, தர்ஷனா மகாதேவன் - 3ஏ2பிசி2எஸ், துஷ்யந்தி குணசீலன் - 3ஏ2பிசி2எஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'விஸ்டன்' விருதுக்கு வீரர்கள் தெரிவு இங்கிலாந்து வீராங்கனைக்கும் கௌரவம்

லண்டன், ஏப்.10

கிரிக்கெட் வீரர்களின் வேத புத்தகம் என்று வர்ணிக்கப்படும் 'விஸ்டன்' ஆண்டுதோறும் கிரிக்கெட் வீரர்களைக் கௌரவித்து வருகிறது. இங்கிலாந்தை தலைமையிடமாக கொண்டு செயற்பட்டு வரும் விஸ்டன் புத்தகத்தின் 146 ஆவது பதிப்பு நேற்றுமுன்தினம் வெளியானது.

இந்த பதிப்பில் இங்கிலாந்தின் ஜேம்ஸ் அன்டர்ஸன், தென்னாபிரிக்க வீரர்கள் டேலே பென்கன்ஸ்டியன், மார்க் பௌச்சர், மெக்கன்ஸி மற்றும் பெண்கள் உலகக் கோப்பையில் முத்திரை பதித்த இங்கிலாந்து வீராங்கனை கிளாரி ரெய்லர் ஆகியோர் இந்த ஆண்டுக்கான சிறந்த வீரர்கள் மற்றும் வீராங்கனையாக தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். நூற்றாண்டு கால வரலாற்றில் விஸ்டன் விருது பெறும் முதல் வீராங்கனை கிளாரி ரெய்லர் ஆவார்.

மேலும் 2008ஆம் ஆண்டுக்கான உலகின் முன்னணி வீரராக இந்திய அதிரடி மன்னன் ஷேவாக் தேர்வுசெய்யப்பட்டுள்ளார். இந்த விருதுக்கு ஷேவாக்குக்கும், தென்னாபிரிக்க அணித்தலைவர் ஸ்மித்துக்கும் இடையே கடும் போட்டி நிலவியது. இருப்பினும் மயிரிழையில் ஸ்மித்தை பின்னுக்குத் தள்ளிவிட்டு விருதை ஷேவாக் தட்டிச்சென்றார். டெஸ்ட் கிரிக்கெட்டில் மற்ற எந்த ஆரம்ப ஆட்டக்காரர்களை யும் விட ஷேவாக் தான் முதல் பந்தில் இருந்தே வேகமாக ஓட்டங்களைக் குவிக்கும் வழக்கத்தைக் கொண்டிருக்கிறார். இதன் மூலம் அடிக்கடி சாதனைகளும் படைத்திருக்கிறார். இதைத் தான் அவரும் விரும்புகிறார் என்று விஸ்டன் புகழ்ந்துள்ளது. இந்த விருதினை பெறும் 6ஆவது வீரர் ஷேவாக் ஆவார்.

ஏற்கனவே இந்த விருதினை அவுஸ்திரேலியாவின் ரிக்கி பொண்டிங், ஷேன் வோர்ன், இங்கிலாந்தின் பிளின்ரொப், இலங்கையின் முரளிதரன், தென்னாபிரிக்காவின் கலீஸ் ஆகியோர் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

2008ஆம் ஆண்டுக்கான டெஸ்ட் அணியையும் விஸ்டன் தேர்வுசெய்து வெளியிட்டுள்ளது. ஓராண்டு காலமாக வீரர்களின் செயற்பாட்டின் அடிப்படையில் தேர்வுசெய்துள்ள இந்த அணியில் இந்திய அணியின் ஐந்து வீரர்கள் இடம்பெற்றிருக்கிறார்கள். அணித் தலைமைப் பொறுப்பை இந்திய வீரர் டோனிக்கு வழங்கி விஸ்டன் கௌரவப்படுத்தியுள்ளது. முன்னாள் வீரர்கள் ரவிசாஸ்திரி (இந்தியா), இயான் பிஷப் (மேற்கிந்தியத் தீவுகள்), இயான் ஸ்மித் (நியூஸிலாந்து) ஆகியோர் கனவு அணியை தேர்வுசெய்தனர்.

அணித் தலைவராக யாரைத் தேர்வு செய்வது என்பதில் ஸ்மித், டோனி இடையே போட்டியிருந்தது. இதில் டோனிக்கு ஆதரவாக ரவி சாஸ்திரியும், இயான் பிஷப்பும் வாக்களித்தனர். ஸ்மித்தை அணித்தலைவராக்க வேண்டும் என்று இயான் ஸ்மித் விரும்பினார். இருப்பினும் 2-1 என்ற முன்னிலை அடிப்படையில் டோனி அணித் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார்.

சுழற்பந்து வீச்சாளர் இடத்துக்கு ஹர்பஜன்சிங் (இந்தியா), முரளிதரன் (இலங்கை), மென்டிஸ் (இலங்கை) ஆகிய 3 பேரின் பெயர்களும் பரிந்துரை செய்யப்பட்டன. 3 பேருக்கும் சம அளவு ஆதரவு இருந்ததால், இதில் இருந்து ஹர்பஜன்சிங் தெரிவு செய்யப்பட்டார். அடுத்த வேகப்பந்து வீச்சாளராக சகீர்கான் தேர்வு செய்யப்பட்டார்.

விஸ்டனின் டெஸ்ட் அணி வருமாறு:-

ஷேவாக் (இந்தியா), ஸ்மித் (தென்னாபிரிக்கா), ரிக்கி பொண்டிங் (அவுஸ்திரேலியா), சச்சின் டெண்டுல்கர் (இந்தியா), பீற்றர்ஸன் (இங்கிலாந்து), சந்தர்போல் (மேற்கிந்தியத் தீவுகள்), டோனி (அணித்தலைவர் மற்றும் விக்கெட் காப்பாளர்), ஹர்பஜன் சிங் (இந்தியா), ஜோன்ஸன் (அவுஸ்திரேலியா), ஸ்ரெயின் (தென்னாபிரிக்கா), சகீர்கான் (இந்தியா).

## மேற்கிந்திய அணியில் புதுமுக வீரர்கள்

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணி, அடுத்த மாதம் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் போட்டித் தொடரில் விளையாடுகிறது. இந்த போட்டிக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. வேகப்பந்து வீச்சாளர் பவெல், சகலதுறை வீரர் ஹின்ட்ஸ் ஆகியோர் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

கணுக்காலில் காயம் அடைந்த பிராவோ குணமடையாததால் அணியில் சேர்க்கப்படவில்லை. வேகப்பந்து வீச்சாளர் நெலோன் பாஸ்கல், துடுப்பாட்டக்காரர் டாலே ரிச்சர்ட்ஸ், வேகப்பந்து வீச்சாளர் அன்ரூ ரிச்சர்ட்ஸன் ஆகிய புதுமுக வீரர்கள் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## சானியா ஜோடி காலிறுதிக்குத் தகுதி

புளோரிடாவில் நடைபெறும் எம்.பி.எஸ். குறாப் சம்பியன்ஷிப் டென்னிஸ் தொடர் ஆட்டத்தில் இரட்டையர் காலிறுதிச் சுற்றுக்கு சானியா மிர்சா - சுவாங் (சைனீஸ் தைபே) ஜோடி தகுதிபெற்றுள்ளனர்.

ஹங்கேரி - அமெரிக்கா ஜோடியான மெலிந்தா ஸீசிங்க் - லிலியா ஆஸ்டர்லோ ஆகியோரை 6-0, 3-6, 10-5 என்று போராடி வீழ்த்தி சானியா ஜோடி காலிறுதிக்குள் நுழைந்தது.

இந்தத் தொடரின் ஒற்றையர் போட்டியில் சானியா மிர்சா ஏற்கனவே முதல் சுற்றில் தோல்வியைத் தழுவி வெளியேறிவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க டென்னிஸ்; இந்திய வீரர் வெற்றி

அமெரிக்காவில் நடக்கும் ஏ.டி.பி., சலஞ்சர் டென்னிஸ் தொடரின் முதல் சுற்றில் இந்தியாவின் சோம்தேவ் தேவ்வர்மன் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். ஒற்றையர் முதல் சுற்றில் இந்திய வீரர் சோம்தேவ் தேவ்வர்மன், கொரியாவின் கியூ டாயை சந்தித்தார். இப்போட்டியின் முதல் செற்றை கொரிய வீரர் 7-6 என கைப்பற்றினார்.

இரண்டாவது செற்றில் எழுச்சி கண்ட இந்திய வீரர் 6-2 என எளிதாக தன்வசப்படுத்தினார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் 3ஆவது செற்றில் அசத்திய சோம்தேவ் 6-2 என கைப்பற்றினார். இறுதியில் சோம்தேவ் 6-7, 6-2, 6-2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். இதில் இந்திய வீரர், அமெரிக்காவின் லெஸ்டர் குக்கை சந்திக்கிறார்.

# சென்னை சூப்பர் கிங்ஸ் அணி தென்னாபிரிக்கா புறப்பட்டது!

சென்னை, ஏப்.10

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் விளையாடுவதற்காக சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நேற்றுமுன்தினம் தென்னாபிரிக்கா புறப்பட்டது. நியூஸிலாந்து சுற்றுப்பயணத்தை இப்போது தான் முடித்துள்ள அணித்தலைவர் டோனி ஒரு வாரம் ஓய்வுக்கு பின்னர் அணியுடன் இணைந்து கொள்கிறார்.

நாடாளுமன்றத் தேர்தல் காரணமாக 2 ஆவது ஐ.பி.எல். ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டி இந்தியாவில் இருந்து தென்னாபிரிக்காவுக்கு மாற்றப்பட்டுள்ளது. வருகின்ற 18 ஆம் திகதி ஐ.பி.எல். கிரிக்கெட் திருவிழா தென்னாபிரிக்காவில் தொடங்குகிறது.

இந்தப் போட்டியில் பங்கேற்கும் 8 அணிகளில் ஒன்றான சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் வீரர்கள் நேற்றுமுன்தினம் காலை 9.45 மணிக்கு சென்னையில் இருந்து விமானம் மூலம் டுபாய் வழியாக தென்னாபிரிக்காவின் ஜோகனஸ்பேர்க் நகருக்குப் புறப்பட்டுச் சென்றனர். ஜோகனஸ்பேர்க்கில் இருந்து டேர்பன் சென்று அங்கு இன்று முதல் பயிற்சியில் ஈடுபடவிருக்கிறார்கள். ஏப்ரல் 10ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை 6 நாட்கள் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு பயிற்சி முகாம் நடைபெறுகிறது. அப்போது உள்ளூர் அணியின ருடன் அவர்கள் மோதவிருக்கிறார்கள்.



சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் அணித் தலைவரும், இந்திய அணியின் தலைவருமான டோனி, ஒன்றரை மாத கால நியூஸிலாந்து சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு நேற்றுமுன்தினம் தான் தாயகம் திரும்பினார். அவருக்கு ஓய்வு தேவைப் படுகிறது. எனவே சில நாள்கள் ஓய்வு எடுத்துவிட்டு அவர் 15ஆம் திகதி அணியுடன் இணைந்து கொள்கிறார். இலங்கை மதிப்பில் 15 கோடி ரூபாவுக்கு ஏலம் எடுக்கப்பட்ட இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் பிளின்ரொப், நியூஸிலாந்து அணியின் சகலதுறை வீரர் ஜேக்கப் ஓரம் ஆகியோரும் எதிர்வரும் 15ஆம் திகதி கேப்டவுனில் அணியுடன் இணைகிறார்கள்.

இதேபோல் நியூஸிலாந்து சென்றிருந்த எல்.பாலாஜி, முரளி விஜய் மற்றும் வெளிநாட்டு வீரர்கள் மத்தியூ ஹைடன், ஸ்ரீபன் பிளமிங் (பயிற்சியாளரும் இவர் தான்) மற்றும் ஜோர்ஜ் 'பெய்லி ஆகியோரும் பின்னர் அணியுடன் சேரவுள்ளனர்.

தமிழ்நாட்டுக் கிரிக்கெட் சங்க செயலாளரும், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் செயற்பாடுகள் பிரிவுத் தலைவருமான காசி விஸ்வநாதன் கூறியவை வருமாறு:-

''இந்த மிகப்பெரிய கிரிக்கெட் தொடரில் விளையாட நாங்கள் தயாராக இருக்கிறோம். இந்த முறை நாங்கள் கோப்பையை வெல்ல வேண்டும் என்று விரும்புகிறோம். அரையிறுதிக்கு முன்னேற வேண்டும் என்பதே எங்களது முதல் இலக்காகும். அதன் பிறகு கடந்த முறை மயிரிழையில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியிடம் தவறவிட்ட கோப்பையை வெல்ல முழு மூச்சுடன் இறங்குவோம்.

இந்திய மற்றும் வெளிநாட்டு வீரர்கள் தங்கள் நாட்டு 'அணிக்காக சர்வதேச போட்டிகளில் தொடர்ந்து விளையாடி வருகிறார்கள். எனவே அவர்கள் பயிற்சி போட்டிகளில் விளையாடாவிட்டாலும், அவர்களது அனுபவம் நேரடியாக போட்டிகளில் களமிறங்க உதவும் - என்றார்.

18ஆம் திகதி நடக்கும் தொடக்க ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி, டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது.



மும்பையில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி வீரர்களுடன் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் துணை உரிமையாளரும் மற்றும் நடிகையுமான ஷில்பா ஷெட்டி

விளையாட்டு அரங்குகளில்

# டென்னிஸ் தரவரிசை; முதலிடத்தில் சபீனா

மார்பெல்லாதவில் நடைபெற்றுவரும் டென்னிஸ் போட்டி முதல் சுற்று ஆட்டத்தில் தரவரிசையில் முதலிடத்தில் இருந்த செரீனா வில்லியம்ஸ் செக்.குடியரசு வீராங்கனை கிளாரா ஸ்கோபலோவாவிடம் 4-6, 6-3, 1-6 என்று அதிர்ச்சித் தோல்வியடைந் ததையடுத்து மகளிர் ஒற்றையர் தரவரிசையில் செரீனா வில்லியம்ஸ் பின் தள்ளப்பட்டு ரஷ்யாவின் தினாரா சபீனா முதலிடம் பிடித்தார்.

எந்த ஒரு கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் பட்டத்தையும் இதுவரை வென்றிராத தினாரா சபீனா தொடர்ந்து மற்ற ஆட்டங்களில் அதிக வெற்றிகளை குவித்ததால் இந்த உச்சத்தை எட்டினார்.

செரீனா வில்லியம்ஸ் கடந்த 11 வாரங்களாக முதலிடம் வகித்து வந்தார். மரியா ஷரபோவாவிற்கு பின்னர் தரவரிசையில் முதலிடம் பிடிக்கும் இரண்டாவது ரஷ்ய வீராங்கனை என்ற பெருமையை சபீனா தற்போது பெற்றுள்ளார். மேலும் ஒற்றையர் மகளிர் உலக தரவரிசையில் முதலிடம் பிடிக்கும் 19 ஆவது சபீனா ஆவார்.

# தரவரிசையில் கம்பீர் முன்னேற்றம்

டுபாய், ஏப்.10

நியூஸிலாந்துக்கு எதிரான கடைசி கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் சதம் அடித்து அசத்திய இந்திய ஆரம்ப ஆட்டக்காரர் கௌதம் கம்பீர் ஐ.சி.சி. டெஸ்ட் துடுப்பாட்டக்காரர்கள் தரவரிசையில் ஒரு இடம் முன்னேறி 4ஆவது இடத்தை பிடித்துள்ளார். 27 வயதான கம்பீரின் மிகச்சிறந்த தரநிலை இதுவாகும். நியூஸிலாந்துக்கு எதிரான 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் 2 சதம் உள்பட மொத்தம் 445 ஓட்டங்களைக் குவித்த கம்பீர், இந்தத் தொடர் மூலம் தரவரிசையில் மொத்தம் 5 இடங்கள் முன்னேறியமை குறிப்பிடத்தக்கது. மற்றொரு தொடக்க வீரர் ஷேவாக் 3 இடங்கள் இறங்கி 20ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்.

இந்தத் தொடருக்கு முன்பாக 14ஆவது இடத்தில் இருந்த ஷேவாக், டெஸ்ட் தொடரில் ஜொலிக்காததால் [illegible] மொத்தம் 6 இடங்கள் பின்தங்கியுள்ளார்.

# டேவிஸ் கிண்ண டென்னிஸ் சென்னையில்; பாதுகாப்புக் குறித்து அதிகாரிகள் ஆய்வு

சர்வதேச டென்னிஸ் சங்க பாதுகாப்பு அதிகாரி சென்னையில் டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டி நடைபெறும் இடத்தை நேரில் ஆய்வுசெய்து பாதுகாப்புக் குறித்து ஆலோசனை நடத்தினார். இந்தப் போட்டி திட்டமிட்டபடி நடைபெறும். இது குறித்து அடுத்த வாரம் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று இந்திய டென்னிஸ் சம்மேளன பொதுச் செயலாளர் அனில் கண்ணா நம்பிக்கை தெரிவித்தார்.

டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியின் ஆசிய - ஓசியானா மண்டல 3ஆவது சுற்று ஆட்டத்தில் இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் மோதுகின்றன. இந்த ஆட்டம் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள டென்னிஸ் மைதானத்தில் அடுத்த மாதம் (மே) 8ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டி இந்தியாவில் கடின தரை (செயற்கை இழை) மைதானத்தில் நடைபெறுவது இதுவே முதல் முறையாகும். 30 ஆண்டுகளுக்கு பின்னர் இந்தப் போட்டி சென்னையில் நடைபெறவுள்ளது. இதற்கு முன்பு 1979ஆம் ஆண்டில் சென்னை ஜிம்கானா மைதானத்தில் டேவிஸ் கோப்பை போட்டி நடந்துள்ளது.

டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியை சென்னையில் நடத்தினால் பாதுகாப்பாக இருக்காது என்று அவுஸ்திரேலிய டென்னிஸ் சம்மேளனம், சர்வதேச டென்னிஸ் சம்மேளனத்திடம் முறைப்பாடு தெரிவித்திருந்தது. இதனால் இந்தப் போட்டி திட்டமிட்டபடி நடைபெறுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இந்த நிலையில் சர்வதேச டென்னிஸ் சங்க பாதுகாப்பு நிறுவன அதிகாரி ஸ்டீபன் ஷாட் கடந்த செவ்வாய்க்கிழமை சென்னை வந்தார். அவர் போட்டி நடைபெறும் இடம், வீரர்கள் தங்கும் ஹோட்டல், வீரர்கள் மைதானத்துக்கு வரவேண்டிய பாதை ஆகியவற்றை நேரில் ஆய்வுசெய்தார். அதோடு அவர் நேற்று முன்தினம் சென்னை மாநகர பொலிஸ் அதிகாரி ராதாகிருஷ்ணனை சந்தித்து ஆலோசனை நடத்தினார். அத்தோடு அவர் தமிழ்நாடு டென்னிஸ் சங்க நிர்வாகிகள் மற்றும் இந்திய டென்னிஸ் சம்மேளன நிர்வாகிகளைச் சந்தித்தும் பாதுகாப்புக்கு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்தும் விவாதித்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி அனுமதி- 2009 நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம்

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு கிறிஸ்தவம், இந்துசமயம், கணிதம் (தமிழ் மொழி மூலம்) விஞ்ஞானம் (தமிழ் மொழிமூலம்), விவசாயம் ஆகிய பாட நெறிகளுக்கான நேர்முகப்பரீட்சை ஏப்ரல் 15, 16 ஆம் மற்றும் 17ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும் என்று யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி திரு.எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார்.

இவர்களுக்கான கடிதங்கள் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதியினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இக்கடிதங்களை பெற்றுக்கொள்ளாதவர்கள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பாடநெறிகளுக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:

### கிறிஸ்தவம்

ஜே.ரி.மேரிநிலோஜினி (வெற்றிலைக்கேணி), எம்.ஏ.வினோராஜ் (233, கீரி, மன்னார்), ஏ.ரி.டி.ருக்சி (யாழ்ப்பாணம்), எஸ். ஏ. சோபிகா (கூவில்), ஏ.அருள்வதனி (அல்லைப்பிட்டி), எஸ்.எம்.டயான் சலீம் (இருபாலை கிழக்கு), எம்.ஜே.மரீன் (ஆனைக் கோட்டை).

ஏ.யஸ்தினி (அல்லைப்பிட்டி), எஸ். பொய்சிபாமினி (யாழ்ப்பாணம்), ஏ.என். றமேஷ்காந் (பருத்தித்துறை), ஜீ.மேரிறொக் சியா (குடத்தனை), ஜே.சர்மலா (யாழ்ப்பாணம்), வி.யூடிற் பாமினி (கரணவாய் கிழக்கு), எஸ்.எட்வின் ராஜ் (குருநகர்), ஜே.நெவில் பிரியதர்சினி (யாழ்ப்பாணம்), கே.சபிதா (தெல்லிப்பழை).

எக்ஸ்.அஜந்தா (நாவாந்துறை), எம். கமிஷ்டா (குருநகர்), பி.யூட்கமில்டன் (யாழ்ப் பாணம்), ரி.ஜெனி (நாவாந்துறை), எஸ்.பால ரத்தினம் (உடுவில், மல்வம்), ஜே.டி.தங்க ராசா (மல்வம், உடுவில்), கே.விமலதர்சினி (புலோலி மேற்கு), ரி. ருக்சி அன்சியா (கோப் பாய் தெற்கு).

வி.மைக்கல்முத்து (குப்பிளான் தெற்கு), ஏ.ஜோய்ரோஸ் (யாழ்ப்பாணம்), பி.இயேசுராஜ் (நெடுந்தீவு), ஜே.ஜெயவதி (தர்மபுரம்), ஜெஎன்ஏ. நாயகம் (இளவாலை), பி.பிரிய தர்ஷினி (யாழ்ப்பாணம்).

### இந்து சமயம்

வி.லிமா (அல்வாய் கிழக்கு), பி.சுகந்தி (பொலிகண்டி), எஸ்.ரூபினி (புலோலி மத்தி) என்.சசீகரன் (தெல்லிப்பழை கிழக்கு) பி. அனுசிகா (திருநெல்வேலி), எஸ்.சிவராமலிங்கம் (வதிரி), ரி.சுகிர்தா (நெடுந்தீவு தெற்கு), எஸ்.சுதர்சனா (அரியாலை), எஸ். மாலதி (பொலிகண்டி மேற்கு), வி.மனோராஜ் (அல்வாய் தெற்கு), ஆர். கிருஷ்ணராஜ் (இணுவில் கிழக்கு), கே. கவாஸ்கர் (ஏழாலை).

ரி.நடராஜ் (அல்வாய் கிழக்கு), எஸ். துஷ்யந்தன் (அனலைதீவு-6), வி.கௌதமி (சாவகச்சேரி), ரி.பகீரதி (இளவாலை), என்.மகாலிங்கம் (மல்லாகம்), பி.பிரசாத் (நல்லூர்), ரி.தாரணி (அரியாலை), ஏ. நிரூசன் (ஸ்ரேசன் றோட், வவுனியா).

ஏ.பிரசாந்தன் (சிறுப்பிட்டி மேற்கு), எஸ். பிரவீனா (வண்ணார்பண்ணை), ஏ.சஜந்தன் (கோண்டாவில் கிழக்கு), எஸ். கஜமுகன் (மல்லாகம்), வி.ஞானசிங்கம் (இளவாலை), கே. அனுக்கிரகா (கரவெட்டி வடக்கு), வி.விதுசிகா (புலோலி தெற்கு), எஸ்.குருதரன் (அளவெட்டி தெற்கு), எஸ். ராதை (உடுவில் கிழக்கு).

ரி.மயூரன் (தும்பளை), கே.தாட்சாயினி (சுழிபுரம்), ரி.புஸ்பகாந்தன் (காரைநகர்), கே.சுரேஷ் (கரணவாய் மத்தி), ஆர்.சுகணன் (கொக்குவில்), ரி.சரணியா (வல்வெட்டி), எஸ்.பரணீதரன் (இணுவில் தெற்கு), எஸ். வித்தியதாசன் (மீசாலை கிழக்கு), எம்.சுரேந்திரன் (கந்தர்மடம்).

எஸ்.எஸ்.தவக்குமார்(காரைநகர்), ரி. தனரூபன் (அச்சுவேலி வடக்கு), எல். உஷாலினி (சுதுமலை மேற்கு), ரி.சிவராஜீவ் (விடத்தற்பளை), ரி.திணேஷ் (ஏழாலை மேற்கு), ரி.நிரோசா (மல்லாகம்), எஸ்.லக்ஷனா (கொக்குவில் மேற்கு), கே.சிவரூபினி (சிறுப்பிட்டி மேற்கு), எஸ்.தயாபரம் (அச்சுவேலி தெற்கு), எம்.நீபன் (மல்லாகம்).

எம்.சிவோத்தமன் (புலோலி தெற்கு), எம்.சர்மிலா (சரசாலை தெற்கு), எஸ்.திருமகள் (யாழ்ப்பாணம்), ஜே.நிரோஜா (யாழ்ப்பாணம்), எஸ்.சோபனா (மீசாலை வடக்கு), எஸ். தஜேோஜா (சிறுவிளான்), எஸ். சாந்தி (வல்வெட்டித்துறை), பி.தில்லைவனராஜா (மீசாலை மேற்கு), எம்.நர்மதா (நீர்வேலி மத்தி).

என்.தர்மலிங்கம் (அராலி தெற்கு), ஏ. அனுஷ்ரன் (புலோலி மத்தி), எஸ்.டினேஸ் (உசன்), எம்.யாழினி (சுன்னாகம் கிழக்கு), சி.தேவிகா (துன்னாலை தெற்கு),கே. பிரணவரூபன் (கந்தர்மடம்), வி.கிருஷாந் (வேலணை கிழக்கு), கே.தர்சினி (மிருசுவில்), ரி.வாகீசன் (ஏழாலை தெற்கு), எம்.லோகபரணி (அளவெட்டி வடக்கு).

ஜெ.ரம்மியா (துன்னாலை மத்தி), எஸ். வனஜா (தும்பளை மேற்கு), எஸ். சத்தியவான் (நவாலி தெற்கு), என். யாழினி (கொக்குவில் கிழக்கு), எஸ்.நித்தியா (சுதுமலை மேற்கு), எஸ்.சியாமளா (நீர்வேலி வடக்கு), எஸ்.சுகசினி (வட்டு.தெற்கு), எம்.எம்.டொமல்ரிடா (பண்டத்தரிப்பு).

ஈ.எம்.கௌசிகன் (யாழ்ப்பாணம்), வி. பிரியா (அராலி தெற்கு), எம்.டேவிற் டினேஸ் குமார் (அராலி வடக்கு), ஆர்.ஞானரூபி (அச்சுவேலி தெற்கு), கே.சிறிதரன் (நாகர்கோயில் தெற்கு), வி.ரி.இராமச்சந்தர் (நெல்லியடி கிழக்கு), எஸ்.கௌசியா (சுன்னாகம் தெற்கு), எஸ்.ஆர்.அருள்ராசா (காரைநகர்).

ரி.குகதீஸ்(சுன்னாகம் கிழக்கு), என். சிவரூபன் (மண்டுவில் வடக்கு), ஆர்.பிரசாந்தினி (ஏழாலை மேற்கு), பி.கஸ்தூரி (நெல்லியடி), எஸ்.ரேணுராஜ் (புலோலி தெற்கு), கே. திலீபன் (சாவகச்சேரி), ஐ.ஜெயரூபினி (கொழும்பு -6), பி.ஜீவசோதி (புலோலி தெற்கு), கே. ஜசிந்தா (கோண் டாவில் மேற்கு).

ஆர்.சுஜித்தா (சுன்னாகம் கிழக்கு), என். சகிலா (இமையாணன் வடக்கு), கே.லக்சனா (கரணவாய் வடமேற்கு), கே.லக்சனா (பன்னாலை), எஸ்.புஸ்பரூபா (உரும்பிராய் கிழக்கு), கே.ருக்ஷிகா (திருநெல்வேலி), பி. துர்க்கா (கரணவாய் தெற்கு), ரி.விஜயபிரகாஷ் (கோண்டாவில் மேற்கு), வி.யாழினி (தாவடி தெற்கு).

வி.வசந்துகா (கொக்குவில் கிழக்கு), எஸ். சபேசன் (புலோலி வட கிழக்கு), ரி.ரூபி (இணுவில் கிழக்கு), கே.வனுஜா (கோப்பாய் வடக்கு), ரி.சசிகரன் (கோண்டாவில் மேற்கு), எஸ். விஜிதா (மூளாய் தெற்கு), எஸ். சசீவன் (மண்டுவில் கிழக்கு), எஸ்.சர்மிலா (கரணவாய் கிழக்கு), எஸ்.கவிதா (புலோலி தெற்கு).

ஜே.நந்துஜா (மல்லாகம்), ரி.பிரசாந் (யாழ்ப்பாணம்), கே.மேசிலக்கி (அரியாலை மேற்கு).

(தொடரும்)

## தவக்காலச் சிந்தனை

உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் இன்று இயேசுநாதர் பாடுபட்டு மரித்த நாளான பெரிய வெள்ளி தினத்தை அனுஷ்டிக்கின்றனர். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

# இழப்பதால் பெறுவதும் மடிவதால் வாழ்வதும்

இன்றைய உலக வாழ்வு புலனின்பங்களால் கட்டமைக்கப்பட்டிருக்கின்றது. ஐம்புலன்களின் திருப்திக்காக மனிதன் அலைகின்றான். தன்னுடைய புலன்களின் தேவையைப் பூர்த்தி செய்ய அவன் கடுமையாக உழைக்கின்றான். புலன்களின் தேவைகளோ தொடர்ந்து அதிகரித்துக் கொண்டு செல்ல அவனும் திருப்திக்காகத் தொடர்ந்து அலைக்கழிகின்றான். இந்நிலையில் இன்றைய உலகு அடிப்படையில் மனிதனை ஒரு 'நுகரி' யாக மாற்றி விட்டிருக்கின்றது. நுகர்வுக் கலாசாரம்தான் இன்று அரசோச்சுகிறது. இதன் பின்னணியில் இருப்பது எனக்கே எனக்கு என்ற வாழ்வாகும்.

இப் பின்னணியில் ''தன்னுயிரைக் காத்துக் கொள்ள விரும்புகிறவன் அதனை இழந்து விடுகிறான். ஆனால் தன்னுயிரை இழப்பவனோ அதனைக் காத்துக் கொள்கிறான்'' என்கின்ற இயேசுவின் வார்த்தைகளும் இதற்குச் செயல் வடிவம் கொடுத்த அவரது மரணமும் புதிய நோக்கு ஒன்றை வழங்குகின்றன. இந்த உண்மையை புரிய வைக்க இயேசு கையாண்டது கோதுமை மணியின் உவமையாகும். கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியும் போதுதான் அதில் பல கதிர்களும் கதிர்கள் நிறைய பல மடங்கு மணிகளும் தோன்றுகின்றன. ஆனால் ஒரு கோதுமை மணி மண்ணிலே தன்னைக் கரைத்துக் கொள்ள மறுக்குமானால் அதனிடமிருந்து புதிதாக பல மணிகள் தோன்ற வாய்ப்பில்லை. ஆக கொடுப்பதன் மூலம்தான் பெற்றுக் கொள்ள முடியும். மன்னிப்பதன் மூலம் மன்னிப்படைய முடியும். மடிவதன் மூலம் முடிவில்லா வாழ்வுக்கு உயிர்க்க முடியும்.

ஒரு தாய்க்குப் பசிக்கிறது. இருக்கும் உணவு முழுவதையும் அவள்தான் உண்டு விட்டால் அவளுக்குக் கிடைப்பது புலன் திருப்தி. ஆனால் அந்த உணவை பிள்ளைகளுக்குக் கொடுத்து விட்டு அவை அமைதியாக உறங்குவதைக் கண்டு நிறைவடைவது அக மகிழ்வு. புலன் திருப்தி பெறுவதால் வருவது, ஆனால் அகமகிழ்வு கொடுப்பதால் கிடைப்பது. எங்களுள் எத்தனை பேர் கொடுப்பதால் வரும் அகமகிழ்வை அனுபவித்து வருகின்றோம்?

கானான் நாட்டை வடக்குத் தெற்காக ஊடறுத்துச் செல்கிறது யோர்தான் நதி. அந்த நதி இரண்டு ஏரிகளுக்கு நீரை வழங்குகின்றது. ஒன்று கலிலேயா ஏரி, மற்றையது சாக்கடை. இரண்டும் ஒரே நதியில் இருந்து நீரைப் பெற்றுக்கொண்டாலும் கலிலேயா ஏரி உயிர்த் துடிப்பானதாக இருக்கின்றது. அதில் நிறைய மீனினங்கள் வாழ்கின்றன. அது பலருக்கு வாழ்வு கொடுக்கின்றது. அதனைச் சூழ பழ மரங்கள் இருக்கின்றன. மொத்தத்தில் அது ஒரு வாழ்வின் மையமாகத் திகழ்கின்றது. ஆனால் சாக்கடலோ மரணத்தின் வாசல் போல இருக்கின்றது. அதில் உயிரினங்கள் ஏதும் வாழ்வதில்லை. அதனைச் சூழவும் மரணத்தின் நிழலே படிந்திருக்கிறது. ஒரே ஆற்றிலிருந்து நீரைப் பெற்றுக்கொள்ளும் இரு ஏரிகளும் ஏன் இவ்வாறு முரண்படுகின்றன என்று வினா எழுப்பும் ஒரு ஆங்கிலக் கவிஞர் கூறும் காரணம் இதுவே; கலிலேயா ஏரி, தான் பெற்றுக்கொள்ளும் நீரை தானே வைத் துக்கொள்ளாமல் வழங்குகிறது. கொடுப்பதனால் அது வாழ்வின் மையமாகத் திகழ்கின்றது. ஆனால் சாக்கடல் தான் பெற்றுக்கொள்ளும் நீரை தனக்கென்றே வைத்துக்கொள்வதால் அது மரணத்தின் உறைவிடமாக மாறிவிட்டது.

தன்னையே கொடுப்பவன் வாழ்வின் ஊற்றாகின்றான். ஆனால் தனக்கென்றே வாழ்பவன் மரணத்தின் வழியாகின்றான். இயேசுவின் சிலுவை மரணம் அவரை வாழ்வின் ஊற்றாக்கியது. இயேசுவின் மரணத்தை நினைவுகூரும் இந்த நாளில் இயேசுவின் இந்தத் தற்கொடை மனப்பாங்கு எம்மிடம் எவ்வளவு தூரம் உண்டு என்பதைச் சிந்தித்துப் பார்ப்போம்.

அருட்பணி ம.வி.இ.இரவிச்சந்திரன்.

# கன்ம வினை உண்டென்பது இந்து மத நம்பிக்கை

நாம் எல்லோரும் பரம்பொருளைப் பற்றிய உண்மையான ஞானத்தைப் பெறமுயல வேண்டும். உலக வாழ்வில் நாம் பெறும் இன்பம் அல்லது சுகம் நித்தியமாக நிலைத்து நிற்பதில்லை. மரத்தின் கிளைகள் ஆடும்போது இடுக்கு வழியாக வரும் வெளிச்சம், அடுத்த நிமிடம் முகில் வந்து மூடிக்கொள்வது போல உலகத்தில் துன்பத்துக்கு நடுவில் கொஞ்சம் இன்பம் தலையை எட்டிப் பார்த்துவிட்டு ஓடிமறைகிறது. ஆனால் நிரந்தர இன்பம் என்பது உலகத்திற்கு காரணனான இறைவன் ஒருவனை அறிந்து கொள்வதனாலேயே ஆகும்.

உலக வாழ்வில் சகல மனிதர்களுக்கும் அளவில்லாத கஷ்டங்கள் உண்டாகத்தான் செய்யும். செல்வந்தர் உயர் பதவியில் உள்ளவர்களுக்கு கஷ்டம் இல்லை என்று மற்றவர்கள் நினைக்கலாம். அப்படி நினைத்துத் தாமும் பணக்காரனாக வரப்பாடுபடலாம்.

ஞானக்கதிர்

ஆனால் பணக்காரனை, உயர் பதவியில் உள்ளவனைக் கேட்டால் தெரியும் அவனுக்கு இருக்கும் கஷ்டங்களை. பணம், பதவி உள்ள போது இருக்கும் மகிழ்ச்சியிலும் பார்க்க, அப் பணம், பதவி பறிபோகக் கூடாது என்ற கவலை அவனை அதிகமாக வாட்டும். ஒருவன் தானே புத்திசாலி, தானே யோக்கியன், தானே அழகுள்ளவன் என்று தனக்குள் நினைத்துக் கொண்டு இருப்பது போலவே, துக்கம் உள்ளவனும் நினைக்கிறான். ஆனால் துக்கம் உடன் பிறப்பு. நம் பூர்வ கன்மமே இதற்குக் காரணம். இதிலிருந்து ஒருவரும் தப்ப முடியாது. கன்மத்தை அனுபவித்தே தீர வேண்டும்.

ஒருவனுக்கு ஒரு நோய் ஏற்பட்டால், வைத்தியர் ஒரு காரணம் கூறுவார், மனோதத்துவ நிபுணர் மற்றொரு காரணம் சொல்வார். மந்திரவாதி தெய்வக் கோளாறு என்பான், சோதிடன் கிரக பலன் என்பான், ஆன்மீகவாதி கன்மத்தின் பலன் என்பார். இப்படியாக நமது வாழ்வில் வரும் துன்பங்களுக்குப் பலரும் பல காரணங்களைக் கூறுவதால் நமக்குக் குழப்பமும் ஏற்படுகிறது. இப்படியான காரணங்களில் எது சாத்தியம் என்று சிந்தித்தால் எல்லாம் சரிபோலத்தான் தோன்றும்.

ஆனால், இவை எல்லாவற்றிலும் ஆதிகாரணமாக அமைவது நமது கன்மம் என்பது தான் நிச்சயம். அந்தக் கர்மா தான் பல விளைவுகளை உண்டாக்குகின்றது. மழை பெய்வது ஒரு நிகழ்வு. அதன் காரணமாகப் பூமி ஈரமாதல், ஈசல் வெளிவருதல், தவளை கத்துதல், புல் பூண்டு தளிர்தல், சில பொருள்கள் அழுகுதல், இப்படியாக பல விளைவுகள் ஏற்படுகின்றன. எனவே இப்படியாக பல விளைவுகள் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் மழையாகும். விஞ்ஞான ரீதியாகவோ அல்லது இயற்கையாகவோ ஒரு விளைவு (Effect) இருந்தால் அதற்கு ஒரு காரணம் (Cause) இருந்தே ஆக வேண்டும். நோய் மாத்திரமல்ல எமது வாழ்வில் பணத்தால், பதவியால், தேக பலத்தால், அறிவுச் சக்தியால் பல பிரச்சினைகள், கஷ்டங்கள் ஏற்படுகின்றன. எனவே துன்பம் என்பது விளைவு, கன்மம் என்பது காரணம்.



காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேர்த்திருவிழாவில் சோமஸ்கந்தர் தனது பரிவார மூர்த்திகளுடன் தேருக்கு எழுந்தருளுவதை முதலாவது படத்திலும், பஞ்சரதங்கள் பவனி வருவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.
மறுநாள் புதன்கிழமை அதிகாலை நடைபெற்ற நடேசர் [illegible] உலா வருவதை அடுத்துள்ள படத்தில் காணலாம்.
(படங்கள்: தர்னிகா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுடர் சிந்தனை :- " அன்பினால் உலகையே வெல்ல முடியும் "

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும்

# இலகுவழி ஆங்கிலம்

**BY Pon. Sakthivel AIAB (Lond) ACEA (Lond) Special English Trained Teacher (E.S.U Sri Lanka.)**

## Last week continuity.....

**CAN - QUESTION FORM**

**CAN வினாவாக்கியங்கள்**

01. Can I swim?
என்னால் நீந்த முடியுமா?

02. Can you speak English?
உன்னால் ஆங்கிலம் பேசமுடியுமா?

03. Can she lift me up with one hand?
அவளால் என்னை ஒருகையால் தூக்கிவிட முடியுமா?

04. Can you borrow my car if you want?
நீ/நீங்கள் விரும்பினால் என்னுடைய காரை உன்னால்/உங்களால் இரவல்பெற முடியுமா?

05. Can anybody learn to cook?
எவராலும் சமையல்செய்யக் கற்றுக்கொள்ளமுடியுமா?

06. Can I look and do it?
என்னால் அதைப்பார்த்து செய்யமுடியுமா?

07. Can you repair my car tomorrow?
என்னுடைய காரை உன்னால்/உங்களால் நாளைக்குத் திருத்தமுடியுமா?

08. Can we talk about that later?
நாங்கள் அதுபற்றி பின்னர் பேசுவோமா?

09. Can I speak Sinhala?
என்னால் சிங்களம் பேசமுடியுமா?

10. Can you play the Piano?
உன்னால்/உங்களால் பியானோ வாசிக்கமுடியுமா?

11. Can anybody visit a prison?
எவரும் சிறைச்சாலைக்கு பார்வையாளராகச் செல்லமுடியுமா?

12. Can we forget all about it?
நாங்கள் இதைப்பற்றிய எல்லாவற்றையும் மறந்துவிடலாமா?

13. Can we meet again tomorrow?
நாங்கள் திரும்பவும் நாளைக்கு சந்திக்கமுடியுமா?

14. Can you drive a lorry?
உங்களால் லொறி ஓட்டமுடியுமா?

**CANNOT வாக்கியங்கள்**

01. I can't swim.
என்னால் நீந்தமுடியாது.

02. You can't speak English.
உன்னால்/உங்களால் ஆங்கிலம் பேசமுடியாது.

03. She can't lift me up with one hand.
அவளால் என்னை ஒருகையால் தூக்கிவிடமுடியாது.

04. You can't borrow my car even if you want to.
நீ/நீங்கள் விரும்பினாலும் எனது காரை உன்னால்/உங்களால் இரவல் பெறமுடியாது.

05. Anybody can't learn to cook.
எவரும் சமையல்செய்ய கற்றுக்கொள்ளமுடியாது.

06. Look I can't do it.
இதோபார் என்னால் இதைச் செய்யமுடியாது.

07. We can't repair your car tomorrow.
எங்களால் உம்முடைய/உங்களுடைய காரை நாளைக்குத் திருத்த முடியாது.

08. We can't talk about that later.
நாங்கள் அதுபற்றிப் பின்னர் பேசமுடியாது.

09. You can't come to the party on sunday.
உன்னால்/உங்களால் ஞாயிற்றுக்கிழமை விருந்துக்கு வரமுடியாது.

10. I can't speak Sinhala.
என்னால் சிங்களம் பேசமுடியாது.

11. Anybody can't visit a prison.
எவராலும் சிறைச்சாலைக்கு பார்வையாளராகச் செல்லமுடியாது.

12. We can't forget all about it.
இதைப்பற்றிய எல்லாவற்றையும் நாங்கள் மறந்துவிடமுடியாது.

13. We can't meet again tomorrow.
நாங்கள் திரும்பவும் நாளைக்குச் சந்திக்கமுடியாது.

14. I can't have a drop more wisky.
என்னால் மேலும் ஒருசொட்டு விஸ்கிகூட எடுக்கமுடியாது.

**Auxiliary Verbs - Must, Musn't**

துணை வினைச்சொற்கள் - கட்டாயமாக, கட்டாயமாகவல்ல

| | | | |
|---|---|---|---|
| **I** | | | **go.** |
| **We** | | | **work.** |
| **You** | **must** | | **play.** |
| **They** | | **walk.** | |
| **He** | **musn't** | | **speak.** |
| **She** | | | **write.** |
| **It** | | | **stop.** |

01. I must go. — I musn't go.
நான் போகவேண்டும். — நான் போகக்கூடாது.

02. We must work. — We musn't work.
நாங்கள் வேலை செய்யவேண்டும். — நாங்கள் வேலை செய்யக்கூடாது.

03. You must play. — You musn't play.
நீ/நீங்கள் விளையாடவேண்டும். — நீ/நீங்கள் விளையாடக் கூடாது.

04. They must walk. — They musn't walk.
அவர்கள் நடக்கவேண்டும். — அவர்கள் நடக்கக் கூடாது.

05. She must write. — She musn't write.
அவள் எழுதவேண்டும். — அவள் எழுதக்கூடாது.

06. We must go to the bank today.
நாங்கள் இன்று வங்கிக்குச் செல்லவேண்டும்.

07. I must hurry, I musn't be late.
நான் அவசரமாகச் செல்லவேண்டும், தாமதமாகக்கூடாது.

08. It's a fantastic film. You must see it.
இது ஒரு திறமானபடம். நீ/நீங்கள் கட்டாயமாகப் பார்க்கவேண்டும்.

09. I musn't forget to phone Joseph.
நான் ஜோசப்புக்கு போன்பண்ண மறக்கக்கூடாது.

10. Be happy, you musn't be sad.
சந்தோஷமாக இரு, கவலை கொள்ளக்கூடாது.

11. You must not touch the picture.
நீ படத்தைத் தொடக்கூடாது.

12. I must get up at four o'clock tomorrow.
நான் நாளை நான்குமணிக்கு எழும்பவேண்டும்.

**Must** எனும் **auxiliary Verb.** நான்கு பொருட்களில் பயன்படுகிறது. கடமை, உறுதி, நிச்சயம், கட்டாயம்.
**Duty, Determination, Certainty, Compulsion**

01. We must obey orders.
நாங்கள் உத்தரவுகளுக்குப் பணிந்து நடக்க வேண்டும்.

02. I must do my duty.
நான் என்னுடைய கடமையைச் செய்யவேண்டும்.

03. I must be independent.
நான் சுதந்திரமாக இருக்கவேண்டும்.

04. You must work.
நீ/நீங்கள் வேலை செய்தாகவேண்டும்.

05. He must come today.
அவன் இன்று வரவேண்டும்.

இவற்றின் தொடர்ச்சி எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலகுவழி ஆங்கிலம் - 14 இல் வெளிவரும்.

**மேலதிக தொடர்புகளுக்கு :-**
**உதயன் கல்விச்சுடர்,**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி -**
**071-4273035, 021-2223837**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த வாரம் மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம் ஆகிய ராசிகளுக்கான பலன்கள் பிரசுரமாகி இருந்தன. இவ் வாரம் சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம் ஆகிய ராசிகளுக்கான பலன்கள் பிரசுரமாகி உள்ளன. அடுத்த வாரம் மிகுதி பிரசுரிக்கப்படும்.

# 'விரோதி' ஆண்டுக்கான பொதுப்பலன் 2009



(கடந்த வாரத் தொடர்ச்சி)

### இடையூறுகள் அகலும்! இறைவழிபாடு சிறக்கும்!!




இது உங்களுக்கு விரோதி ஆண்டு என்பதைவிட விடுதலை ஆண்டு என்றே சொல்லலாம். ஏழரைச் சனியின் பிடியில் பிணைக் கைதியாக இருந்த நீங்கள் இந்த ஆண்டு அதற்கு 'டாடா' செரல்லப் போகிறீர்கள். நான்கு ஆண்டுகளாக நீங்கள் பட்ட கஷ்ட நஷ்ட, துன்ப துயரங்கள் கொஞ்சமா நஞ்சமா? தொழில் அதிபராக வலம் வந்த நீங்கள் நிறுவனங்களை மூடவேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டீர்கள். ஒத்துழையாமையால், தொழிலாளர்களால் நீங்கள் பட்ட அவஸ்தைகள் எத்தனை? எத்தனை? சொத்து அடமானம் என்று மாட்டிக்கொண்டு இன்னமும் அவதிப்பட்டுக்கொண்டுதானே இருக்கிறீர்கள். பொன்னாபரணங்கள், விலை உயர்ந்த பொருட்கள் எல்லாமே அடவுகடை ரசீதுகளாக அல்லவா இருக்கின்றன.

**நல்ல விடியல்**

தண்ணீர் இல்லாக் காட்டுக்கு இடமாற்றம் ஏற்பட்டு அல்லல்பட்ட உத்தியோகத்தர்கள் எத்தனை பேர்? வீண்பழி சுமந்து பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்? விடிந்தால்கூட கடன் காரன், நீதிமன்றம், காவல் நிலையம், மருத்துவமனை இப்படித்தானே ஓடிக் கொண்டிருக்கிறீர்கள். கணவன் மனைவி பிரிவு, பிள்ளைகளால் ஏற்பட்ட அவமானங்கள் சொல்லவும் வேண்டுமோ சோதனைகளை!

ஆறாமிடத்து ராகுவும், பன்னிரண்டில் இருக்கும் கேதுவும் அவ்வப்போது மாறும் குருவும் உங்களை காப்பாற்றவில்லை என்றால் உங்களைப் பார்க்கவே அதாவது உயிருடன் பார்க்கவே முடியாது. மேலே சொன்ன கெடு பலன்கள் தசாபுத்தி அனுகூலமானவர்களுக்கு குறைவாக நடந்திருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள், கலைஞர்கள், அரசியல்வாதிகள், தொழிலாளர்கள், வியாபாரிகள் அனைவருக்கும் மேற்சொன்னவை பொருந்தும். 'ஏன் இந்த பொழுது விடிய வேண்டும்' என்று இருந்த இந்த ராசிக் காரர்களுக்கு இந்த விரோதி ஆண்டு நல்ல விடியலின் ஆரம்பமாக வந்து இருக்கிறது.

01.05.2009 இல் மாறும் குருவும், 09.09.2009 இல் மாறும் சனியும் ஏற்கனவே நல்ல இடத்தில் இருக்கும் ராகுவும், கேதுவும் உங்களுக்கு இனி நல்ல பலன்களை வாரிவழங்கப் போகிறார்கள். இன்னும் சனி முழுமையாக விடுதலை அடையவில்லையே என்று ஆதங்கப்படக்கூடும்.

**முன்னேற்றம்**

அப்புறம் என்ன? உங்கள் சொல்லும், செயலும். ஊக்கமும், ஆக்கமும் இனி களைகட்டி நடைபோடும் என்பதில் ஐயமே இல்லை. நிதி நிறுவனங்களின் ஒத்தாசையால் மீண்டும் தொழில் ஆரம்பமாகப் போகிறது. பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் அமர்த்தப்படுவீர்கள். அநேகருக்கு புதிய தொழில், புதிய வேலை வாய்ப்பு எல்லாமே தேடிவரப் போகின்றன.

தடைப்பட்ட படிப்பு திருமணம் எல்லாமே இனி வெற்றிகரமாக நடக்கப் போகின்றன. இழந்து போன சுகம், மானம் மரியாதை எல்லாம் மீண்டும் வரப்போகின்றன. உங்களைக் காண்பதற்கு ஆயிரம் கண்களிருந்தாலும் போதாது போலிருக்கிறதே.

* * *

### வேகமும் வேண்டும்! விவேகமும் வேண்டும்!!




இந்த ஆண்டு உங்க்ளுக்கு விரோதியே நட்புக்கரம் நீட்டும் ஆண்டாக மலர்கிறது என்றால் அது மிகையாகாது. புதனுடைய ஆதிக்கம் மிகுந்த ஆண்டாக இது வந்தால் பரந்தாமன் அருள் உங்களுக்கு எப்போதும் கிடைக்கும் என்பது தெளிவாகத் தெரிகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக நடந்து வரும் விரையச்சனி இந்த ஆண்டு 09.09.2009 இல் ஜென்மச்சனியாக வருவதாலும் உங்கள் ராசி புதனுடைய ராசி என்ப தாலும் திருமகள் அதிகம் வரக் காரணமில்லை. இப்போது இருக்கும் விரையச்சனியும், ஐந்தாமிட ராகுவும் பதினொன்றாமிடத்து கேதுவும் பெரிய ஏற்றத்தை உண்டு பண்ணப் போவதில்லை. பெரிய இறக்கத்தையும் உண்டு பண்ணப் போவதில்லை.

**வேகம் நிறைந்தது**

நீங்கள்தான் சின்ன பாம்பாக இருந்தாலும் பெரிய தடிகொண்டு அடிப்பவராயிற்றே! அப்புறம் என்ன கவலை. இனி வருங்காலம் சிலருக்கு கண்டச்சனியாகவும், சிலருக்கு அஷ்டமத்துச் சனியாகவும், சிலருக்கு ஏழரைச்சனியாகவும் இருக்கும். அதற்காக எல்லா ராசிக்கும் ஒரே பலனைச் சொல்ல முடியாது. கன்னிக்கு ஆறாம்பதியாகி பன்னிரண்டில் நன்மையேயாகில் தீமை இல்லை. இந்த ஆண்டின் முன் பகுதியானாலும், பின்பகுதியானாலும் ஒரு வேகம் நிறைந்த ஆண்டாவே கொள்ளல் வேண்டும்.

குடும்ப மகிழ்ச்சி, கணவன் மனைவி

கணித்தவர் சோதிட ஆசான்
பாரதிமோகன்

ஒற்றுமை, பிள்ளைகளின் மேன்மை, செய்யும் தொழிலில் கூடுதலான வளர்ச்சி, கட்டட வாகனங்கள் விஸ்தரிப்பு, சுபகாரிய நிகழ்ச்சிகள், சொத்துக்கிரய விக்கிரயம், நகை நட்டு ஆபரணச்சேர்க்கை, அடிக்கடி பணிமாறியவருக்கு நிரந்தரபணி, அன்னிய நாட்டு வேலைவாய்ப்பு, ஏற்றுமதி இறக்குமதி தொழிலில் பெரிய முன்னேற்றம் காணுதல், சொந்த பந்தங்களின் சுகமான அனுபவங்களைக் கண்டறிதல் போன்ற நல்ல பலன்களாகவே நடைபெறும்.

**ஆபத்து**

இருந்தாலும் 09.09.2009 இல் இடமாறும் சனியும், 17.11.2009 இல் இடம் பெயரும் ராகுகேதுவும், 19.12.2009 இல் இடம் பெயரும் குருவும் சிறப்பு விதிப்படி சில தீமைகளை செய்யாமல் விடமாட்டார்கள் என்பது மட்டும் உண்மை. சனியால் குடும்பத்துக்குள் சமையல் எரி வாயு உபயோகப்படுத்துவதில், மின்சாரப் பொருட்களை உபயோகப்படுத்துவதில், குளியலறையில் குளித்து வருவதில் ஆபத்து நேர்ந்துவிட வாய்ப்புண்டு

வீட்டில் தனியாக இருக்கும் பெண்களுக்கு வேலைக்காரியால் ஆபத்து வர வாய்ப்புண்டு. வீட்டுக்கு வெளியே நின்று கொண்டு முகவரி கேட்போர், தண்ணீர் கேட்போர் யாரையும் உள்ளே அனுமதிக்காமல் ஜன்னல் வழியே பரிமாற்றங்களை முடித்துவிடுவது நல்லது. தனியே உள்ளே அழைத்துப் பேசுவது ஆபத்தாக முடிந்துவிடும். திருட திட்டம் போட்டது ஓரிடத்தில், திருட்டு நடப்பது இங்கே. சனி திருடர்களை அழைத்துக்கொண்டு இங்கே விட்டுவிடுவார். எனவே விவேகமாகச் செயற்படுங்கள்.

வாகனங்களில் நெடுந்தூரப்பயணம் செய்வதை தவிர்க்க வேண்டும். மாணவ-மாணவியர், படிக்கும் இடத்தில் சக மாணவர்களிடம் உஷாராகப் பழகவேண்டும். பெண்கள் பணிசெய்யும் இடத்திலும் உஷார்நிலை தேவை. கலைஞர்கள், அரசியல்வாதிகள், தொழிலாளர்களுக்கும் மேற்சொன்னவை பொருந்தும்.

* * *

### இதுவரை ஆமை நடை! இனிமேல் அசுர நடை!!




நீதிபரிபாலனத்துக்குரிய தராசு சின்னத்தை அடையாளமாகக் கொண்ட உங்களை கடந்த சர்வதாரி ஆண்டு எடைபோட்டு படி அளந்து கொண்டிருக்கின்றது. ஆனால் இந்த விரோதி ஆண்டு நீங்கள் எடைபோட்டு எத்தனை நல்ல பலன்களை அனுபவிக்கப் போகிறீர்கள் என்பதைக் கணக்குப் போடும் ஆண்டாக நடைபோடப் போகிறது என்பது மட்டும் உண்மை.

கடந்த ஆண்டில் சனி ஒன்றைத்தவிர ஏனைய கிரகங்கள் அவ்வளவு சாதகமான சூழ்நிலையில் இல்லாமல் இருந்ததால் வேகம் குறைந்த காலமாகவே காணப்பட்டது. அடுத்து சூரியன் ஆறாமிடம் வந்ததால் உங்கள் எதிர்காலத்துக்கு வேண்டிய நல்ல வாய்ப்புக்களை கிரகங்கள் உருவாக்கும் என்ற நம்பிக்கை வந்தது. அது தவறில்லை.

01.05.2009 இல் குரு அதிகார ஓட்டத்தில் உங்களுக்காக வருவதைப் போல குடும்பத்துக்கு வருவது உங்களுக்கு யோகத்தை வாரி வழங்கப் போகிறது. நீங்கள் போட்டிருக்கும் திட்டங்களுக்கு, நடத்திக்கொண்டிருக்கும் நிறுவனங்களுக்கு தேவையான பொருளாதாரத்தை கும்ப குருவால் பார்க்கப்பட்ட சனி இனி வாரி வழங்கப் போகிறார்.

**குதூகலம்**

ஆமை நடைபோட்ட தொழில் நிறுவனங்கள் இனி அரச நடைபோடப் போகின்றன. பணிசெய்யும் தொழிலாளர்கள் ஒத்துழைப்பு மேலோங்கி நிற்கிறது. உத்தியோகத்துறையில் உயர்ந்த நிலையை அடையப் போகிறீர்கள். குடும்பத்தில் குதூகலம் தாண்டவமாடப் போகிறது. பிள்ளைகளின் மேன்மை பேரின்பத்தை தரப்போகிறது. வீட்டில் திருமண நிகழ்ச்சிகள் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் தீவிரமாகக் காணப்படுகின்றன.

வாங்கிப் போடப்பட்ட மனைகளில் வீடு கட்டும் முயற்சி தொடங்கும். பெரும் விலை வாகனயோகம் அல்லது நீண்ட நிலப்பரப்பாக பூமி வாங்கும் யோகமும் அமையப் போகிறது. தாய் தந்தையர் அரவணைப்பு. பூர்வீக சொத்துக்களால் ஆதாயம் அல்லது பிரச்சினைகள் தீர்ந்து நல்ல தீர்ப்பை பெறுதல், கௌரவமும் அந்தஸ்தும் உயர்ந்து உயர்வான நிலைக்கு வருவீர்கள் என்றால் அது மிகையாகாது. சிலருக்கு இரண்டாம் தார மனைவி அமைதல் அல்லது சொத்துள்ள தாரத்தால் சுகங்காண்பது போன்ற பலன்களும் நடைபெறும்.

நீண்ட காலமாக குழந்தைப் பேறு இல்லாதவர்களுக்கு குழந்தைப் பாக்கியமும் அல்லது தத்துப்பிள்ளை யோகமும் கிடைக்கும். ஒன்பதுக்கு ஒன்பது குரு அமர்ந்து ஒன்பதாமிடத்தை பார்ப்பது கடல் கடந்து வாழும் யோகம் அல்லது கடல் கடந்த வணிகம் வேலைவாய்ப்புக்களுக்கு இது ஏற்றகாலமாக அமையும்.

**திருமண விசேஷங்கள்**

குரு மறுபடியும் 30.07.2009 இல் மகரத்துக்கு பெயர்ச்சி அடைந்தாலும் 19.12.20009 இல் மறுபடியும் கும்பத்துக்கு வந்து தங்கப்போவதாலும் 17.11.2009 இல் ராகு உங்களுக்கு மூன் றாமிடத்து ராகுவாகவும் கேது ஒன்பதாமிடத்து கேதுவாகவும், வருவதாலும் 09.09.2009 இல் பெயரப்போகும் விரையச் சனியைப்பற்றி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. மேற்சொன்ன பலன்கள் மாறாமல் நடக்க குருவும் ராகுவும் பார்த்துக் கொள்வார்கள்.

விரையச்சனியால் வீடு கட்டுதல், திருமண காரியங்கள் போன்ற சுப விரயங்கள்தான் நடக்கும் என்பதால் கவலை இல்லை.

* * *

### யோகம் வரும்! செல்வம் குவியும்!!




இந்த ஆண்டு சித்திரை மாத ஆறாமிடத்துச் சூரியன் பாஸ்க்கரா யோகாம்சத்தில் உதயமாக இருப்பதால் வெற்றிப் புன்னகையோடு வலம்வரப் போகிறீர்கள் என்பது உறுதியாகி விட்டது.

இப்போது தொழிலில் உத்தியோகத்தில் நிலவி வரும் பல குழப்பங்கள் இனி ஆறாமிடத்துச் சூரியனால் படிப்படியாக மாறப் போகின்றன. மூன்றாமிடத்துக் குருவும் ராகுவும் சண்டாள ராஜயோகத்தால் உங்களது முட்டுக்கட்டைகளை முறியடித்துக்கொண்டு இருப்பதால் இனி கவலைப்படத் தேவையில்லை

செவ்வாயின் பார்வையிலிருந்து பத்தாமிடத்துச் சனி விடுதலை அடைந்து விட்டதால் இனி தொழில் உத்தியோகம் சிறப்பாகவே நடைபெறும். களத்திரகாரகன் சுக்கிரன் உச்சம் பெற்று நிற்பதும் அவனே வர்த்தக பங்குதாரனாகவும் இருப்பதால் தொழிலாளர்கள் ஒத்துழைப்பு, பங்குதாரர்கள் ஒத்துழைப்பு, உத்தியோகத்தில் சக ஊழியரின் ஒத்துழைப்பு ஆகியவை நன்றாகவே நடைபெறும் என்பதால் இப்போது நீங்கள் முன்னேற்றப்பாதையை நோக்கித்தான் போய்க் கொண்டிருக்கிறீர்கள்.

**பணம் சேரும்**

களத்திர ஸ்தானாதிபதி சுக்கிரன் உச்சம் பெற்று களத்திய ஸ்தானத்தை குரு பார்ப்பதால் கணவனுக்கு மனைவி வகை சம்பந்தத்திலோ, மனைவிக்குக் கணவன் வகை சம்பந்தத்திலோ பணச் சேர்க்கை, சொத்துடச் சேர்க்கை ஏற்படும் வாய்ப்புண்டு என்றே சொல்லலாம். மூன்றாமிடத்து ராகுவும் ஆறாமிடத்து ஐஸ்வர்யகாரகன் சூரியன் வங்கிக் கணக்கை விரிவாக்கம் செய்வதால் ஆன்மீக ஈடுபாடு, பொதுச்சேவை ஈடுபாடு, தர்ம காரியங்களில் பணம் செலவாகும் நேரம் என்றே சொல்லலாம். இது புகழ் அதிகரிக்கும் காலம் என்பதால் குடும்பத்தில் தொழில் ஸ்தானங்களில், சமுதாயத்தில் அந்தஸ்து என வலம் வருவீர்கள்.

ஒன்பதாம் இடத்தில் கேது அமர்ந்து குரு பார்ப்பதால் முஸ்லிம் நாடுகளில் இருந்து யோகமோ அல்லது முஸ்லிம் நாடுகளின் பாக்கியமோ கிட்டும் என்பது உறுதியாகிறது. 23.05.2009 இல் ஆறாமிடம் வரும் ராசிநாதன் பஸ்க்கரா அம்சத்தில் இருப்பதால் புதியனவாக பூமி சேர்க்கை, வீடு, மனை, வாகன சேர்க்கை ஏற்படும். சகோதரர்களால் கூட்டாளிகளால் பெரிய யோகத்தை வாரி வழங்கும் என்பதால் சந்தேகமே இல்லை.

**திடீர்யோகம்**

09.09.2009 இல் பதினொன்றாமிடம் போகும் சனியால் எதிர்பாராத திடீர் யோகங்கள் ஏற்படும். இளம் மனைவி அல்லது மூத்த சகோதரம், மருமகன், மருமகள், மற்றும் இன்ன பிற எத்தனையோ சுகங்களைப் பெறப் போகிறீர்கள் - குடும்பத்தில் தடைப்பட்டிருந்த திருமணம் சுப நிகழ்ச்சிகள், குதூகலம், கொண்டாட்டம்! அப்பப்பா எத்தனை மகிழ்ச்சி அலைகள். இன்னும் தசாபுத்தி அனுகூலமானவர்களுக்கு சொல்லவும் வேண்டுமா? மாணவ, மாணவிகள் கலைஞர்கள், அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், அனைவரும் வீறு நடைபோடும் ஆண்டு விரோதி ஆண்டு என்று சொன்னால் மிகையாகாது?

*(மிகுதி அடுத்த வாரம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 13.08.1938 மறைவு 11.03.2009

**10-04-2009**

எமது சித்தப்பா சிவப்பேறடைந்த போது பிரிவுத்துயரில் நேரடியாகக் கலந்துகொண்டு ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், தந்தி, தொலைபேசி மூலமாகவும், பத்திரிகை வாயிலாகவும் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தோருக்கும், எம்முடன் தோள்கொடுத்து உதவிகள் வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (10.04.2009) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீமான்

## அமரர் சரவணமுத்து இராசையா

(கைதடி வடக்கு கயிற்றசிட்டி கந்தசாமி கோயில் பரிபாலன சபைத் தலைவரும் ஸ்ரீகணேசா ஸ்ரோர்ஸ் முன்னாள் உரிமையாளரும்)

*"விழிநீரால் விண்ணவருக்கு ஒரு விண்ணப்பம்"*

வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வம் ஆகிவிட்ட ஆசை சித்தப்பாவே!
பிறந்தவர் இறப்பது நியதி
எனினும் தாங்கமுடியவில்லை உங்கள் பிரிவை
உறுத்துது எமது உள்ளங்களை
உருக்குது மனதை நாள்தோறும்
அன்பான குணமும் ஆணித்தரமான வார்த்தைகளும்
பேசியே வாழ்ந்த உத்தம மனிதர் நீங்கள்
உற்றாரும் ஊராரும் கேட்கின்றனரே உங்களை
எப்படிச் சொல்வோம் நீங்கள் சென்ற இடத்தை.

"குககிரி", கைதடி கிழக்கு, கைதடி. (84219)

திரு.திருமதி கந்தசாமி (பெறாமகள்) குடும்பத்தினர்.

## நலிவுற்றோர் நிவாரணம்

நவாலி,ஏப்.10

மானிப்பாய் ப.நோ.கூ. சங்கக் கிளைகளில் உலக உணவு ஸ்தாபனத்தின் நலிவுற்றோருக்கான நிவாரணம் தற்போது வழங்கப்படுகின்றது.

இம்முறை அரிசிக்குப் பதிலாக மா அதிகளவில் வழங்கப்படுகின்றதை அவதானிக்க முடிகிறது. (4-100)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

தென்மராட்சிப் பிரதேச செயலக தொழிற்பயிற்சிப் பிரிவினரால் பிரதேச இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்காக வீட்டு மின்னிணைப்பு, நீர்க்குழாய் பொருத்துதல், கட்டட நிர்மாணம் ஆகிய பயிற்சி நெறிகளுக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பிரதேச செயலக தொழிற்பயிற்சிப் பிரிவில் உரிய விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று ஏப்ரல் 20 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ விண்ணப்பிக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (4-207)

## உதவிப்பணம் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஏப்.10

தென்மராட்சிப் பிரதேச நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள பொதுசன மாதாந்த உதவி பெறும் 137 பேருக்கு நான்கு மாதக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

பிரதேச செயலக சமூகசேவைகள் பிரிவினரால் அந்தந்த நலன்புரி நிலையங்களில் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (4-207)


உங்களின் தோல் சுருக்கமடைகிறதா?
இதோ பாவியுங்கள்...
சந்தனாலேப்ப ஸ்கிரப் கிறீம்



காய்ந்து இறந்த தோலை நன்கு நீக்கி தூய்மையாக்கும் தோலுக்கு மருத்துவ போசாக்கை அளித்து சருமத்தை நோயற்றதாக்கி பொன்னிறமேற்றி அழகிய இளமைத் தோற்றத்தை பெற்றுத் தரும்.
சந்தனாலேப்ப ஸ்கிரப் கிறீம்
Chandanalepa Scrub Cream
100% herbal
'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).
MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.


## 16ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 26.03.2009 வியாழக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

### அமரர் சுந்தரமூர்த்தி நடராஜமூர்த்தி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (10.04.2009) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

"இரத்தின பவனம்", சுழிபுரம் வடக்கு, சுழிபுரம். (84191)

மனைவி, பிள்ளைகள்.


WESTERN UNION
மணி டிரான்ஸ்பர்

வெளிநாடுகளில் இருந்து வெஸ்டர்ன் யூனியன் மூலமாக அனுப்பப்படும் பணத்தை

ஒரு சில நிமிடங்களில் பெற்றுக்கொள்ள **யாழ்குடாநாட்டில்**

புத்தாண்டு **விடுமுறை நாள்களிலும்** MMBL மணி மாஸ்டர் நிலையங்கள்

அனைவருக்கும் எம்மினிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

உங்கள் வசதிக்காக **திறந்திருக்கும்!!**

**011 552 99 99 / 077 791 55 43**

*தேர்தெடுக்கப்பட்ட நிலையங்கள் மட்டும்

**MMBL Money Master**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனச் சுத்திகரிப்புக்கு எதிரான உடன்படிக்கையை உருவாக்க ஐ.நா.செயலர் பான் கீ மூன் அழைப்பு

ஜெனிவா, ஏப்.10

இனப்படுகொலைகள் எங்கு இடம் பெற்றாலும் அதனை தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு சர்வதேச சமூகத்துக்கு அழைப்பு விடுத்துள்ள ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூன், இனச் சுத்திகரிப்புக்கு எதிரான உடன்படிக்கைகளை உருவாக்குதல் மற்றும் இனப்படுகொலையில் ஈடுபடுவோரை நிறுத்துவதற்கான நீதி மன்றங்களை ஸ்தாபித்தல் போன்றவற்றுக்கான சிபார்சுகளையும் முன்வைத்திருக்கின்றார்.

ருவாண்டாவில் 1994 இல் இடம்பெற்ற படுகொலையின் 15ஆவது துன்பகரமான நினைவை முன்னிட்டு ஐ.நா.வில் இடம் பெற்ற நிகழ்விற்கு அனுப்பிய செய்தியில் இனப்படுகொலையை தடுப் பது ஒருமித்து மேற்கொள்ளகொள்ளப்பட வேண்டிய பொறுப்பு என்றும் பான்கிமூன் சுட்டிக் காட்டியுள்ளார்.

15 வருடங்களுக்கு முன்னர் ருவாண்டாவில் இறந்தவர்களின் நினைவுகளை கௌரவிப்பதும் தப்பி வாழ்வோர் தொடர்பாக பொருத்தமான தீர்மானத்தை எடுப்பதும் இந்தச் சவாலை எதிர்கொள்வதாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

1994ஆம் ஆண்டில் கிழக்கு ஆபிரிக்காவிலுள்ள சிறிய நாடான ருவாண்டா வில் படுகொலைகள் ஆரம்பமாகின. 8 இலட்சத்துக்கும் அதிகமான ருட்டுக்களும் குத்து மிதவாதிகளும் கொல்லப்பட்டனர். குத்து தீவிரவாதிகளாலேயே அநேகமானனோர் 100 நாள்களுக்கிடையில் பெருந்தொகையானோர் கொல்லப்பட்டனர்.

அப்படுகொலைகளிலிருந்தும் உயிர்த் தப்பி வாழ்வோரின் குரல்கள் எம்மனதை தொடுகின்றன. இதனை கூற வேறு வார்த்தைகள் இல்லை. 8 இலட்சத்துக்கும் மேற்பட்ட அப்பாவிகளின் ''மௌனம்'' தற்போதும் எமது சுய உணர்வுகளை குடைகின்றது என்று பான் கீ மூன் கூறியுள்ளார்.

மேலும் அட்டூழியங்கள் இடம்பெறாமல் தடுக்க ஐ.நா.மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் பான் கீ மூன் விபரித்திருக்கிறார்.

அதேசமயம் உலகில் எங்காவது இனப்படுகொலை இடம்பெறும் அறிகுறி உள்ளதா என்பது தொடர்பாக இனப்படுகொலையைத் தடுப்பதற்கான விவகாரத்தை கையாளும் தனது விஷேட ஆலோசகர் பிரான்சிஸ் டெங் தொடர்ச்சியாக கண்காணித்து வருவதாகவும் பான் கீ மூன் கூறியுள்ளார். (50)

# சீனி, பருப்பு உட்பட சில பொருள்களுக்கு அரசினால் கட்டுப்பாட்டு விலை நிர்ணயம்

கொழும்பு, ஏப்.10

சீனி மற்றும் பருப்பு உட்பட முக்கிய அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றுக்கு நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் கட்டுப்பாட்டு விலை விதிக்கப்படுவதாக வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:

புதுவருட காலத்தில் மோசடி வர்த்தகர்களிடமிருந்து நுகர்வோரைப் பாதுகாக்கும் நோக்கில் இந்தக் கட்டுப்பாட்டு விலைகள் அறிவிக்கப்படுகின்றன.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் 2003 இலக்கம் 9-20;5 ஷரத்துக்கு அமைய கட்டுப்பாட்டு விலைகள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வருகின்றன.

இதன்படி வெள்ளைச் சீனி ஒரு கிலோவுக்கான அதிகூடிய விலை 73 ரூபா எனவும் சகல விதமான பருப்பு வகைகளும் ஒரு கிலோவுக்கான அதிகூடிய விலை 175 ரூபாஎனவும் பட்டானிப் பருப்பு ஒரு கிலோவுக்கான அதிகூடிய விலை ரூபா 98.50, எனவும் புதிய வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பா அரிசி ஒரு கிலோ 70ரூபா எனவும் பச்சை மற்றும் நாட்டரிசி ஒரு கிலோ 60 ரூபா எனவும், பால்மா ஒரு கிலோ 637 ரூபா எனவும், 400 கிறாம் பால்மா 260 ரூபா, கோழி இறைச்சி ஒரு கிலோ 320 ரூபா, 50 கிலோ சிமெந்துப் பை ஒன்று 785 ரூபா எனவும் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருள்களைக் கூடுதல் விலைக்கு விற்கும் வர்த்தகர்கள் பற்றி 0112399146 என்ற தொலைபேசி இலக்கத்துக்கோ அல்லது சம்பந்தப்பட்ட பிரதேச அரசாங்க அதிபர் காரியாலயத்திற்கோ பொதுமக்கள் அறிவிக்க முடியும் என்றும் அமைச்சர் கூறினார். (50)

# வலி.கிழக்கில் 3 கோப் சிற்றிகள்

அச்சுவேலி, ஏப்.10

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூன்று கோப் சிற்றிகளை நாளை 11ஆம் திகதி சனிக்கிழமை திறந்து வைக்கவுள்ளது.

சங்கத்தின் தலைவர் க.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும் இத்திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் பிரதம விருந்தினராகவும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்கின்றனர்.

புத்தூர். கிழக்கு கோப்சிற்றி காலை 8.30 மணிக்கும், சிறுப்பிட்டி கோப்சிற்றி முற்பகல் 10 மணிக்கும், நவக்கிரி கோப் சிற்றி முற்பகல் 11 மணிக்கும் திறந்து வைக்கப்படவுள்ளது. (50-11)

# பால் விற்பனை நிலையங்களுக்கு 'நிக்கொட்' நிறுவனம் உதவி

யாழ்ப்பாணம், ஏப்.10

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பால் விற்பனை நிலையங்களுக்கு ''நிக்கொட்'' நிறுவனம் 47 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களை வழங்கியுள்ளது.

குடாநாட்டில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் குளிர்சாதனப் பெட்டி, இலத்திரனியல் உபகரணங்கள் எனப் பல்வேறு பொருள்களை வழங்கியுள்ளதாக ''நிக்கொட்'' நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நல்லூர், சண்டிலிப்பாய், உடுவில், சாவகச்சேரி, கரவெட்டி, யாழ்ப்பாணம், கோப்பாய், பருத்தித்துறை, வட்டுக்கோட்டை, தெல்லிப்பழை ஆகிய இடங்களிலும் உள்ள பால் விற்பனை நிலையங்களுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (50-9)

# பாதுகாப்பு வலயத்தில் சிக்கியுள்ள பொதுமக்களுக்கு போதிய குடிதண்ணீர், மருத்துவ வசதிகள் இல்லை

## செஞ்சிலுவைச் சர்வதேச குழு தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.10

வன்னிப் பாதுகாப்பு வலயத்தில் சிக்கியுள்ள அப்பாவிப் பொதுமக்களுக்கு போதிய குடிதண்ணீர் மற்றும் மருத்துவ வசதிகள் கிடைக்கப் பெறுவதில்லை என செஞ்சிலுவைச் சர்வதேச குழு அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுமாத்தளான் பிரதேசத்தில் சிக்கியுள்ள பொதுமக்கள் மருத்துவப் பொருள் தட்டுப்பாட்டினால் அல்லலுறுவதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இலங்கை கிளைப் பேச்சாளர் சரசி விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

மோதல் தவிர்ப்பு வலத்தில் சிக்கியுள்ள சில நோயாளிகள் ஆபத்தான நிலையில் காணப்படுவதாகவும் அவர்களுக்கு சிகிச்சையளிக்க போதிய மருத்துவ வசதிகள் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மோதல் தவிர்ப்பு வலயத்தில் சுமார் 100 சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சில மாதங்களில் கடல் வழியாகச் சுமார் 7500இற்கும் மேற்பட்ட பொதுமக்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு இடம் நகர்த்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (50)

# கல்விச் சாலைக் காட்சிகள்



வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான பிரிவுகள் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளார் எஸ்.செல்வராசா வாழ்த்துரை நிகழ்த்துவதையும் கல்லூரியின் அதிபர் திருமதி வி. சுகுமார் மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (50-9)



மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், பாடசாலை அதிபர் கா.குணசிங்கம் ஆகியோர் வெற்றி பெற்ற வீரர்களுடன் நிற்பதைப் படத்தில் காணலாம். (9)



இலங்கை சாரணர் சங்கம் பருத்தித்துறை மாவட்ட பேடன் பவல் நிகழ்வை அண்மையில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடத்தியது.

மாவட்ட சாரண ஆணையாளர் எம்.இரவீந்திரன், ப.வேணுஜன், பா.அருணன் ஆகிய சாரண மாணவர்களுக்கு மாவட்ட சாரண ஆணையளார் நூலிழை சூடப்பட்டு மதிப்பளிக்கப்பட்டபோது பாடசாலை அதிபர் இ.இராசசேகரம் மற்றும் உபஅதிபர், பொறுப்பாசிரியர்களுடன் எடுக்கப்பட்ட படம். (50-72)



கல்வியமைச்சினால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கணனி மென்பொருள் ஆக்கப் போட்டியில் வெற்றிபெற்ற சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய மாணவிகளைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பணிப்பாளர் எஸ்.கந்தசாமி மங்கள விளக்கேற்றுவதையும் பாடசாலை அதிபர் க.தர்மசோதி அருகில் நிற்பதையும், மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவி யோ.கௌதமிக்கு மானிப்பாய் ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் [illegible]ஜோலிலோறன்ஸ் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SALE SALE SALE SALE SALE

# மாபெரும் புத்தாண்டுச் சீறப்புத் தள்ளுபடி

ராசி சில்க்ஸ் , நல்லி சில்க்ஸின் இணைந்த சேவை
உங்கள் ரசனைக்கும் தேவைக்கும் ஏற்ப சகல வகையான
சாறிகள் , பஞ்சாபி அன் சோளிகள்,
சிறுவர்கள், இளையவர்களுக்கான றெடிமேட் ஆடைகள்
அனைத்திற்கும் இன்றே வாருங்கள்.

SALE

➤ இச்சிறப்புத்தள்ளுபடி ◄
9ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரையும்.

**ராசீ சில்க்ஸ்**
70,71A, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.

**நல்லீ சில்க்ஸ்**
121/1, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



SALE SALE SALE SALE

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்கக் கோருகின்றது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, ஏப்ரல்.10

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை அரசியல் யாப்பிலிருந்து நீக்கவேண்டும் என ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அரசியல் யாப்பிலிருந்து நீக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இது தொடர்பில் ஐ.தே.கவும் பலமுறை கருத்து வெளியிட்டிருந்தது. இன்றும் வலியுறுத்திக்கொண்டுதான் இருக்கின்றது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை அரசியல் யாப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியும் கோரிக்கை விடுத்திருந்தது. 1995 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அரசியல் யாப்பிலிருந்து நீக்கப்படும் என உறுதி அளித்திருந்தார். ஆனால் அது நீக்கப்படவில்லை.

தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்கும் போதும் இது தொடர்பில் யோசனை முன்மொழியப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மற்றும் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் இது குறித்துப் பல கருத்துகளை வெளியிட்டிருந்தனர். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை அரசியல் யாப்பிலிருந்து நீக்க தற்போதைய அரசும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அரசியல் யாப்பு மற்றும் அதிகாரங்கள் இன்று பலவீனமடைந்து காணப்படுகின்றன. 17 ஆவது அரசியல் யாப்பு சீர்திருத்தம் இந்நாட்டுக்கு முக்கியமானது. முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர். ஜெயவர்தன, டி.பி. விஜேதுங்க ஆகியோர் நிறைவேற்று அதிகாரங்கள் மற்றும் அரசியல் யாப்பு போன்றவற்றுக்கு மதிப்பளித்து செயற்பட்டார்கள். இவை தொடர்பான தெளிவற்ற சிந்தனை கொண்ட ஒருவரிடமே இன்று நாடு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதவிக்காலம் மற்றும் சட்டதிட்டங்கள் தொடர்பில் ஆராய்வது அத்தியாவசியமாகும். மாகாண சபையின் நடவடிக்கைகள், பிரதேசசபை மற்றும் ஏனைய அரச திணைக்களம், கூட்டுத்தாபனம் போன்றவற்றின் நடவடிக்கைகள் தொடர்பில் பொதுவான அரசியல் யாப்பு கொண்டு வரப்படுவது முக்கிய தேவையாகும்.

இந்த அரசு இரு மாதங்களுக்கு ஒருமுறை தேர்தல்களை நடத்தி வருவதை நீங்கள் அறிவீர்கள். இதனால் பொருளாதார நெருக்கடி போன்ற பல்வேறு சிக்கலுக்குள் நாடு தள்ளப்பட்டிருப்பதும் அனைவரும் தெரிந்ததே. இன்று எல்லோராலும் பேசப்படும் ஒன்றுதான் அமைச்சர் நியமனங்கள். இன்று 100க்கு மேற்பட்ட அமைச்சர்கள் உள்ளார்கள். பதவிக்காலம் போன்ற விடயங்களில் தெளிவான நிலைப்பாடு இன்றில்லை. எவரும் அமைச்சராகலாம். இது மக்கள் மீது சுமத்தப்படும் சுமையேயாகும். இவர்கள் மக்களுக்காகவா அல்லது அரசுக்காகவா என்றே கேள்விகள் எழுப்பப்படுகின்றன. இவ்வாறான நிலையில் நாடாளுமன்ற அமைச்சர்களின் எண்ணிக்கையை யாப்பினூடாகத் தீர்மானிக்கப்பட வேண்டியது அவசியமாகும். (சி)

# தேர்தல் தினத்தன்று மழை பெய்தால் வாக்களிப்புக்கு மாற்று ஏற்பாடு

கொழும்பு, ஏப்.10

மேல் மாகாணசபைக்கான வாக்களிப்பு தினமான இம்மாதம் 25ஆம் திகதி மழை, வெள்ளம் போன்ற காலநிலை மாற்றங்கள் ஏற்பட்டால் வாக்கெடுப்புக்கான மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும் என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

தற்போது மேல்மாகாணத்தில் அவ்வப்போது மழை பெய்து கொண்டிருப்பதால் அடுத்துவரும் இரண்டு வாரங்களில் இக் காலநிலை நீடிக்கலாம் என்று நம்பப்படுகிறது.

அவ்வாறு நீடித்து தேர்தல் தினத்தன்று வெள்ள அபாயம் ஏதும் ஏற்பட்டு வாக்களிப்பு நிலையங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பாடசாலைகள் பாதிக்கப்பட்டால் உடனடியாக வாக்களிப்பு நிலையங்கள் பாதுகாப்பான வேறு இடங்களுக்கு மாற்றப்படும் என்று தேர்தல்கள் செயலகம் தெரிவிக்கின்றது.

அதற்கான முன்னேற்பாடுகள் இப்போதே செய்யப்பட்டுக் கொண்டு வருகின்றன என்று தேர்தல்கள் செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

வெள்ளம் ஏற்படுமிடத்து உடனடியாக மாற்று ஏற்பாடுகளைச் செய்வதற்காக படகுகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்றும் அச்சந்தர்ப்பத்தில் விமானப்படையினரும் உதவிக்கு அழைக்கப்படுவர் என்றும் தேர்தல்கள் செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

குறிப்பாக மழைக்காலம் நீடித்தால் களுத்துறையில் வெள்ள அபாயம் ஏற்படக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. (சி)

## University of Jaffna

**Invitation to submit Expression of Interest for Conducting Photography Workshop**

Expression of interest to conduct a workshop on photography is invited from the individuals/Institutions. The workshop is intended to train the staff of the Faculty of Medicine in handling the equipments in Photographic Unit of the Faculty of Medicine. The details of the workshop and the Terms of Reference could be obtained at the LTS, IRQUE Project, University of Jaffna.

Further details can be obtained at:
**Office of the Co-ordinator/QEF - Medical Faculty Study Programme,**
**Faculty of Medicine,**
**University Of Jaffna.**

Expression of interest along with financial and Technical proposal should be sent in sealed cover mentioning "Conducting Photographic Workshop" at the left hand side top corner of the envelope cover reachable to the under signed on or before 24th April 2009.

*Director,*
*LTS/IRQUE Project,*
*University of Jaffna.*
*08.04.2009.* (C/557884)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணுலகில் 02.01.1932
விண்ணுலகில் 11.03.2009

**அமரர் சின்னையா கதிர்காமநாதன்**

கடந்த 11.03.2009 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சின்னையா கதிர்காமநாதன் அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் எல்லா வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கு எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (10.04.2009) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

52/6, A.V றோட், 3 ஆம் ஒழுங்கை,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
**குடும்பத்தினர்.**

## தவறிவிட்டது

கடந்த 3 ஆம் திகதி கொழும்பில் இருந்து வந்த போது யாழ்.நகர் விமான நிலைய பஸ்தரிப்பிடத்தில் இருந்து மூன்றாம் குறுக்குத்தெருவுக்கிடையில் கறுப்பு நிற சிறிய பயணப்பை ஒன்று தவறிவிட்டது. அதனுள் முக்கியமான கிளினிக் கொப்பி, மருந்துகள் மற்றும் பொருள்களும் இருந்தன. தவறுதலாக எடுத்தவர்கள் அல்லது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். N.பிள்ளையார், 128, 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். தொ.பே: 0778981074

**யாழ் பேபி நீட்ஸ் அன் பார்மசி**
**இல. 388, ஆஸ்பத்திரி வீதி,**
**வைரவர் கோயில் முன்பாக யாழ்ப்பாணம்**

எமது ஸ்தாபனத்தில் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு குழந்தைகள்+ சிறுவர்களுக்கான ஆடைகள், விளையாட்டுப் பொருள்கள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். கொள்வனவு செய்யும் குறிப்பிட்ட சில பேபி ஆடை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு விளையாட்டுப் பொருள்கள் அன்பளிப்பாக வழங்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத் தருகின்றோம்.

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10.03.1936
மறைவு 20.03.2000

**திருமதி மகேஸ்வரி பரராஜசிங்கம்**

திதி:- 10.04.2009 (பிரதமை)

அன்பான மனைவியாய்
ஆசைத் தாயாய்
பண்பான மாமியாய்
பாசமுள்ள பேர்த்தியாய்
பாரினிலே வாழ்ந்து விட்டு
ஒளியோடு கலந்து
ஒன்பது ஆண்டுகள் ஆனதம்மா!
மறக்குமோ எம் நெஞ்சம்
மாறுமோ உங்கள் நினைவு

அம்மா! என்றும் உங்கள் நினைவுடன்
உங்கள் ஆத்மசாந்திக்காக வேண்டி நிற்கும்.....

இ.பரராஜசிங்கம்,
82/1, செட்டித்தெரு, நல்லூர்.
**அன்பான கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## அந்தியேட்டி, சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில் 10-04-1934
விண்ணில் 11-03-2009



**திருமதி துரைசிங்கம் இராசம்மா**

கடந்த 11.03.2009 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத்தாயின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அவர் நோயுற்றிருந்தவேளை உதவி, ஒத்தாசைகள் புரிந்த வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் உடனிருந்து கவனித்த உதவியாளர்கள் யாவருக்கும் மற்றும் கடிதமூலம், தொலைபேசிமூலம், தந்திமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது துயரில் பங்கு கொண்ட யாவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (10.04.2009) வெள்ளிக்கிழமை நடைபெறும். சபிண்டீகரணக் கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இராஜ வீதி,
சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.
**பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation, noolaham.org | aavanaham.org

# தாய்லாந்துப் பிரதமரை பதவி விலகக்கோரி மக்கள் மாபெரும் பேரணி, ஆர்ப்பாட்டம்!




பாங்கொக், ஏப்ரல் 10

தாய்லாந்து பிரதமர் அஜித் வெஜாஜீவாவை பதவி விலகக் கோரி, 80 ஆயிரத்துக்கு மேற்பட்ட எதிர்ப்பாளர்கள், தலைநகரான பாங்கொக்கில் மாபெரும் போராட்டப் பேரணி நடத்தினார்கள். பெருந்தொகையானோர் சிவப்பு உடை தரித்திருந்தனர். அநேகர் முன்னாள் பிரதமர் தக்சின் சினவாத்ராவின் உருவப்படங்களை ஏந்தி வந்தனர்.

மாபெரும் பேரணி, பாங்கொக்கின் வரலாற்றுப் புகழ் படைத்த வட மாவட்டத்துக்கூடாக சென்றது. பேரணியினர், பிரதமர் அஜித் வெஜாஜீவாவின் நிர்வாகத்துக்கு எதிரான கோஷங்களை எழுப்பி வந்தனர். பிரதமரை உடனடியாக பதவி விலகுமாறு கோரிக்கை விடுத்தும், ஆர்ப்பரித்தனர். வீதிகளில் பாதுகாப்புக் கடமையில் பொலிஸாரும், துணைப் படையினரும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

பேரணியினர் முன்னாள் பிரதமர் தக்சின் சினவாத்ராவுக்கு ஆதரவான கோஷங்களையும் எழுப்பினர். அவரின் உருவப்படங்களையும் ஏந்தி வந்தனர். சினவாத்ரா ஆறு வருடங்களாக பிரதமராக இருந்தவர். 2006 ஆம் ஆண்டு புரட்சியின் மூலமாக பதவியிலிருந்து கவிழ்க்கப்பட்டவர். தற்போது இவர் வெளிநாட்டில் அஞ்ஞாதவாசமிருந்து வருகிறார்.

''தற்போதைய பிரதமர் அஜித் வெஜாஜீவா கடந்த டிசெம்பரில் நாடாளுமன்றத்தின் மூலமாக நியமிக்கப்பட்டவர். அரசமைப்பு சட்டத்துக்கு முரணாக ஆட்சிக்கு வந்தவர். இவர் உடனடியாக பதவி விலக வேண்டும். நாடாளுமன்றமும் கலைக்கப்பட வேண்டும். இதையடுத்து புதிய தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்'' என பேரணி அமைப்பாளர்கள் ஊடகவியலாளருக்குத் தெரிவித்தார்கள்.

''அதேவேளை தாய்லாந்தின் அரசியல் குளறுபடிகளுக்கும், குழப்படிகளுக்கும் பிரிம் டின்சுலானொந்தாவே காரணகர்த்தா என்றும் குற்றஞ்சாட்டினர். இவர் தாய்லாந்து மன்னர் பூமிபோல் அதுலியாடிஜ்ஜின் உச்சமட்ட ஆலோசகராவார். ஆர்ப்பாட்டப் பேரணி, இந்த ஆலோசகர் இல்லத்தை நோக்கியும் புறப்பட்டது.

''முன்னாள் பிரதமருக்கு எதிரான புரட்சிக்கு சதித்திட்டம் வகுத்துக் கொடுத்தவர் பிரிம் டின் சுலானொந்தாவே ஆவார். அவரும் பதவி துறக்க வேண்டும்'' என கோரிய அமைப்பாளர்கள் ''பல்லின இராணுவமும், நீதித்துறையும், பிரிமின் உள்ளக வட்டாரமும் அரசியலில் தலையிடுகின்றன. அதற்கும் நாம் ஆட்சேபனை தெரிவிக்கின்றோம். ஒட்டு மொத்த ஊழல்களுக்கு எதிராகவே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்படுகிறது'' என்றும் கூறினார்கள்.

''சகோதரர்களே, சகோதரிகளே வெளியே வாருங்கள். நீங்கள் ஜனநாயகத்தை நேசிப்பவர்களாக இருந்தால் வெளியே வாருங்கள்'' என ஒலிபெருக்கி மூலமாக அறைகூவல் விடுத்தவாறு தலைவர்கள் ட்ரக்குகளில் வந்தார்கள்.

''அஜித் வெஜாஜீவா பதவியிலிருந்து வெளியேறு. பிரிம் பதவி விலகு'' என்றும் இத்தலைவர்கள் தொடர்ந்தும் அறைகூவல் விடுத்துவந்தார்கள். எனினும், பேரணியால் திட்டமிட்டபடி, மன்னரின் உச்சமட்ட ஆலோசகர் பிரிம் டின்சுலானோந்தாவின் இல்லத்தை அடைய முடியவில்லை.

அப்பகுதியில் பாதுகாப்புக் கடமையில் 4 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். துருப்புகளும் ஆங்காங்கு குவிக்கப்பட்டிருந்தன. அப்பகுதிக்குள் பேரணி நுழைய, பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக தடை விதித்துவிட்டார்கள்.

உச்ச மட்ட ஆலோசகர் வீட்டைச்சுற்றி கலகம் அடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அதனால் பேரணி வேறு வீதி வழியாக திரும்பியது.

# பதவி விலகும் நோக்கம் இல்லை; பிரதமர் அஜித் வெஜாஜீவா பிடிவாதம்

பாங்கொக், ஏப்ரல் 10

''ஆர்ப்பாட்டக்காரர்களின் கோரிக்கைகளை நான் நிராகரிக்கிறேன். பதவி விலகும் நோக்கம் எனக்கில்லை. எனது நாளாந்த கடமை வழமைபோல் தொடரும்'' என தாய்லாந்து பிரதமர் அஜித் வெஜாஜீவா, பத்திரிகையாளர் மாநாடொன்றில் தாம் பேசுகையில் குறிப்பிட்டார்.

''கூப்பாடுகளுக்கும் கூச்சலுக்கும் அஞ்சி, அரசு நாடாளுமன்றத்தைக் கலைத்து விடாது. பொருத்தமான தீர்வு எதுவோ, அதனையே நாம் மேற்கொள்வோம். வன்முறை மிரட்டல்களுக்கு அஞ்சி, காரியமாற்றும் நிலையில் நாம் இல்லை'' என்றும் அவர் தெரிவித்துக்கொண்டார்.

''பேரணி நடத்துவோர் அமைதி, சட்டம், ஒழுங்கு ஆகியவற்றிற்குக் குந்தகம் விளைவிக்கக்கூடாது. இயல்பு நிலையையும் குலைத்து விடக்கூடாது. அப்படியானால், பேரணியைக் கலைக்க உத்தரவிடப்படமாட்டது. பேரணி என்ற போர்வையில், வன்முறைகள் கட்ட விழ்க்கப்படுமானால், அரசால் கடும் நடவடிக்கை எடுக்க நேரிடும்'' என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

''அரசு தரப்பில், வன்முறை ஆரம்பிக்கப்படமாட்டாது. இதனை நான் உறுதிப்பாடாகத் தெரிவித்துக் கொள்கிறேன். சில தீயசக்திகள் நாட்டில் கலவரங்களைத் தோற்றுவிக்கத் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றன. கிளர்ச்சிகளுக்குத் தூதுமிட்டு வருகின்றன. இவற்றைத் தடுக்க, தக்க நடவடிக்கைகளை எடுக்க அரசு பின்வாங்காது'' என்றும் பிரதமர் தெரிவித்துக்கொண்டார்.

அதேவேளை, வெளிநாட்டில் அஞ்ஞாதவாசமிருக்கும் முன்னாள் பிரதமர் தக்சின் சின்வாத்ரா, அங்கிருந்து தமது ஆதரவாளர்களுக்கு ஒளிநாடா மூலம் செய்தி விடுத்துள்ளார். அதில் அவர், ''சுதந்திரத்தையும் நீதியையும் விரும்பும் தாய்லாந்தின் சகோதரர்களே, சகோதரிகளே, உங்கள் சக்தியை வெளிப்படுத்துங்கள்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டுகள், பதவி துஷ்பிரயோகம் ஆகிய குற்றச்சாட்டுகள் தக்சின் சின்வாத்ரா மீது சுமத்தப்பட்டன. அதேவேளை, புரட்சியின் மூலம் அவரது பதவியும் கவிழ்க்கப்பட்டது. அதனால் இவர் நாட்டைவிட்டு வெளியேறி அஞ்ஞாதவாசமிருந்து வருகிறார்.

எனினும் ஊழல்கள், பதவி துஷ்பிரயோகம் ஆகிய குற்றச்சாட்டுகளில் அவரை குற்றவாளியாக தீர்த்து, விசேட நீதிமன்றம் இரு வருடகால சிறைத்தண்டனையும் விதித்துள்ளது. அவர் நாடு திரும்பினால் உடனடியாக கைது செய்யப்படவுள்ளார்.

# ஈரானின் அணுத்திட்ட விவகாரம் குறித்து அந்நாட்டுத் தலைவர்களுடன் நேரடிப் பேச்சு

## ஒபாமா நிர்வாகம் தெரிவிப்பு

தெஹ்ரான், ஏப்ரல் 10

ஈரானின் சர்ச்சைக்குரிய அணுத்திட்டங்கள் தொடர்பாக, அந்நாட்டுத் தலைவர்களுடன் நேரடிப் பேச்சுகள் நடத்தப்படும் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் ஈரானிய அணுத்திட்ட விவகாரம் தொடர்பாக கடைப்பிடித்த கொள்கை, மேற்கொண்ட அணுகுமுறை ஆகியவற்றிற்கு முற்றிலும் மாறுபாடான ஒரு புதிய நோக்கு இதுவென அரசியல் அவதானிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளின் சிரேஷ்ட இராஜதந்திரிகளும், ஜேர்மன் இராஜதந்திரியும், ஈரானிய அணுத்திட்ட விவகாரம் தொடர்பாக, ஈரானிய அதிகாரிகளுடன் பேச்சுகள் நடத்தவுள்ளார்கள். அதே மேசையில், அமெரிக்காவின் பிரசன்னமும் இடம்பெறும் என்றும் ஒபாமா நிர்வாகம் தெரிவித்துள்ளது.

ஒபாமா நிர்வாகத்தின் இம் முடிவு, லண்டனில் புதன்கிழமை இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்ட பிரிட்டன், சீனா, பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளுக்கு, மூன்றாம் நிலை அமெரிக்க இராஜதந்திரி வில்லியம் பேர்ன்ஸால் தெரிவிக்கப்பட்டுவிட்டது என இராஜாங்க திணைக்கள பேச்சாளர் ரொபர்ட் வுட் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, இ[illegible]ாரம் தொடர்பாக பல கட்டங்களில் [illegible]ள்ளப்பட்டு வந்த பேச்சுகள் தடைப்பட்டுள்ளன. அதனால் புதிய பேச்சுகளில் கலந்துகொள்ளுமாறு ஈரானுக்கு அழைப்பு விடுக்கப்படும் என இந்த பிரதிநிதிகள் தெரிவித்துள்ளார்கள்.

இராஜாங்க திணைக்கள பேச்சாளர் ரொபர்ட் வுட் இது குறித்து மேலும் குறிப்பிடுகையில், ''ஈரானிய அணுத்திட்ட விவகாரங்களுக்கு, இராஜதந்திர அணுகுமுறை மூலமாகவே, ஒபாமா நிர்வாகம் பரிகாரம் காண முயல்கிறது. அதனால் அது நேரடி பேச்சுகளை மேற்கொள்ள முன்வந்துள்ளது'' என்றும் தெரிவித்துள்ளார்.

''ஈரானிடமிருந்து இதற்கு சாதகமான பதில் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகாரக் கொள்கைக்கான தலைமை அதிகாரி ஜேவிர் சொலானா மூலம், ஈரானுக்கான அழைப்பு விடுக்கப்படவுள்ளது. எனினும், பேச்சுகளுக்கான இடமும் திகதியும் இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, ஈரானிய ஜனாதிபதி அஹ்மதி நிஜாத் அமெரிக்காவின் கொள்கை மாற்றத்துக்கு வரவேற்புத் தெரிவித்துள்ளர். தொலைக்காட்சியில் தாம் நிகழ்த்திய உரையொன்றில் கடும் போக்காளரான அஹ்மதி நிஜாத் இதனை தெரிவித்துள்ளார்.

''எமது நாட்டை நோக்கி நீட்டப்படும் நேசக்கரத்தை நாம் வரவேற்கின்றோம். எனினும், அது உண்மையான - இதய சுத்தியான நேர்மை, நீதி, மரியாதை ஆகியவற்றின் அடிப்படையில் அமையவேண்டும்'' என்றும் அஹ்மதி நிஜாத் தமதுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் நேரடியான பேச்சுகளுக்கு வருமாறு, ஜனாதிபதி பராக் ஒபாமா விடுக்கும் அழைப்புக்கு, ஈரான் சாதகமான பதிலை அளிக்கலாம் என அரசியல் வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

# மலேஷியாவில் பிரபலமான கொலை வழக்கில் பொலிஸ் அதிகாரிக்கு மரணதண்டனை!

கோலாலம்பூர், ஏப்ரல் 10

மலேஷிய வரலாற்றில் நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் பேசப்பட்ட மங்கோலியப் பெண் அதான்துயா கொலை வழக்கு விசாரணையில் நேற்று வியாழக்கிழமை தீர்ப்பு வழங்கப்பட்டது. இதில் தலைமை இன்ஸ்பெக்டர் அஜிலா ஹாட்ரிக்கும், கோப்ரல் சிருல் அஜ்ஹார் உமருக்கும் மரண தண்டனை விதித்து தீர்ப்பு அளிக்கப்பட்டது.

ஷா ஆலம் காட்டுப் பகுதியில் டிசெம்பர் மாதம் 2008 ஆம் ஆண்டில் மிகக் கொடூரமாக இப்பெண் கொலை செய்யப்பட்டார். இவரது பெயரான அதான்துயா, நாட்டு மக்கள் அனைவரும் அறிந்த பெயராகிவிட்டது.

அப்பெண்ணின் கொலையில் தொடர்புபடுத்திப் பேசப்பட்ட நாட்டின் இன்றைய பிரதமர் நஜிப் அப்துல் ரசாக் தனக்கும் அக்கொலைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையென்று பல தடவைகளில் மறுக்கும் கட்டாயத்திற்கு தள்ளப்பட்டார். மேலும், அச்செய்தி உலக நாளிதழ்களிலெல்லாம் பிரசுரிக்கப்பட்டது.

நஜிப்பின் உதவியாளரும் அரசியல் ஆய்வாளருமான அப்துல் ரசாக் பகிண்டா மீது இக்கொலைக்கு உதவியவர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டதும் இவ்வழக்கு மக்களின் கவனத்தை பெரிதும் ஈர்த்தது.

இருப்பினும், 31.10.2008 இல் பகிண்டா குற்றவாளியல்ல என்று தீர்ப்பளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார். இது குறித்தும் புதிய ஊகங்கள் வெளிவந்தன.




நேற்று வியாழக்கிழமை ஷா ஆலம் உயர் நீதிமன்றம் அல்தான் துயாவை கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சிறப்பு நடவடிக்கை பிரிவின் அதிகாரிகளான தலைமை இன்ஸ்பெக்டர் அஜிலா ஹாட்ரிக்கும், கார்ப்ரல் சிருல் அஜ்ஹார் உமருக்கும் மரண தண்டனை விதித்து தீர்ப்பு அளித்தது.

உலக அரங்கில்

# ஈராக் ஷியா முஸ்லிம் பகுதியில் குண்டுவெடிப்பு; 7 பேர் உயிரிழப்பு

பக்தாத், ஏப்ரல் 10

ஈராக்கிய தலைநகரான பக்தாத்தில், ஷியா முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதியில் நேற்று வியாழக்கிழமை குண்டொன்று வெடித்தது. இதில் ஏழு பேர் பலியாயினர். 20 பேர் வரை காயமடைந்தனர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

ஷியா முஸ்லிம்களின் அதி முக்கிய புனித ஸ்தலத்துக்கருகிலுள்ள கதமியா நகரில் இக்குண்டு வெடித்தது. இதில் பல கடைகள் சேதமடைந்தன. இப்பகுதியில் புடவைக் கடைகளும், நகைக் கடைகளுமே உள்ளன. குண்டு வெடிப்பில் அப்பாவிகளே கொல்லப்பட்டுள்ளார்கள் என்றும் அது குறிப்பிட்டது.

ஷியாக்களின் புனித ஸ்தலமான இமாம் மூஸா அல்-காசீமின் அடக்க ஸ் தலத்திலிருந்து ஏறத்தாழ 100 மீற்றர் தொலைவில் இக் குண்டு பயங்கரமாக வெடித்தது. இவ்விடத்தில் வைக்கப்பட்டிருந்த ஒரு பிளாஸ்டிக் உறைக்குளிருந்து இது வெடித்துள்ளது என நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டார்கள்.

கடந்த ஜனவரியில் ஒரு நபர் பெண் வேடத்தில் வந்து, இப்புனித ஸ்தலத்துக் கருகில் குண்டை வெடிக்க வைத்துள்ளார். இதில 40 பேருக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். 70 பேருக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

# ஆப்கானில் தற்கொலைத் தாக்குதல்; பொலிஸார் நால்வர் பலி; 4 பேர் காயம்!

காபூல், ஏப்ரல் 10

தென் ஆப்கானிஸ்தானில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் நான்கு பொலிஸார் கொல்லப்பட்டனர். மற்றும் நான்கு பொலிஸார் காயமடைந்தனர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

தென் ஆப்கானின் ஹெல் மாந் மாகாணத்திலுள்ள லஸ்கார் ஹா என்னுமிடத்தில் போதைப்பொருள் கடத்தலை முறியடிக்கும் பணியில் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் நான்கு பொலிஸாரே பலியாகியுள்ளனர் என்றும் அது குறிப்பிட்டது.

போதைப்பொருள் கடத்தல் தடுப்புப் பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது ஓரிடத்தில் இவர்கள் பயணித்த இரு வாகனங்களும் குண்டுவெடிப்பில் சிக்கின என நேரில் கண்டவர்கள் குறிப்பிட்டார்கள்.

தற்கொலை குண்டுதாரி, தான் மறைத்து வைத்திருந்த குண்டை இவ்விரு வாகனங்களும் தன்னை அண்மித்த சமயம் வெடிக்க வைத்துள்ளார். இதில் வாகனங்கள் முற்றாக சேதமடைந்துள்ளன என மாகாண பிரதி பொலிஸ் அதிபர் கமால் உடின் ஏ.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

உலகில் பயன்படுத்தப்படும் அபின் போதைப்பொருளில் மூன்றில் இரு மடங்கு ஹெல்மாந் மாகாணத்திலேயே உற்பத்தி செய்யப்படுகிறது. அபினியே ஹீரோய்ன் போதைப்பொருள் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படுகிறது. அபினி உற்பத்தியைத் தடுக்க ஆப்கான் அரசு கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பூப்புனித நீராட்டுவிழா அழைப்பு

நிகழும் மங்களகரமான சர்வதாரி வருடம் பங்குனி மாதம்
29 ஆம் நாள் (11.04.2009) சனிக்கிழமை முற்பகல்
10.55 மணி முதல் 12 மணி வரை
சதய நட்சத்திரத்தில்
வரும் சுபவேளையில்



எமது ஏக புதல்வி
திருவளர் செல்வி
**பகிரேகா**
அவர்களுக்கு

இறைவன் திருவருள் துணைகொண்டு யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயிலடி ஸ்ரீகாமாட்சி அம்மன் கல்யாண மண்டபத்தில் பூப்புனித நீராட்டுவிழா பெரியோர்களின் ஆசியுடன் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:
திரு.திருமதி சி.பரமநாதன் தம்பதிகள்

இல.30, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

சிவன் ஸ்ரோர்ஸ், பரமேஸ்வராச் சந்தி.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

# அறிவித்தல்

இத்தால் சகலருமறிய வேண்டியது, யாழ்ப்பாணம் மாவட்ட நீதி மன்றத்தில் காணி-739 என்னுமிலக்கத்தில் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி வரிமதிப்பிலக்கங்கள் 177, 177A, 177B, 177C 177D 177E 177F 177G மற்றும் 177/1 கொண்ட கடைகட்டடங்களையும் அவை அமைந்திருக்கும் ஆதனத்தையும் சேர்த்து பல்வேறு நிவாரணங்களையும் கோரி முத்து சுந்தரமூர்த்தி என்பவர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார் என்பதையும் அக் கடைக்கட்டடங்கள் அல்லது அவை அமைந்திருக்கும் ஆதனங்கள் மீது உரிமை கோருவோர் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் தோற்றி மேற்படி வழக்கில் தங்கள் கோரிக்கைகளை வெளிப்படுத்துமாறு இத்தால் அறிவிக்கப்படுகிறார்கள்.

2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 திகதி
மேற்படி வழக்கில் வழக்காளியாகிய முத்து சுந்தரமூர்த்தி

மு.சுந்தரமூர்த்தி
இவரின் தத்துவக்காரன்:- த.செல்வராசா.

# SEEKING BETTER - HALF

**A LEGALLY DIVORCED CHRISTIAN TRAINED TEACHER OF ENGLISH AGED 43 BELONGING TO THE ASSEMBLY OF GOD SECT SEEKS SUITABLE BETTER-HALF IRRESPECTIVE OF CASTE, CREED OR COMMUNAL POSITION. FOR FURTHER DATA PLEASE RING UP TO THE NUMBER 0212222105.**

**MR.R.UMASHANKAR,**
SPORTS AND SCIENCE UNIT, UNIVERSITY OF JAFFNA.
MOBILE:- 077 9334897

# திருமண அழைப்பு

நிகழும் மங்களகரமான சர்வதாரி வருஷம் பங்குனி மாதம் 29 ஆம் நாள் (11.04.2009) சனிக்கிழமை காலை 8.10 மணி முதல் 8.47 மணிவரையுள்ள இடப லக்கினமும் சுவாதி நட்சத்திரமும் அமிர்தசித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

| திருமதி பாலசிங்கம் தம்பதிகளின் | திரு.திருமதி தவேந்திரன் தம்பதிகளின் |
|---|---|
| திருநிறைச் செல்வன் | திருநிறைச் செல்வி |
| **ராஜ்குமார் (ராஜ்)** | **தவேஸ்வரி (தவேஷ்)** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

இறைவன் திருவருள் துணைகொண்டு நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத்தில் அமைந்துள்ள நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மண மக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

| திருமதி பாலசிங்கம் செல்வராணி, | திரு.திருமதி தவேந்திரன் கமலேஸ்வரி, |
|---|---|
| விஸ்வகுல லேன், வேம்படி வளவு, | சந்தை வீதி, இமையாணன் மேற்கு, |
| புலோலி வடக்கு, பருத்தித்துறை. | உடுப்பிட்டி. |

(இரு வீட்டார் அழைப்பு)

## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்
# பாணின் விலை குறைப்பு

இன்றுமுதல் 450 கிராம் நிறைகொண்ட ஒரு றாத்தல் பாணின் விலை 43/= ரூபா என்பதையும் பணிஸ் வகைகளின் விலைகளில் எதுவித மாற்றமும் இல்லை என்பதனை விற்பனையாளர்கள், பாவனையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

| | |
|---|---|
| 1 றாத்தல் பாண் (450 கிராம்) | - 43.00 |
| (1சோடி) கிறீம் பணிஸ் | - 24.00 |
| (1 சோடி) ரீ பணிஸ் | - 22.00 |
| சங்கிலி பணிஸ் | - 22.00 |
| கொம்பு பணிஸ் | - 14.00 |
| அடைக் கேக் | - 18.00 |

(அரச அதிபரின் பணிப்பிற்கு அமைவாக)

**செயலாளர்.**

## இன்று பெரியவெள்ளி

கிறிஸ்தவ மக்கள் பெரிய வெள்ளியை அனுஷ்டிக்கின்றார்கள்.

யேசுநாதர் பரிசேயர்களால் குற்றஞ்சாட்டி பல துன்புறுத்தல்களுக்கு பின்பு உயிருடன் சிலுவையில் அறையுண்டு மரித்த நாளை நினைவு கூருமுகமாக இன்று மாலை கிறிஸ்தவ ஆலயங்களில் மாலை 4.30 மணிக்கு அறைந்திறக்கும் நிகழ்வு இடம்பெறும். நாளை அல்லேலூயா சனிக் கிழமை யேசுக் கிறிஸ்து உலகில் உயிருடன் இல்லாத நாளை பேய்கள் ஆட்சி செய்யும் நாளாக கிறிஸ்தவர்கள் நம்புகின்றார்கள்.

## நலன்புரி முகாமில் உதவிக் கொடுப்பனவு

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து நலன் புரி நிலையங்களில் தங்கியுள்ள மாதாந்தம் உதவிப்பணம் பெறுவோருக்கான நான்கு மாதங்களுக்கு உரிய கொடுப்பனவுகள் அந்தந்த நலன் புரி நிலையங்களில் வைத்து தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினரால் வழங்கப்பட்டுள்ளதாக தென்மராட்சி பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

# மரண அறிவித்தல்

## திருமதி சிவகாமசுந்தரி நகுலேஸ்வரன்
(சரசாலை தெற்கு, சாவகச்சேரி)



சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சிவகாமசுந்தரி நகுலேஸ்வரன் நேற்றுக் காலை (09.04.2009) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி-பத்மாசனி தம்பதியரின் ஏக புதல்வியும் காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி- தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற முத்துக்குமாரசாமியின் சகோதரியும் நகுலேஸ்வரனின் (தர்மகர்த்தா, இலந்தைத் திடல் வீரமாகாளி அம்மன் கோயில், சரசாலை), அன்பு மனைவியும் ஞானசம்பந்தனின் (லண்டன்) பாசமிகு தாயும் கவித்தாவின்(லண்டன்) அன்பு மாமியாரும், சரண்ணியன் (லண்டன்), அஞ்சலி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.04.2009) புதன்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"தையல் வாசம்",
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
ந.ஞானசம்பந்தன்
(சம்பந்தன்- மகன்).

(84320)

# Vacancy
# Post of Accounts Assistant

We are looking for a committed, creative and energetic individual to join us as an Accounts Assistant.

**Essential qualifications & Requirements:**

- Educational Qualification : G.C.E A/L
- Professional Qualification : AAT Passed Finalist or part qualification in ICASL/ CIMA/HNDA
- At least 3 year professional experience in the capacity of Accounts Assistant in the NGO/ Public/ Private sector with sound knowledge in accounting procedure preferably, with Accounting Package.
- Good command of English.
- Good Communication skills.
- Excellent Computer skills.
- Should be a team Worker
- Should be willing to travel to Colombo for official duties on short notice.

**Main Responsibilities:**

- Support District Director and District Accountant in the operation of Accounts.
- Ensure daily system updates, collect and maintain accounting information on Projects and Administration.
- Support District Director and District Accountant in the operation of Accounts.
- Ensure daily system updates, collect and maintain accounting information on Projects and Administration.

**Please Note:**

- Closing date for the applications will be on 23rd April, 2009.
- The above position would be initially for a period of 1 year with 6 months probation.
- Candidates who do not possess the required qualifications are advised to refrain from making applications.
- Only short listed candidates will be called for the interview.
- Canvassing will be treated as a disqualification.
- Please submit your CV, together with an approx 300 word essay on how your previous work experience will assist in fulfilling the above post, addressed to:

**The District Director, Sewa Lanka**
**District Office,**
**250, Temple Road,**
**Nallur, Jaffna.**

**Or by fax or email:**
Fax No: 021 222 9850
E-mail: jaffna@sewalanka.org

# மரண அறிவித்தல்

## செல்வன் துரைராஜா கஜேந்திரன் (கஜன்)



(யாழ்.மத்தியகல்லூரி, (உ/த) கலைப்பிரிவு மாணவன்)

யாழ்ப்பாணம், காங்கேசன்துறைவீதி, பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் இல.62/2, இந்துக்கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராஜா கஜேந்திரன் நேற்று (09.04. 2009) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் துரைராஜா - கோமதி தம்பதியரின் அன்பு மகனும் கார்த்திகாவின் (யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை, தரம் 4 மாணவி) அன்புச் சகோதரரும் முத்துலிங்கம், தவமணிதேவி (வவுனியா) மற்றும் மாடசாமி கிருஸ்ணம்மா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2009) வெள்ளிக்கிழமை பிற் பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக் காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.62/2, இந்துக் கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மு.துரைராஜா (தந்தை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு வலயத்திலுள்ள மருத்துவமனை மீது ஷெல் வீச்சு; புதனன்று பொதுமக்கள் 20 பேர் பலி! 300 பேர் காயம்!!

## வன்னி நிலைமை குறித்து அங்குள்ள மருத்துவர் சத்தியமூர்த்தி விவரிப்பு



கொழும்பு, ஏப். 10

வன்னியில் பொதுமக்கள் தங்கியுள்ள புதுமாத்தளன் மருத்துமனை மீது நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடத்தப்பட்ட ஷெல் வீச்சில் 20 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் என்றும் 300 பேர் படுகாயமடைந்தனர் என்றும் அந்த மருத்துவமனையில் சேவையாற்றும் மருத்துவர் சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாள்களில் பட்டினி காரணமாக 13 பேர் சாவடைந்துள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த புதன்கிழமை முல்லைத்தீவு புதுமாத்தளன் மருத்துவமனை மீது மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல் தொடர்பாக லண்டனின் 'த கார்டியன்' பத்திரிகைக்கு விவரிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ள அவர், அங்குள்ள நிலமை குறித்து மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இறுதியாக உள்ள மருத்துவமனை மீது மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டதுடன் 300 பேர் காயமடைந்துள்ளனர். இராணுவ நடவடிக்கை ஆரம்பித்த பின்னர் தாம் எதிர் கொண்ட மிக மோசமான இரத்தக்களறி நாள் இதுவென மருத்துவர் சத்தியமூர்த்தி குறிப்பிட்டார்.

புதுமாத்தளனில் உள்ள இரு மருத்துவமனைகளில் வீழ்ந்து வெடித்த ஷெல்களை இலங்கை இராணுவமே ஏவியதாக மருத்துவர் சத்தியமூர்த்தி குற்றம்சாட்டினார்.

இத் தாக்குதலில் 18 மாதக் குழந்தை, மருத்துவப் பணியாளர் உட்பட 22 பேர் கொல்லப்பட்டனர், 283 பேர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதல் புதன்கிழமை அதிகாலைக்குப் பின்னர் இடம்பெற்றது என சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

**'உலர் உணவு பெற வந்தவர்களும் தாக்குதலுக்குள்**

ஷெல்வீச்சில் கொல்லப்பட்டவர்கள், காயடைந்தவர்களைத் தான் கண்ணுற்ற விதத்தையும் அவர் வர்ணித்துள்ளார்.

''நோயாளிகளும் உணவு மற்றும் உலர் உணவைப் பெற வந்தவர்களுமாக சுமார் 500 பேர் மருத்துவமனையில் காத்திருந்தனர். பால்மா பெற வந்த தாயும் குழந்தையும் கூட அங்கு இருந்தனர்.

நாங்கள் 7.30 மணியளவில் அவற்றை வழங்கத் தயாராகவிருந்தோம். 500 பேர் காத்துக்கொண்டிருந்தனர். திடீரென அங்கு ஷெல்கள் வீழ்ந்தன. அரை மணித்தியாலத்தின் பின்னர் சேதங்களை மதிப்பிடச் சென்ற வேளை, வீதிகளில் இரத்தக் கறைகளையும், காலணிகளையும் கண்டேன்.

ஐந்து உடல்கள் காணப்பட்டன. இவற்றில் ஒன்றரை மாதக்குழந்தையினதும் 30 வயது பெண்ணுடைய உடலும் (அவருக்கு நான்கு குழந்தைகள்)காணப்பட்டன. 60 வயது நபர் உறங்கிக்கொண்டிருந்த வேளையே கொல்லப்பட்டார். இன்னுமொரு பெண் அருகிலுள்ள வீட்டினுள் இறந்திருந்தார்'' என கிளிநொச்சி சுகாதார சேவைப் பிராந்தியப் பணிப்பாளரான மருத்துவர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இதன்பின்னர் மேற்கொள்ளப்பட்ட மற்றைய தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டதுடன் மேலும் பலர் காயமடைந்தனர் எனவும் அவர் தெரிவித்தார்.

**ஷெல்கள் இராணுவத்தின் பக்கத்தில் இருந்தே வந்தன**

இறுதியாக 11 மணிக்கு மருத்துவமனை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் மருத்துவமனைப் பணியாளர் ஒருவர் கொல்லப்பட்டார் என அவர் குறிப் பிட்டார்.

''இந்த ஷெல்கள் இலங்கை இராணுவத்தின் பக்கமிருந்தே வந்தன என்பது அனைவருக்கும் தெளிவாகத் தெரியும். அனைத்து ஷெல்களும் அந்தத் திசையிலிருந்தே வருகின்றன'' என அவர் கூறினார்.

''பாதுகாப்பு வலயத்திற்குள் நிலைமை மிகவும் விரக்தியளிப்பதாக உள்ளது. 13 பேர் பட்டினியால் இறந்துள்ளனர். ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளில் 69 வீதமானவர்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் '' என்றும் சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

உணவு விநியோகம் போதுமானதாக இல்லை. பல குழந்தைகள் ஆபத்தில் உள்ளன. நேற்றுமுன்தினம் பால் உணவுகளை விநியோகித்த வேளை மிகவும் மெலிந்த குழந்தைகளைக் கண்டேன்'' என்றார் மருத்துவர். சமீபத்தைய இராணுவ நடவடிக்கை ஆரம்பமான பின்னர் 5 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தாம் மதிப்பிடுகிறார் என்றும் சத்தியமூர்த்தி குறிப்பிட்டார்.

**இந்தளவு பேரழிவை நாம் எதிர்பார்க்கவில்லை**

''அரசு அவர்களைப் பாதுகாப்பு வலயத்திற்குள் செல்லுமாறு கேட்டுள்ளதால் ஏதாவது தீர்வு கிடைக்கும் என அவர்கள் தினமும் எதிர்பார்க்கின்றனர். மக்கள் இந்த இடத்திற்குச் சென்றுள்ளனர். எனினும், துரதிஷ்டவசமாக அரசு இப்பகுதி மீது தாக்குதலை மேற்கொள்கின்றது. இது உண்மையான பேரழிவு. இந்தளவு பேரழிவை நாங்கள் எதிர்பார்க்கவில்லை'' என்றார் அவர்.

பாதுகாப்பு வலயத்திற்குள் சிக்கியுள்ள மக்கள் தரப்பாளின் கீழ் மிகவும் நெரிசலாக, எப்போதும் ஷெல் வீச்சிற்கு இலக்காகக் கூடிய நிலையில் வாழ்கின்றனர்.

நாளொன்றிற்கு 100 பேர் காயமடைகின்றனர். 20 பேர் மருத்துவ்மனையில் இறக்கின்றனர். 30,40 பேர் மருத்துவமனைக்கு வெளியே இறக்கின்றனர். எனினும் துல்லியமான புள்ளி விவரங்கள் இல்லை'' - என்றும் மருத்துவர் சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாதுகாப்பு வலயத்தில் பல்வேறு பகுதிகளில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 129 பொதுமக்கள் உயிரி[illegible]ார் என்றும் பல நூற்றுக்கணக்கா[illegible]யமடைந்தனர் என்றும் சில இணையத்த[illegible]ங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## இலங்கை வங்கிக் கிளைகள் இன்றும் நாளையும் திறக்கும்

யாழப்பாணம், ஏப்.10

யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை வங்கிக் கிளைகள் யாவும் எதிர்வரும் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு திறக்கப்படவுள்ளன.

இந்த வங்கிக் கிளைகள் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை திறந்திருக்கும் என இலங்கை வங்கி உதவிப் பொது முகா மையாளர் என். சிவரட்ணம் அறிவித்துள் ளார்.

எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் சகல கிளைகளிலும் பணக் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்வதுடன் கைவிசேடமும் வழங்கப்படும். (204)

## விரிவுரையாளர் ரவீந்திரன் விடுக்கப்பட்டுள்ளதால் பல்கலைக்கழக செயற்பாடுகள் 16 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம் ஏப்.10

கொழும்பில் கடந்த 24 ஆம் திகதி காணாமற்போன யாழ். பல்கலைக் கழக புவியியல்துறை விரிவுரையாளர் செல்வராஜா ரவீந்திரன் விடுதலை செய்யப்பட்டுள்ளதால் வகுப்புப் பகிஷ்கரிப்பைக் கைவிடுவதாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரையும் எதிர்வரும் 16 ஆம்திகதி வியாழக் கிழமை முதல் விரிவுரைகளுக்கு சமுகமளிக்குமாறும் மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

கடத்தப்பட்ட எமது பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் செல்வராஜா ரவீந்திரன் விடுதலை செய்யப்பட்டுள்ளதால் வகுப்புப் புறக்கணிப்பைக் கைவிடும்படி யாழ்.பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களுக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவிக்கிறது. விடுமுறைகளைத் தொடர்ந்து 16 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் விரிவுரைகளுக்கு செல்லும்படி வேண்டப்படுகின்றீர்கள்,

பல்கலைக்கழகத்தின் அனைத்துச் செயற்பாடுகளும் வழமைபோல் இனி நடைபெறும் என்பதை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துக் கொள்கின்றது. மாணவர்களின் இயல்பான கல்வி நடவடிக்கைக்கு ஒத்துழைக்கும் விதத்தில் எமது விரிவுரையாளரை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்த அனைத்துத் தரப்பினருக்கும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்- என்றுள்ளது. (50)

## 'நாயகர்கள் மோதல்' துடுப்பாட்டம்; ஸ்கந்தாவை வீழ்த்தியது மகாஜனா!

வலி.வடக்கு, ஏப்.10

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையே கடந்த இரண்டு நாள்களாக இடம்பெற்ற நாயகர்களின் துடுப்பாட்டப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி 5 விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் 62 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் இருந்த ஸ்கந்தவரோதயாக் கல்லூரி நேற்றுக் காலை தொடர்ந்து துடுப்பாட்டத்தில் ஈடுபட்டது. எட்டாவது விக்கெட்டுக்காக இணைந்து கொண்டவர்கள் மிகவும் நிதானமாக அணியின் தேவை உணர்ந்து விளையாடியதைத் தொடர்ந்து அணியின் ஓட்ட எண்ணிக்கை உயர்ந்தது.

ஆனாலும் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் களத்தில் நின்ற போதிலும் முதல் இன்னிங்ஸ் நிறைவுபெறும் வேளையில் ஸ்கந்தவரோதயாக் கல்லுரி 49.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 116 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது. ஸ்கந்தவரோதயா சார்பில் பிரித்திவிகன் 34, புருசோத்தமன் 29 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

மகாஜனாக் கல்லூரி சார்பில் பந்து வீசிய டிலக்சன் 10.1 ஓவர்கள் பந்து வீசி 5 ஓட்டமற்ற ஓவர்களுடன் 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

119 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்த தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி தொடர்ந்து துடுப்பெடுத்தாடாது மீண்டும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை துடுப்பெடுத்தாட வேண்டிக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 41.4 ஓவரில் 196ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக் கெட்டுக்களையும் இழந்தது. விஸ்ணுப்பிரகாஸ் 150 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

மகாஜனாத் கல்லூரி சார்பில் பந்து வீசிய கஜதீபன் 13 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 56 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் விஸ்ணுகாந் 5 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 14 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் டிலக்சன் 10.4 ஓவர்கள் பந்து வீசி2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 36 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்

78 பந்துகளில் 78 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி 5 விக்கெட்டுக்களை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது. காந்தசீலன் 24 ஓட்டங்களையும் கோகுலன் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சார்பில் பந்து வீசிய விஸ்ணுபிரகாஸ் 6 ஓவர்கள் பந்து வீசி 38 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் தஜீகன் 5 ஓவர்கள் பந்து வீசி 34 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரனாகவும் சகலதுறை வீரனாகவும் விஸ்ணுபிரகாஸும் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) சிறந்த களத்தடுப்பாளராக ஸ்ரீகஜனும் (ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த கஜதீபன் சிறந்த பந்து வீச்சாளராகவும் கோகுலதாஸ் ஆட்டநாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார்கள். (86)


A/L 2011

கலை வர்த்தகப் பிரிவுகள்

எமது மூன்று நிறுவனங்களிலும்

யாழ். நகரின் பிரபல்யம் பெற்ற ஆசிரியர் குழுவினால்

பொருளியற் கல்லூரி | BARATHY

| 2011 | யாழ்.நகரில் | இணுவிலில் | சித்தன்கேணியில் |
|---|---|---|---|
| பொருளியல் | வரதராஜன் | M.C.சுதாகரன் | M.C.சுதாகரன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் | முகுந்தன், திருக்குமரன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி | பசில் |
| தமிழ் | மீரா | பாலா | பாலா |
| இந்துநாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் | சுரேஸ் |
| புவியியல் | குமரன் | குமரன் | குமரன் |
| அளவையியல் | R.P.சர்மா | ஜெயசுரேஸ் | R.P.சர்மா |
| அரசியல் | ஜெனா | கோகுலன் | கோகுலன் |
| வரலாறு | சுதன் | சுதன் | சுதன் |
| நா.அரங்கியல் | கணேஷ் | கணேஷ் | கணேஷ் |
| கிறிஸ்தவம் | ஜோன்சன் | ஜோன்சன் | ஜோன்சன் |
| இந்துசமயம் | தரன் | தரன் | தரன் |
| விவசாயம் | விக்கி | ரூபன் | விக்கி |
| ஆங்கிலம் | ஜைசன் | ஜைசன் | ஜைசன் |
| | நிஷாந்தன் | நிஷாந்தன் | நிஷாந்தன் |

மூன்று இடங்களிலும்

ஒரே நாளில் ஆரம்பமாகின்றன.

11.04.2009 சனிக்கிழமை

[illegible] அனுமதிகளை நீங்கள் விரும்பிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு வலயப் பகுதி மீது நேற்றுத் தாக்குதல் 322 பேர் பலி; 300க்கும் அதிகமானோர் காயம்

கொழும்பு, ஏப்.10

புதுக்குடியிருப்பு மக்கள் பாதுகாப்பு வலய பகுதியில் வாழும் மக்கள் மீது நேற்றுப் படையினர் நடத்திய கனரக துப்பாக் கிச் சூடு மற்றும் ஷெல் தாக்குதல்களில் 322 பேர் கொலையுண்டனர். 300-க்கும் அதிக மானோர் படுகாயமடைந்தனர் என்று இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவை குறித்து இணையத்தளங்கள் மேலும் நேற்றிரவு தெரிவித்த விவரங்கள் வருமாறு:

'மக்கள் பாதுகாப்பு வலய' பகுதிக்குள் ஊடுருவ முயற்சித்த படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய முறியடிப்புத் தாக்குதலைத் தொடர்ந்து, பின்வாங்கிச் சென்ற படையினர் நேற்று வியாழக்கிழமை காலை 5 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை கனரக துப்பாக்கிச் சூடு மற்றும் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

'மக்கள் பாதுகாப்பு வலய' பகுதிக்குள் உள்ள அம்பலவன்பொக்கணை, இடைக்காடு மற்றும் மாத்தளன் பகுதிகளை நோக்கியே படையினர் இத்தாக்குதல்களை நடத்தினர்.

இதில் 322 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 300-க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர். அம்பலவன் பொக்கணை மற்றும் இடைக்காடு ஆகிய பகுதிகளில் மட்டும் 212 மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்- என்று அறிவிக்கப்பட்டது.

## இன்று கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.

பயணம் செய்வதற்கு பதிவுகளை மேற்கொண்டவர்களை காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையப் பகுதிக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## திங்கள்,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டம் இந்து அமைப்புகளின் ஒன்றியம் கேட்டுள்ளது.

புதுவருடப் பிறப்பு தினத்தைமுன்னிட்டு நள்ளிரவில் இடம்பெறும் பூசை வழிபாடுகளில் பொதுமக்கள் கலந்துகொள்ள வசதியளிக்கும் பொருட்டு இந்த வேண்டு கோளை விடுத்துள்ளதாக இந்து அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

## இணைத்தலைமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதியான நிலைப்பாட்டின் விளைவாக, நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் றைமோண்ட் ஜோஹான்சன் மற்றும், இலங்கைக்கான சிறப்பு சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்சன் பௌவர் ஆகியோர் போராட்டம் நடைபெற்ற பிரதமரின் அலுவலக வளாகத்திற்கு வரவழைக்கப்பட்டனர்.

அங்கு வரவழைக்கப்பட்ட பிரதிநிதிகள் ஊடாக நோர்வே அரசிடம் மூன்று அவசர கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

- அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜப்பான் ஆகிய இணைத்தலைமை நாடுகள் அவசரமாக கூட்டப்பட்டு, இலங்கை அரசை உடனடியாக போர் நிறுத்தம் செய்ய வைக்க வேண்டும்.

- அனைத்துலக கண்காணிப்பாளர்கள் போர்ப் பிரதேசத்திற்கு அனுப்பி வைக்கப் பட வேண்டும்.

- உணவு, மருந்து மற்றும் மருத்துவப் பணியாளர்கள் போர்ப் பிரதேசத்திற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

இணைத்தலைமை நாடுகள் கூட்டப் படாது போயின் அல்லது இக்கோரிக்கைகள் தொடர்பான முன்னேற்றகரமான முடிவுகள் எடுக்கப்படாது போயின், அடுத்தகட்டப் போராட்டங்கள் தொடரும் எனவும் போராட்டத்தை வழி நடத்திய இளைஞர்களும் மக்களும் தெரிவித்துள்ளனர்.

## லண்டனில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கைகளை முன்வைத்து சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என இணையத்தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன.அதில் மேலும் குறிப்பிடப் பட்டவை வருமாறு:-

சிவதர்சன் சிவகுமாரவேல் (21), குட்டி மணியம் (28) ஆகிய இரு இளைஞர்களே சாகும்வரையானஉண்ணாநிலைப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர். இவர்களுக்கு ஆதரவு தெரிவித்து அப்பகுதியில் துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன எனக் கூறப்படுகின்றது.

## ஈழத்தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் நலன் மற்றும் சுயநிர்ணய உரிமைக் கான அரசியல் வேட்கைக்கு எப்போதும் உறுதியான ஆதரவை வழங்கினார்.

ஜெயலலிதா தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்துள்ளதுடன் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நன்கு புரிந்து கொண்டுள்ளார்.

சமீபத்தைய அறிக்கையொன்றில் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான தீர்வு குறித்து அவர் கோடிட்டுக் காட்டியிருந்தார். இது மிகவும் நம்பிக்கையளிக்கும் விடயம்.

இந்தியாவின் புதிய அரசு இலங்கை இனப்பிரச்சினை மற்றும் தமிழர்களின் அபிலாஷைகள் குறித்த தனது கொள்கையை புதிய யதார்த்தங்களின் அடிப்படையில் மீளாய்வு செய்ய வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

தி.மு.க. தமிழ் மக்களுக்கு அவசியமான வழிவகைகளை அளிப்பதற்குத் தவறியுள்ளது. தமிழ் மக்கள் இலங்கை இராணுவத்துக்கு எதிராகவும் - அதேவேளை, பட்டினி மற்றும் நோய்க்கு எதிராகவும் போராடுகின்றனர். தி.மு.கவிற்கும் தமிழ்நாட்டின் ஏனைய அரசியல் தலைவர்களுக்கும் இது நன்கு தெரிந்திருக்கும் எனக் கருதுகிறேன்.

- இவ்வாறு நடேசன் தனது செவ்வியில் மேலும் தெரிவித்தார்.(த)

## முல்லை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவில் வடக்கு புறமாகவும் புதுக்குடியிருப்பில் கிழக்குப் புறமாகவும் உள்ள மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம், இரணைப்பாலை, கரையான் முள்ளி வாய்க்கால், பச்சைப்புல் மோட்டை, இடைக்காடு பகுதிகள் அடங்கிய குறுகிய கடற்கரைப் பிரதேசத்தை மக்கள் பாதுகாப்பு வலயமாக சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னர் அரசாங்கம்பிரகடனம்செய்திருந்தது தெரிந்ததே.

இம்மாம் 5 ஆம் திகதியன்று புதுக்குடியிருப்புப் பிரதேசத்தையும் கைப்பற்றிய பின்னர் மக்கள் பாதுகாப்பு பிரதேசத்தை சுற்றிவர இராணுவத்தினர் நிலை கொண்டிருந்தனர்.

நேற்று நண்பகல் அளவில் மேற்படி பிரதேசத்தை முற்றுகையிட்ட படையினர் உள்ளே நுழையும் பொருட்டு முன்னேறும் முயற்சிகளில் ஈடுபட்டதாக தெவிக்கப்பட்டது.

பாதுகாப்பு வலயத்துக்குள் உட்செல்வதற்கு அரசாங்கம் அவசரப்படப்போவதில்லை என்றும் -முல்லைத்தீவில் இறுதி இராணுவ நடவடிக்கைக்குப் படையினர் தயாராகி வருவதாகவும் மாறுபட்ட தகவல்கள் வெளியாகி இருந்தன.

பாதுகாப்பு வலயம் மீதான இறுதி நடவடிக்கையை அரசாங்கம் இப்போதைக்கு ஆரம்பித்து விடக்கூடாது என்று ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்களுக்கான உதவிப் பொதுச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் அவசர வேண்டுகோள் விடுத்த பின்னணியில் -

பாதுகாப்பு வலயம் மீதான முற்றுகை நேற்று ஆரம்பமாகி உள்ளது.

அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு வலயப்பகுதியை நான்கு முனைகளில் சுற்றிவளைத்துள்ள படையினர் அப்பகுதியை நோக்கி தீவிர முன்னகர்வு முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர் எனபடைத்தரப்பு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் பாதுகாப்பு வலயப்பகுதியை அண்டிய பிரதேசங்களில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம் பெற்றுள்ளன. இதில் படைத்தரப்புக்கு சிறியளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளதுடன் புலிகள் பெரும் இழப்புக்களுக்கு முகங்கொடுத்துள்ளனர் என்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் கூறியது.

மோதல்கள் தொடர்பில் ஊடக நிலையம் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

அண்மையில் படையினரின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் படையினருக்கு எதிராக பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் மறைந்துள்ள விடுதலைப் புலி உறுப்பினர்கள் மோட்டார் ஷெல் மற்றும் சிறு ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இதில் படைத்தரப்புக்கு சிறியளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில் தொடர்ந்தும் தமது சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்த படையினர் விடுதலைப் புலி உறுப்பினர்களின் நான்கு சடலங்கள் உட்பட ஆயுதங்கள் பலவற்றையும் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் கடற்புலிகளின் தற்கொலைப் படகொன்று, யுத்த தாங்கி போன்றவற்றையும் கைப்பற்றியுள்ளனர். இதேவேளை பாதுகாப்பு வலயப்பகுதியை நான்கு முனைகளினூடாக சுற்றிவளைத்துள்ள படையினர் பாதுகாப்பு வலயப் பகுதியை அண்மிக்க முடியாதவாறு புலிகளால் அமைக்கப்பட்டுள்ள புதிய மண்மேடுகள் சிலவற்றை இனங்கண்டுள்ளனர்.

அத்துடன் பாதுகாப்பு வலயத்துக்குள் விடுதலைப் புலிகளால் பாரியளவிலான பதுங்கு குழிகள் சிலவும் அமைக்கப்பட்டுள்ளன எனப் படைத்தரப்புக்கு தகவல் கிடைத்துள்ளது. இந்நிலையில் புலிகளின் இந்த மண்மேடுகளை உடைத்தெறிந்தவாறு பாதுகாப்பு வலயத்துக்குள் முன்னேறி அங்குள்ள பொதுமக்களை மீட்கும் நடவடிக்கைகள் படையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இருநூறுக்கும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகள் பணிப்பாளர் டாக்டர் வரதராஜா நேற்றிரவு பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

மோதல்களில் பலியான பலரது சடலங்கள் தமது புதுமாத்தளன் மருத்துவமனைக்கு வந்தன எனக் கூறிய அவர், இருந்தபோதிலும் பலியான பலரது சடலங்கள் மருத்துவமனைக்கு கொண்டுவரப்படுவதில்லைஎன்றும்தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை மாத்திரம் இருநூறுக்கும் அதிகமானோர் காயமடைந்து தமது மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்டனர் எனவும் அவர் பி.பி.ஸிக்குக் கூறினார்.

மக்கள் தங்கியுள்ள இடத்துக்கு ஒரு மைல் தூரத்துக்கு அப்பாலேயே சண்டைகள் நடக்கின்றன என்றும், ஆயினும் தமது பகுதியை நோக்கி ஏவப்படுகின்ற ஷெல்களாலேயே பல மக்கள் இறக்கின்றனர் என்றும் அவர் கூறினார். (அ-சி)

N.C.A கல்வி நிலையம்
கே.கே.எஸ். றோட், இணுவில்.
A/L 2011 கலை, வர்த்தகம்
புதிய பிரிவுகள் ஆரம்பம் 11.04.2009 சனி பி.ப. 4 மணி
ACC: N. சதீஸ் | Tam: P.பாலமுரளி
ECO: K.பிரதீபன் | Drama, H.C.: M.மயூரன்
B.St: K.பாலசபேஸ் | P.Sci: S.செந்தூரன்
Log: S.கிருஷ்ணா | His: S.ஜெயக்குமார்
Geo: S.மகிந்தன்
Note: கடந்த வருடம் 2008 O/L பரீட்சையில் கணிதம் விஞ்ஞானம் 100% சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

BRAIN POWER INSTITUTE
Gurunagar Jaffna.
2011
கலை, வர்த்தக பிரிவுகள்
ஆரம்பம்: 11.04.2009
சனி மதியம் ஒரு மணி
ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.

யாழ்.நகரில் முன்னணி ஆசிரியர் குழுவுடன்
A/L 2011
வர்த்தகப் பிரிவு
கணக்கீடு: P.பகீதரன்
பொருளியல்: N.B.கஜீதரன்
வணிகக்கல்வி: V.K.ரவீகரன்
கலைப்பிரிவு
தமிழ்: A.K.கீர்த்திராஜன்
அளவையியல்: P.கமல்
புவியியல்: S.R.பாலா
பொருளியல்: N.B.கஜீதரன்
இந்து நாகரிகம்: S.பத்மராஜா
அரசியல்: A.R.றொபின்சன்
வரலாறு: S.அருள்
நா.அரங்கியல்: S.பிரபாகரன்
கிறிஸ்தவம்: S.K.யூட்
ஆங்கிலம்: S. ஜைசன்
ஆரம்பம்: 11.04.2009
சனி காலை 8 மணி
NEC
Clock Tower Road, Jaffna

BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்
A/L 2011
கலை வர்த்தகம் கணித உயிரியல்

விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம், இல.52, ஸ்ரான்லி வீதி,யாழ்.
A/L 2011
கலை, வர்த்தக வகுப்புகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம் 12.04.2009 (8.00am.)
Eco. திரு.கஜீதரன் | Tam.திரு.குழந்தை
B.St. திரு.யசோ | Hic. திரு.பத்மராஜா
Acc. திரு.பகீரதன் | Log. திரு.S.S.சந்திரன்
Geo. திரு.சுரேன் | Hin. திரு.N.T.தரன்
Hist. திரு. தாஸ் | Plsci. திரு.ஸ்ரீரங்கநாத்
Chr.திரு.யூட் | Dra. திரு. மயூரன்
* கலை, வர்த்தக வகுப்புகளுக்கு அன்றும் இன்றும் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம் அனுமதிகளை இன்றுமுதல் பெற்றுக்கொள்ளவும்.
* A/L Day Class இற்கான புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

DMI குழுமம் விடுக்கும் முக்கிய அறிவித்தல்
A/L - 2011
கலை வர்த்தகப் பிரிவுகள்
பரீட்சை முடிவுகள் வரும்வரை பொறுத்திருந்த மாணவர்களே!
எமது நிர்வாகத்திற்கு 2ஆம் பிரிவு ஆரம்பிப்பதற்கு, ஆசிரியர்களின் நேர அட்டவணைகளைத் தயாரிப்பதற்காகவும் வகுப்பறை ஒழுங்குகள் செய்வதற்காகவும் சிறிது காலம் தேவைப்படுகின்றது.
ஆகவே எமக்கு ஒத்துழைத்து 18 ஏப்பிரல் வரை பொறுத்திருங்கள்.

GREEN PARK
சித்திரைப் புத்தாண்டுத் தினத்தன்று (14.04.2009) பூங்கா திறக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.
இல்லங்களில் நடைபெறும் மங்கள நிகழ்வுகளை 'வீடியோ மிக்சிங்' செய்துகொள்வதற்கும் சிறுவர்கள் விளையாடி மகிழும் வகையிலும் அமைதியான சூழலில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
கிறீன் பாக்
152/2, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். T.P.021 222 6563

C.C.A. சுன்னாகம்
A/L 2011 கலை, வர்த்தகம்
தமிழ் - பத்மநாதன் | வரலாறு - சுதன்
நாடகம் - கணேஷ் | விவசாயம் - கஜன்
அளவையியல்- சயந்தன் | கிறிஸ்தவம் - யூட்
புவியியல் - பாபு | ம.பொருளியல்- கஜந்தினி
இ.நாகரிகம் - சுரேஸ் | கணக்கீடு - சீலன்
அரசியல் - சந்துரு | பொருளியல் - ரூபன்
வணிகக்கல்வி- மோகன்
ஆரம்பம்: 11.04.2009 (சனி) 8.00 am

முன்பள்ளி முதல் A/L வரை உயர்ந்து நிற்கும் உயர் நிறுவனத்தில்!
யாழின் பிரபல ஆசிரியர்களின் ஒருமித்த சேவையில்!
O/L DAY CLASS
ஆரம்பம்: 16.04.2009 8 மணி
(இம்முறை வகுப்புக்கள் உயர் கல்விப் பிரிவில்)
A/L 2011
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள் நடைபெறுகின்றன.
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
மதுரம் இன்ஸ்ரிரியூட்
பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.04.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org